www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ரூபா 11/00
மே.12–18,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 152

## பின்னடைவும் பிரபாவின் திட்டமும்!

## பொறியை தகர்க்கும் புதிய முயற்சி





## ஜெயலலிதாவின் இரட்டைக் குழந்தை

## இயக்கம்:– ரஜினி



## நடிப்பு:– கலைஞர் கருணாநிதி



## சங்கவி விடு தூது

கூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## போட வேண்டிய பாலம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யாழ்-குடாநாட்டுக்குள்
கணிசமான மக்கள்
மறுபடியும்-
சொந்த இடங்களுக்கு
திரும்பியிருக்கிறார்கள்!

அதே சமயம்,
வன்னிப் பெருநிலப்பரப்பிலும்
பெருந்தொகையான யாழ் மக்கள்
அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

வன்னியில் தங்கியுள்ள
அகதிகள்
திரும்பிச்செல்ல விரும்பினாலும்
புலிகள் அனுமதிப்பார்களா
என்பது சந்தேகம்தான்!

வடபுலப் போர் முனையில்
மக்களது இடம் பெயர்வும்,
மக்கள் திரும்பிச் செல்வதும்
போரின் வெற்றி தோல்வியோடு
தொடர்புடைய பிரச்சனையாக
கருதப்படுவது கவலைக்குரியது!

திரும்பிச் செல்லும் மக்களை
அரச தொலைக்காட்சி
தினசரி காண்பித்துக் கொண்டிருக்கிறது!

மக்கள் தங்கள்
சொந்த நிலங்களுக்குத் திரும்புவது,
அவர்களது
மனங்களை அரச தரப்பு
வென்றெடுத்துவிட்டதின் வெளிப்பாடல்ல!

தங்கள் வாழ்விடங்களில் இருந்தபடி,
வருவதை எதிர்கொள்ளும்
மனநிலைதான் மக்களிடம் இருக்கிறது.

பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதாகவோ
சமாதானச் சூழல் தோன்றிவிட்டதாகவோ
திரும்பிச் செல்லும் மக்கள்
நினைத்திடப் பேவதில்லை!

நிலப்பரப்புக்களை
கட்டுப்பாட்டில் கொண்டுவருவதால்-
அங்கு மக்களும் இருப்பதால்-
அரசாங்கம் நிர்வாகம் நடத்தலாம்;
நிம்மதியான சூழல் நிலவுமா
என்பது கேள்விக் குறிதான்!

மரபுப் போர் முறையில்
புலிகளின் தற்போதைய பலம்
தாக்குப் பிடிக்கப் போதுமானதல்ல;
படைபல, கருவி பல மேலோங்குதல்
அரச படையினருக்குச் சாதகமாகவுள்ளன.

கெரில்லாப் போர்முறையில்
புலிகளின் பலம் தொடர்ந்திருக்கும்;
இனப்பிரச்சனைத் தீர்வில் புலிகள்
முக்கிய பாத்திரம் வகிக்கும்
நிலமையும் தொடரும்.

புலிகளை முற்றாக ஒழித்துவிட்டு
அதன் பின்னர் அரசியல் தீர்வு
என்ற பேச்சில்
தமிழர் தரப்பில் யாருக்குமே
நம்பிக்கையிருப்பதாகத் தெரியவில்லை!

போரை முடித்துவிட்டு
அரசியல் தீர்வு என்பதற்குப் பதிலாக
போரை முடிவுக்கு கொண்டுவர
அரசியல் தீர்வென்று
அரசு நிலைப்பாடு எடுக்குமானால்
நல்ல பலன் விளையும்!

ஜனாதிபதியின் மேதினச் செய்தி
வரவேற்கப்படத்தக்கதாக இருந்தது!
இன ஒற்றுமை குறித்தும்,
தொழிலாளர் வர்க்கம்
இன ஒற்றுமைக்கு
பாலமாகவேண்டும் என்றும்
ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்!

ஆனால், தொழிலாளர் வர்க்கத்தின்
ஒற்றுமைக்கும்
இனப்பிரச்சனைதான்,
பல சமயங்களில், குறுக்கே நிற்கிறது!

எனவே-
இன ஒற்றுமைக்கான
உண்மையான நிரந்தரப்பாலம்
அரசியல் தீர்வு மட்டும்தான்.
ஆம்! அது மட்டும்தான்!

அதனைக் கட்டி முடிக்க
புரிந்துணர்வு, உளம்திறந்த ஈடுபாடு,
சமத்துவ உணர்வு
என்பவை அவசர அவசியம்!

சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும்
முஷ்டிகளை உயர்த்துவதை விடுத்து,
நட்புக்கரம் நீட்டுவதில்
உளமார்ந்த ஈடுபாடு காட்டினால்
குட்டித்தீவு சொர்க்கமாகும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## ஆன்மீகம்

### பொருளாசை

உலகில் நாம் தேடிவைத்திருக்கின்றதும் தேடி வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்ற பொருட்கள் யாவும் அழிந்து போகக்கூடியதாகவும் இழந்து போகக் கூடியதாகவும் இருக்கின்றன. அதனால் தான் ஆண்டவர் இயேசு இவ் வுலக வாழ்க்கைக்கான பொக்கிசங்களைச் சேர்த்து வைக்காமல் அழியாத வாழ்வுக்கான பொக்கிசங்களைச் சேர்த்து வைக்கும்படி கூறுகின்றார்.

"பூமியிலே உங்களுக்கு பொக்கிசங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத்திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிசங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை." (மத் 6:19-20)

இவ்வுலக வாழ்க்கையானது அழியாத வாழ்வுக்கான ஆயத்தமாக இருக்கின்றது. மற்றவர்களுக்குத் தேவைப்படுபவை நம்மிடம் தேவைக்கதிகமாய் இருக்குமானால், அவற்றைப் பதுக்கி வைக்காமல் பகிர்ந்து கொடுப்பதும், என்னுடையதெல்லாம் உன்னுடையது என்ற மனத்தன்மையோடும் நாம் வாழ முற்படும்போது அழிகின்ற பொருட்களைக் கொண்டு அழியாத வாழ்வுக்கான பொக்கிசங்களைச் சேர்த்து வைக்கின்றவர்களாவோம்.

சகோ.செ.யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், செங்கலடி.



### நன்மை தரும் நாவடக்கம்!

ஹழரத் அபூஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்! நபி(ஸல்) அவர்கள் கூறியதாக: "அமைதியாக இருங்கள், அது சைத்தானை விரட்டி அடிக்கச்செய்யும் வழிகளுள் ஒன்றாகும். அது உங்கள் மார்க்க விஷயங்களில் உங்களுக்கு உதவி செய்யும்."

(அஹ்மத்)

"ஒரு மனிதனின் ஈமான் (இறை நம்பிக்கை) நேரிய பாதையில் இருந்திட இயலாது- அவனுடைய நாக்கு நேரிய பாதையில் இருந்தாலொழிய, அவனுடைய நாக்கு நேர்மையாக இருந்தாலொழிய- அவனுடைய இதயம் நேரிய வழியில் இருந்திட இயலாது."

(அஹ்மத்)

அப்துல்லா பின் மசுஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்த இறைவனைத்தவிர இன்னொரு இறைவன் இல்லையோ, அவனுடைய திருப்பெயரால் இந்த பூமியில் அதிகமான கால அளவு சிறைவைத்திட வேண்டியது நாவைத்தவிர இன்னொன்று இல்லை!"

(திப்ரானி)

தொகுப்பு:- சமீனா ஹுஸைன், தர்கா நகர்.
தொகுப்பு நூல்-இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்!

## கவிதைப் போட்டி இல. 149

### பரிசுக்குரிய கவிதை

****************************



#### காணவில்லை

கடல் அலையாய்
மனம் குமுறும்.
சோக வெள்ளம் புரண்டு வந்து
நிம்மதியை அடித்துச் செல்லும்!
கடல் கொண்ட பூமியைப் போல்
வாழ்க்கை காணாமல் போனதன்றோ!

அ. மத்தியூஸ், பெரியகடை வீதி, மன்னார்.

#### கரை சேர்க்க யாருமில்லை

உள்ளதெல்லாம்- போச்சுதய்யோ!!
உடல் மட்டும் தானிருக்கு!
உயிர் பிரிந்து போவதற்குள்,
ஊரை விட்டு போயிடணும்!
கடல் கடந்து போயிடலாம்,
கரை சேர்க்க யாருமில்லை!

ஹனி மக்கைசன், உவர் மலை-திருமலை.

#### கண்ணீரில்....

சிறை போன என் மகனும்,
சிதறி நிற்கும் உறவுகளும்,
சீரழிந்த நல்வாழ்வும்,
தொலைத்து விட்ட முகவரியும்,
கண்ணெதிரில் தோன்றுதடா;
கண்ணீரில் மிதக்குதடா!

ரஹீனா ரஷீன்- புத்தளம்.

#### தவிப்பு

கடலுக்குச் சென்ற மகன்.
கரை வந்து சேரவில்லை:
கடல் வலயம் என்று
கடும்பிடியாய் பிடித்தாரோ?

அ. முஹம்மது முஸ்அப்ரஸீன்-
நிந்தவூர்-03.

#### அழிவு

குண்டு மனிதனை அழிக்கிறது,
கடல் மண்ணை அரிக்கிறது,
மண்ணில் வாழ மனிதனுமில்லை-
மனிதன் வாழ மண்ணுமில்லை.

ஜோசேறேகா- கொழும்பு-13.

#### முரண்பாடு

இங்கு தண்ணீருக்கு மட்டும்
தான் பஞ்சம்!
கண்ணீருக்கல்ல...

கவிதாஞ்சலி, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.

#### வரும் வழி நோக்கி..,

தாகங்கள் தணித்திட,
மழை மேகம் வருமோ?!
சோகங்கள் தீர்த்து,
வாகைதனை தருமோ?!

தேன்மொழி- கொழும்பு-11.

#### வியப்பான மலைப்பு

தாண்டி வந்த
இடர்களைத் தான்
மீண்டும் பார்த்திந்த
வியப்போ?
இல்லை- இதை
மீண்டு கரை சேர்வோமோ
என்று தானிந்த மலைப்போ?

மனோன்மணியன் இர. சிவசாமி,
திருக்கோணமலை.

#### வருவானோ?

வெள்ளத்திலே போனானோ...?
வெடிவச்சி போட்டாகளோ...?
சிங்கார என் பேரன்
இனி சிரிச்சி
இங்கு
வருவானோ...?

திருமதி. புவனேஸ்வரி-
கோணக்கலை கீழ்ப்பிரிவு, பசறை.

#### வாழ்வே மௌனமாய்!

மண் தின்னும் உடலின்று
மலிந்திங்கு போனதம்மா!...
மனிதமும் மடிந்தின்று
வாழ்வுமிங்கு கருகுதம்மா!....
காலத்தின் கொடுமையின்று
கடலுமிங்கு மௌனமம்மா!...

தெ. றஞ்ஜனா- இறம்பைக்குளம்,
வவுனியா.

#### அலைகள்...!

மண்ணரித்துப்
போனதோ...!
கடலலை?
மனதரித்துப்
போனதோ.....
சோக அலை!

கோட்டைமுனை-வாஹிட்
ஏ. குத்தூஸ்.

#### அகதி

அக்கரை பச்சை என
இக்கரையில்..
காத்திருக்கும்
துடுப்பிலாப் படகு
நரங்கள்....!


களுதாவளையூர் திஸ்ஸ-
களுவாஞ்சிக்குடி (கி.மா)

#### வரட்சி

தண்ணீரெல்லாம்
கண்ணீரானதால்
வரண்டு விட்டதோ,
இவ்வையகம்?
வரட்சி நீங்கி
இப்புவி செழிக்க
வராதோ...
சமரசம்?

எச்.எம்.அனஸ் றஹ்மான்-
மூர் வீதி, சிலாபம்.

## கவிதைப் போட்டி இல-152




**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.05.1996.

-முகவரி-
கவிதைப் போட்டி இல.152.
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசக(ர்)சாலை

'அஸ்வதி' எழுதிய 'ஆலோசனைகள்' என்ற சிறுகதை பிரமாதமோ பிரமாதம்.

இன்றைய காலங்களில் வெறும் ஆலோசனைகளை மட்டும் சொல்லியே பாமரர்களிடம் பணம் பறிக்கும் படித்த 'புரொபெசனல்'களுக்கு நல்லதோர் அறிவு சூடு. முரசுக்கு நன்றி.

கமல் விக்ரம்- நீர்கொழும்பு.

மனதுக்கு குளிர்ச்சியூட்டியது. "இந்தியன்" கமலின் 'கெட்அப்'ஐ அற்புதமாக பிரசுரித்து அசத்தி விட்டீர்கள். போங்கள்! அவ்வளவு வித்தியாசம். அதை முரசுக்கு வழங்கிய 'வீயோடெ' அவர்களின் அசத்தலான பணிக்கு பாராட்டுக்கள். மேலும் சினி விசிட்டில் கமல்-மனிஷாவின் அழகான புகைப்படங்கள் கண்களுக்கு கவர்ச்சியூட்டின, சபாஷ்.

செல்வி.ப்ரியநேசி- கரூத்தறை (தெற்கு)

அன்புள்ள ஆசிரியருக்கு, அரசியல் தீர்வு என்பது இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் என்று சொல்லப்படுவது காதில் பூ வைக்கும் வேலைதான். அரசாங்கம் தனது நேர்மையை வெளிப்படுத்திவிட்டு அதன் பின்னர் தமிழ் மக்களின் ஆதரவை எதிர்பார்ப்பதே சரியாக இருக்கும். அரசியல் விமர்சனங்களில் முரசின் நம்பகத்தன்மையை பாராட்டியே ஆகவேண்டும்.

எம்.சதாசிவம்- கொழும்பு-5.

தமிழகத் தேர்தல் களச் செய்திகளை சுவையாகத் தொகுத்து சாறு பிழிந்து தந்துவிட்டாய்! காலத்திற்கு ஏற்ற பணிதான். சபாஷ்.

செ.கணேஷமூர்த்தி- திருகோணமலை.

ஒரே வாரத்தில் எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு உயர்ந்த பட்சமாக தகவல்களை திரட்டித்தருவதில் அக்கறையாக இருப்பது தான் முரசின் தனித்துவம் என்பேன் நான். உதாரணத்திற்கு தமிழகத் தேர்தல் செய்திகளையும் கூறலாம்.

எல்.என்.ஜுனைதீன்-கல்முனை.

முரசே உன்னால்

உனை ஒவ்வொரு ஏடாகத் திருப்பத் திருப்ப உணர்வு தழைக்கின்றது.

உனை ஒவ்வொரு வரியாகப் படிக்கப் படிக்க உள்ளம் மகிழ்கின்றது.

உன்னை முழுசாய் படிச்சி முடிச்சதும் உற்சாகம் பிறக்கின்றது.

சரவணேஸ் டெயிசி, பத்மா டெயிசி, கலவான.

ராஜேந்திரகுமாரின் 'நீ! நீயா!' தொடர் கதை ஒரே சஸ்பென்ஸ்! ரசிகனின் நடையில் கார்லோஸின் சாகஸங்கள் வியக்க வைக்கிறது. கந்தசாமி நன்றாகவே பூச்சுற்றுகிறார். பாராட்டுக்கள். சிறுகதைகளில் புது மெருகு தெரிகிறது. வாழ்த்துக்கள்.

ஷர்மிளா.ஏ.றஹீம்,
நிலாவெளி-01.

அன்பான தினமுரசே! தித்திக்கும் தேனமுதே! உன்னில் உதயமாகும் தொடர்கதையும். இலக்கிய நயமும் எம்மை வியக்கவைக்கின்றதில் உனக்கொரு சபாஷ். ஏன்? தகவல் பெட்டியில் கலர் படங்களாக போட்டால் கூடாதோ?

கலைச்செல்வன் பாரிஸ்,
பஹ்மி, கமலினி, கண்டி.

முரசுக்கும் ரஜினிமீது காதலோ? ஒரே ரஜினி புராணமாக இருக்கிறதே! நேற்று எம்.ஜி.ஆர். இன்று ஜெயலலிதா, நாளை ரஜினி. இது எப்படியிருக்கு? How is it?

ஜே.நிவாஸ்- வவுனியா.

முரசு 150ல் வெளியான யாழமீர் மர்சூன் என்பவரின் 'விடிவுக்கு முந்திய மரணங்கள்' எனும் சிறுகதை ஏற்கனவே வேறு ஒரு பத்திரிகையில் 'விடிவை முந்திய மடிவு' எனும் தலைப்பில் வெளியாகியது. ஒரு ஆக்கத்தை இரு பத்திரிகைகளுக்கும் அனுப்பி விளம்பரம் தேட முயல்கிறார்களோ என்னவோ? எங்கள் முரசும் இடைக்கிடை கவனயீனமாய் செயற்படுவது வருத்தம் தருவதாக இருக்கிறது. (பாருங்கள் ஆசிரியரே! இவரும் 'இது என்னுடைய கவனயீனத்தால் வந்த பிழை' என தபால் அட்டை அனுப்பி வைக்கப்போகிறார்') வாசகர்கள் என்ன கொக்கா?

மஹ்ஜபீன்- நீர்கொழும்பு.

*அவரது கதைகள் எதுவும் இனி மேல் முரசில் இடம்பெறமாட்டாது.*

– ஆ.ர்.

கார்லோஸ் தொடர் வாரா வாரம் விறுவிறுப்பூட்டுகிறது. பணமும், பெண் மோகமும் கார்லோஸ் என்ற இலட்சியவாதியை வில்லனாக்கி விட்டதோ?

ஆ.பவானி- ஹட்டன்.

'கலைஞர் கட்சியில் நக்மா?' என்றாலும் காதிலை பூ கந்தசாமிக்கு கலைஞர் மீது இத்தனை கேலி கூடாது. அடுத்த முதல்வர் கலைஞர் தான்! ஞாபகம் இருக்கட்டும்.

எஸ்.பாலகணபதி- காவி.

கார்லோஸ்-கார்லோஸ் என்று புலம்ப வைக்கிறாரே ரசிகன். கார்லோஸ் பற்றிய செய்திகளை நான் சிறுவயதில் பத்திரிகைகள் வாயிலாக அறிந்ததுண்டு. இப்போது சுவையான தொடராக படிக்கும்போது சுவாரசியம் தூளம்மா!

கா.ஏபிரகாம்- மட்டக்களப்பு.



மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* வ.பிர்தௌஸ், கிண்ணியா-03.
* இ.காண்டீபன், அக்கரைப்பற்று.
* ச.வசந்தகுமார், இரத்தினபுரி.
* எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
* என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
* வி.இளவழகன், சவுதி அரேபியா.
* பி.சுந்தரமூர்த்தி, வவுனியா.
* செல்வி.மா.லதா, கண்டி.
* அமுதா துரைசாமி, பொகவந்தலாவ.
* எம்.செல்வக்குமார், மஸ்கெலியா.
* ராஜன் கலாமதி, நுவரெலியா.
* திருமதி. குமுதா மனோகர், நோட்டன்பிரிஜ்.
* எம்.எம்.ஸன்பர், கிண்ணியா-06.
* ஜவானி நஸ்புள்ளா, இப்பாகமுவ.
* ரம்லானியா பரீட், அக்குறணை.
* ரி.சிவப்பிரகாசம், சேனைக்குடியிருப்பு-1.
* ஏ.எம்.முஸம்மிர், கிண்ணியா-03.
* ஜி.யேசுதாஸ், சொறிக்கல்முனை.
* ஜெ.ஜெகதீஸ்வரி, திருக்கோணமலை.
* செல்வி.சி.துமிலா, அக்கரைப்பற்று.

நாட்டு நடப்போடு கலந்து தேன் கிண்ணக் கவிதைகளும் சூடாக இருக்கின்றன. எனினும் கிண்ணத்தில் நிறைவைக் குறைக்க வேண்டாம். (கவிதைகளுக்கு இட ஒதுக்கீடு குறைக்கப்படக் கூடாது)

என்.நிர்மலா- மஸ்கெலியா.



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய பொதுத்தேர்தல்! புலிகள் கவனிக்கிறார்கள்!

# ஆட்சி மாறினால் கொள்கை மாறலாம்!

இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடையுமானால், இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்து தத்துவ கட்சியான பாரதீய ஜனதா கட்சி பதவிக்கு வருமானால் புலிகள் தொடர்பான இந்திய அரசின் கடும் போக்கில் தளர்வுகள் செய்யப்படலாம் என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### பாரதிய ஜனதா

இந்தியாவில் பாராளுமன்ற பொதுத் தேர்தலும், சில மாநிலங்களில் சட்ட சபை தேர்தல்களும் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் தற்போது இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருந்து வருகிறது.

நடைபெற்று வரும் பொதுத்தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சி தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறுவது இயலாது என்றே கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்திரா காங்கிரஸ், பாரதீய ஜனதா கட்சி, இடதுசாரிக் கட்சிகளது கூட்டணி ஆகிய மூன்று தரப்புக்கள் மத்தியில்தான் மத்திய ஆட்சி அமைப்பதில் போட்டி நிலவுகிறது.

பாரதீய ஜனதா கட்சி தீவிர இந்து மதவாத கோட்பாடு உடைய கட்சியாகும். பாபர் மசூதி தகர்ப்பின் பின்னணியிலும் இக் கட்சியே இருந்தது.

தற்போதுள்ள நிலவரப்படி பாரதீய ஜனதா கட்சியின் செல்வாக்கு கடந்த தேர்தல்களைவிட கணிசமாக உயர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

எப்படியிருப்பினும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாவிட்டாலும், அதிக ஆசனங்களைப் பெறும் தனிக்கட்சியாக காங்கிரஸ் கட்சியே முன்னிலை வகிக்கும் என்று கடைசி நேரக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு காங்கிரஸ் தனிக்கட்சியாக வந்தால், மாநிலக் கட்சிகளின் எம்.பிகளது ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் உண்டு.

காங்கிரசுக்கு அடுத்தபடியாக பாரதீய ஜனதாக கட்சி அதிக ஆசனங்களைப் பெறக்கூடும். அந்த நிலையில் இடதுசாரிக் கட்சிகளது ஆதரவு காங்கிரஸ் பக்கம் திரும்பலாம்.

எனவே மீண்டும் இந்திய மத்திய அரசில் காங்கிரஸ் ஆளும் கட்சியாகும் வாய்ப்பு உண்டு.

### மாற்றம் வரும்

அப்படியில்லாமல் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருமானால், இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம்.

இலங்கை விவகாரத்திலும் இந்தியாவின் கொள்கை மாறுபடலாம். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால், பாரதீய ஜனதா அரசு புலிகளை அரவணைக்காவிட்டாலும், காங்கிரஸ் அரசு போல விரோதம் பாராட்டாது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ராஜீவ் குடும்பத்தின் செல்வாக்கு உள்ள வரை காங்கிரஸ் கட்சி அரசு எதுவும் புலிகளை அனுசரிக்கும் போக்கை மேற்கொள்ள முடியாது.

பாரதீய ஜனதா கட்சிக்கு அத்தகைய நிர்ப்பந்தம் எதுவும் இல்லையென்று தமது அபிப்பிராயத்துக்கு ஆதரவாக சுட்டிக்காட்டுகின்றனர் அவதானிகள்.

### புலிகளுக்கு ஆதரவு

சிவசேனை இயக்கத் தலைவர் பால்தக்கரே புலிகள் இயக்கத்தையும், பிரபாகரனையும் பாராட்டி கருத்துக் கூறியிருந்தார். பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் பால்தக்கரே முக்கியமானவராக இருப்பார்.

இதேவேளை இந்திய தேர்தல் முடிவுகளை புலிகளது தலைமைப்பீடமும் ஆவலோடு கவனித்து வருகிறது.

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைவிட, இந்திய மத்திய தேர்தல் முடிவுகள்தான் புலிகள் இயக்கத்தினரின் கவனத்தைப் பெற்றுள்ளன.

## ‘தொண்டாவின் முடிவு எதிர்பார்த்ததுதான்’

### ஐ.தே.கட்சி வட்டாரம் தெரிவிப்பு

தோட்டத் தொழிற்துறை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு எதிராக கொண்டுவரவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இ.தொ.கா. கைவிட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் கட்சிகளுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் இ.தொ.கா. சார்பாக தொடர்பு கொள்ளப்பட்டது.

“நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் முதலில் இடம்பெறட்டும்; அதன் பின்னர் ஆதரவளிப்பதா இல்லையா என்பதை முடிவு செய்யலாம்” என்று ஐ.தே.கட்சி கூறியிருந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மான விடயம் ஒரு மிரட்டலாக இருக்கக்கூடும். நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தால் அமைச்சர் தொண்டமான் நிலை சங்கடமாகும். ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் தொண்டமான் தனது அமைச்சரவை சகா ஒருவருக்கு எதிராக வாக்களிப்பது சாத்தியம் இல்லை.

அமைச்சர்கள் யாவரும் அமைச்சரவை முடிவுக்கு கட்டுப்பட்டவர்கள். அமைச்சரவை சகாவுக்கு எதிராக தொண்டமான் வாக்களித்தால் அவர் தொடர்ந்து அமைச்சராக நீடிப்பது சிக்கலாகலாம்.

வேண்டுமானால் அமைச்சர் தொண்டமான் வாக்களிப்பின்போது பிரசன்னமாகாமல் இருக்கலாம். ஏனைய கட்சிகளின் ஆதரவை கோரிவிட்டு அவர் மட்டும் பிரசன்னமாகாமல் இருப்பது முறையாக இருக்காது.

எனவே-நம்பிக்கையில்லா பிரேரணை ஒரு மிரட்டல் என்பதும், கைவிடப்படக் கூடியது என்பதும் முதலில் எதிர்பார்க்கப் பட்டதுதான். “அதனால்தான் இ.தொ.காவிற்கு பிடிகொடாமல் இருந்துவிட்டோம்.” இவ்வாறு ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் முக்கிய பிரமுகருமான ஒருவர் ‘முரசு’க்கு தெரிவித்தார்.

## “தற்செயலான சம்பவங்களைப் பெரிதுபடுத்த வேண்டாம்!”

### உள்ளூர்ப் புலித்தலைவர்கள் வேண்டுகோள்!

“அவ்வப்போது தமது முன்னறிவித்தலின்றி சில சம்பவங்கள் நடந்து விடுகின்றன. பெரும் பாதிப்பை ஏற்படுத்தாத அத்தகைய சம்பவங்கள் குறித்து பெரிது படுத்திக் கொள்ள வேண்டாம்.” இவ்வாறு புலிகளின் வாகரை, மற்றும் சில உள்ளூர்ப் பகுதிகளின் தலைவர்கள் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த 05.05.96 அன்று மட்டு-வாழைச்சேனையைச் சேர்ந்த வணபிதா ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது கிரானில் வைத்து வழிமறித்து சில புலி இயக்க உறுப்பினர்கள் “இது அரசாங்கம் உங்களுக்குப் பாவனைக்குத் தந்த மோட்டார் சைக்கிளா?” என்று கேட்டு அவரை அவ்விடத்தில் சிறிது நேரம் செல்லவிடாது தடுத்து வைத்தனர். “இது எனது மறைப்பணிக்கானது எனது சொந்த சைக்கிள்” என்று பிதா கூறிய பின்னர் அவர் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி பிதா உடனடியாகச் சென்று வாகரைப் பகுதி உள்ளூர்த் தலைவரிடம் அறிவித்த பொழுது அவர் “இத்தகைய சிற்சில சம்பவங்களைப் பெரிது படுத்திக் கொள்ள வேண்டாம்” என்று கூறியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெளிநாட்டு உதவிநிறுவனம், மற்றும் கூட்டுறவுச் சங்கம், தனியார் வாகனங்களைப் புலிகள் கடத்திச் சென்றிருந்த போதும் இவ்விதமே அச்சம்பவங்களைப் பெரிது படுத்திக் கொள்ளவேண்டாம் என்றே புலிகள் கூறியதாகத் தெரியவருகிறது.

## யாழில் தொலைபேசி வசதி

### பாடசாலைகள் இயங்க நடவடிக்கை

யாழ்-குடாநாட்டில் விரைவில் தொலைபேசி வசதிகள் செய்யப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. தபாற்சேவை வழமை போல இயங்கத் தொடங்கியுள்ளது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நாஷனல் வங்கி போன்றவை தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

யாழ் நகரில் உள்ள கடைகள் பலவும் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நகருக்கு வெளியேயும் சில்லறைக் கடைகள், தேநீர் கடைகள் என்பன திறக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றிருந்த மக்கள் தினமும் சாரி சாரியாக யாழ்ப்பாணத்துக்குள்-தமது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் இருந்து பல வருடகாலமாக இடம்பெயர்ந்திருந்த மக்களின் ஒரு பகுதியினர் சமீபத்தில் திரும்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பொன்னாலைப் பாலம் வழியாக காரைநகர் பகுதி மக்கள் அங்கு செல்வதற்கு படையினர் அனுமதித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தை தினமும் கூடத் தொடங்கியுள்ளது. வெங்காயம், தேங்காய், வாழைக் குலைகள், மரக்கறி வகைகளின் வியாபாரம் நடந்து வருகிறது. சனக் கூட்டமும் அதிகளவில் காணப்படுகிறது.

யாழ்-பொது மருத்துவ மனையில் சிங்கள நர்சுகளும் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவர்கள் தமிழில் நோயாளர்களோடு உரையாடுகிறார்கள்.

ஒரு சில பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. விரைவில் சகல பாடசாலைகளையும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகரிலும், யாழ்ப்பாணத்தின் வேறு சில பகுதிகளிலும் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளன. கிட்டத்தட்ட பத்து வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பொலிசார் நடமாடுகின்றனர்.

யாழ்-அரச செயலகம் சூரியக்கதிர் 1 இராணுவ நடிவடிக்கையின்போது புலிகளால் தகர்க்கப்பட்டுவிட்டது. அதனால் வேறு ஒரு கட்டிடத்தில் யாழ் அரச செயலகம் இயங்கிவருகிறது.

அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் அடிக்கடி கூடி கலந்து பேசி தமது வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

## கனடாவில் மேதினம்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சுவிஸ் கிளையினரால் வழமைபோல் இவ்வருடமும் சூரிச் மாநகரில் மேதின ஊர்வலத்தை நடாத்தியுள்ளனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரதிநிதிகளும், மற்றும் சுவிஸ் தமிழர் சங்கம், சக இயக்கப் பிரதிநிதிகளும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்.

*உலகத்தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட தேசமக்களே! ஒன்று சேருங்கள், பாட்டாளி வர்க்கம், பாராளும் வர்க்கம் அரசியல் தீர்வை அவசியம் வழங்கு, தமிழா! ஒன்று சேர், அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்களுக்கே போன்ற கோஷங்கள் இவ்வூர்வலத்தில் எழுப்பப்பட்டது.

## பதுக்கல் வியாபாரிகள் கொண்டாட்டம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் இம்மாத முதல் வாரத்திலிருந்து எரிபொருட்கள் அனுமதி முறையில் வழங்கப்பட்டுவருகின்றன. பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களுக்குப் பிரதேச செயலாளரிடமிருந்து அனுமதி பெறவேண்டியுள்ளது.

மட்டக்களப்புக்கான புகையிரத சேவை கிரமமாக நடைபெறும் வரை இவ்விதமான எரிபொருள் அனுமதி முறை நடைமுறையில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருளுக்கு அனுமதிகள் பெற வேண்டிய கட்டாயம் ஒரு புறமிருந்தாலும் பதுக்கல் வியாபாரிகளுக்கு எரிபொருள் நிலையத்தவர்களின் ஆதரவும், எரிபொருள் வழங்கலும் தாராளமாக இருந்து வருகிறது. இதனைத் தடுக்க வேண்டிய அதிகாரிகள் கண்டும் காணாததுபோல் நடந்து கொள்வது பொது மக்கள் மத்தியில் அதிக வெறுப் புணர்வுகளைத் தோற்றுவித்துள்ளது.

## பேச்சு மூலம் தீர்வு காண்க

### வடக்கிலிருந்து மற்றொரு மகஜர்

யுத்தத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களது ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13 வருடங்களாக இடைவிடாது தொடரும் யுத்தத்தால் ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். கணக்கிட முடியாதளவுக்கு சொத்துக்கள் இழக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து, தபாற் சேவை, தொலைபேசி, மின்சாரம் போன்ற சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே-இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வை காணவேண்டியது அவசியமாக உள்ளது. இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சூரியக்கதிர் 2 நடவடிக்கைக்கு முன்னர் யாழ் மாவட்ட வெகுஜன ஒன்றியங்கள் சார்பாகவும் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டிருந்தது.

இதேவேளை நெதர்லாந்திலும், டென்மார்க்கிலும் உள்ள இலங்கைத் தமிழர்கள் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்கள். 8.05.96 வரை டென்மார்க் பாராளுமன்றம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழ் மக்களது பிரதிநிதிகளாக புலிகளை அங்கீகரிக்க வேண்டும். போர் நிறுத்தப் படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

## ‘இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இணைப்பு அடிப்படை’

### தெரிவுக்குழு முன் தமிழ்கட்சிகள் வலியுறுத்தும்

(நமது நிருபர்)

பாராளுமன்ற தெரிவுக் குழு முன்பாக அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதல்லவா. அதனையடுத்து ஐந்து தமிழ் கட்சிகள் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி தமது கருத்தை ஒரே குரலில் தெரிவிக்க உள்ளன.

வடக்கு-கிழக்கு இணைப்பு இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வின் அடிப்படையாக இருக்க வேண்டும். அந்த விடயத்தில் எவ்வகையான விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என்று தமிழ் கட்சிகள் சார்பாக உறுதியாக தெரிவிக்கப்படும் என்று அக்கட்சிகளது வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ஈரோஸ், ரெலோ, ஈ.பி.டி.பி ஆகிய ஐந்து தமிழ் கட்சிகளுமே தமது கருத்தை ஒரே குரலில் வலியுறுத்தவுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தனித்தனியாக தமது நிலைப்பாட்டை முன்வைக்கவுள்ளன.

அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுக்கலாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது.

புதிய எல்லை வகுப்பது தொடர்பாக அரசியல் தீர்பு யோசனையில் எதுவும் தெளிவாகவில்லை. நாம் ஏன் அவசரப்பட்டு கருத்துச் சொல்ல வேண்டும்’ என்று கேட்கின்றன ஏனைய தமிழ் கட்சி வட்டாரங்கள்.

## முஸ்லிம் தாய் புலிகளுக்குக் கடிதம்!

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் பொலிஸ்காரரான தனது மகனை விடுவிக்குமாறு தாய் புலிகளின் வாகரைப் பகுதிப் பொறுப்பாளருக்கு கடிதம் அனுப்பி வைத்தார். இதுபற்றி புலிகளிடம் அறிந்து வரச் சென்ற வெளிநாட்டு நிறுவனத்தினரிடம் சம்பந்தப் பட்ட பொலிஸ்காரரை தாம் கொன்று விட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று அத்தாய் கண்ணீருடன் கூறினார். தனது மகன் கொல்லப்பட்டிருப்பார் என்பதை ஏற்க தனது மனம் மறுப்பதாகவும் அவர் புலம்புகிறார்.

இப்பொலிஸ்காரர் மோட்டார் சைக்கிளில் தனியாகச் சென்று கொண்டிருக்கும் போதே புலிகளால் கடத்தப்பட்டார். அவரது மோட்டார் சைக்கிளைப் புலிகள் தம்வசமே வைத்துள்ளனர்.

## இத்தாலியில் ஆர்ப்பாட்டம்

இத்தாலியிலும், கனடாவிலும் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிகள் நடைபெற்றுள்ளன. புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களால் நடத்தப்பட்ட இப் போராட்டங்களில் யுத்த நிறுத்தமே முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

28.05.96 அன்று இத்தாலியில் உள்ள பலர்மோரில் ஆர்ப்பாட்ட பேரணி நடை பெற்றது. கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் கனடிய வெளிவிவகார அமைச்சின் காரியாலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

இதேவேளை டென்மார்க்கில் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட டென்மார்க் பிரதம மந்திரியிடம் அங்குள்ள தமிழ் மக்கள் சார்பாக மகஜர் கொடுக்கப்பட்டது. மேடையில் வைத்து மகஜரைப் பெற்றுக் கொண்ட பிரதம மந்திரி, மகஜரில் உள்ள விடயங்களை கவனத்தில் கொள்வதாகத் தெரிவித்தார்.

## தமிழகத்தில் யார் அலை?

தமிழகத் தேர்தலில் இரு கட்ட வாக்களிப்புக்களும் முடிவடைந்துவிட்டன.

தி.மு.க.கூட்டணியின் அலை வீசிய போதும் ஜெயலலிதா தலைமையிலான கூட்டணியும் கணிசமான வாக்குகளைப் பெற்றிருப்பதாக இறுதி நேரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டமன்ற தேர்தலில் எக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்றும், அவ்வாறான நிலை வந்தால், வை.கோபால்சாமி அணியின் ஆதரவை அ.தி.மு.க. நாடக்கூடும் என்றும் ஜெயலலிதாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தி.மு.க.கூட்டணி தமது வெற்றி உறுதி என்று தெரிவித்துள்ளது. கலைஞர் இப்போதே முதல்வர் தோரணையில் இருக்கிறார்.

## ஓய்வுபெற விரும்புவோருக்கு போனஸ்

### அரசு யோசித்து வருவதாகத் தகவல்

(கண்டி நிருபர்)

அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் கடமை புரியும் ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோர் தாம் விரும்பிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லக் கூடிய வாய்ப்பை அரசாங்கம் விரைவில் வழங்க உள்ளது.

அதிகாரிகளினதும் ஊழியர்களினதும் எண்ணிக்கை சகல திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் மேலதிகமாக இருப்பதால் பல வருடங்களாக அரசாங்கம் விரயங்களைச் சுமந்து கொண்டே செல்கிறது. அளவுக்கு மிஞ்சியோர் இவ்வாறு பணிபுரிவதால் திணைக்களப் பணிப்பாளர்கள் பலரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதை அரசின் கவனத்திற்கும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் 44/90 இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தின் கீழ் கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் சுமார் ஒன்றரை இலட்சம் ஊழியர்கள் தாமாகவே விரும்பி பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றனர். இவ்வாறு சென்றவர்களுக்கு விசேட போனஸ் கொடுப்பனவும் வழங்கப்பட்டன. இதே போன்று ஏனைய திணைக்களங்களிலிருந்தும் இந்தச் சலுகையைப் பயன்படுத்தி பலர் வெளியேறினர்.

இதே போன்ற ஒரு சலுகையை இன்றைய அரசும் வழங்க முன் வந்துள்ளது. இவ்வடிப்படையில் 10,20,30 வருடங்கள் என்ற வகையில் சேவையாற்றியோரும் தாமாகவே விரும்பி ஓய்வு பெறலாம் என்ற ஆலோசனையை அரசாங்கம் விரைவில் முன்வைக்க உள்ளது.

இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கவும் அளவுக்கு அதிகமான ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் புதிய ஆலோசனை உதவும் என தொழிற் சங்கவாதி ஒருவர் கண்டியில் தெரிவித்தார்.

இத்தகைய ஓய்வுத்திட்டம் தொடர்பாக எத்தகைய அரசியல் நிர்ப்பந்தங்கள் எதுவுமே இருக்காது எனவும் பொது நிருவாக அமைச்சும் தெரிவித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## தோட்ட வைத்தியசாலையில் மொழிப் பிரச்சனை

ஸ்பிறிங்வெளி ஏழு பிரிவுகளைக் கொண்ட பெரிய தோட்டமாகும். இதில் 15,000க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இத் தோட்டத்தில் சகல வசதிகளுடன் வைத்தியசாலை ஒன்று இருந்தது. இருந்தும் இப்பகுதி மக்களுக்கு சிறந்த சுகாதார சேவை கிடைப்பதில்லை. இவ் வைத்திய சாலையை அரசாங்க வைத்திய சாலையாக மாற்றவேண்டும், அவ்வாறு மாற்றினால் இப்பகுதியில் வாழ்கின்ற தோட்ட பகுதி மக்களுக்கு சிறந்த சுகாதார சேவை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடன் 1995ம் ஆண்டு இவ் வைத்தியசாலை அரசமயமாக்கப்பட்டது.

மக்கள் மிக ஆவலுடன் சிறந்த சுகாதார சேவையை எதிர்பார்த்து காத்து நின்றனர். ஆனால் விளம்பரப் பலகை மாத்திரம் ஸ்பிறிங்வெளி தோட்ட அரசாங்க வைத்தியசாலை என்று அழகாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று பாஷையிலும் உள்ளது. ஆனால் இவ் வைத்தியசாலையில் ஒரு தமிழ் உத்தியோகஸ்தரோ தமிழ் தெரிந்த உதவியாளர்களோ இல்லை. இப்பொழுது தோட்ட மக்கள் இங்கு சென்று தங்களுடைய நோயை தமிழில் கூறினால் அதை விளங்கிக் கொள்ள முடியாது தடுமாறுகின்றனர்.

அண்மையில் புதிதாக தாதிமார் உதவியாளர்களை தெரிவு செய்தனர். இருந்தும் ஒரு தமிழர் கூட தெரிவு செய்யப்படவில்லை. ஏன் இந்த சோதனை? இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், மகாணசபை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனித்து இம்மக்களின் அடிப்படை பிரச்சனையை தீர்த்துவைப்பார்களா?

**வ.அந்தனீஸ், ஸ்பிறிங்வெளி தோட்டம்.**

## மன்னார் வைத்தியசாலை கவலைக்கிடம்!

(மன்னார் நிருபர்)

மன்னார் அரசினர் ஆதாரவைத்திய சாலையில் சாதாரண தொழிலாளர் முதல் டாக்டர்கள் வரை கடும் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இதனால் நோயாளர் சீரான சேவையினைப் பெற முடியாமலும் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் சிறந்த சேவையை வழங்க முடியாமலும் கஷ்டப்படுகின்றனர்.

தற்போது இங்கு 2 டாக்டர்களும் 20 தாதிமாரும், 2 மருந்தாளர்களும் ஒரு இரத்தம் பரிசோதிப்பவரும், எம்.எஸ்.எப். சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரும் இருக்கின்றனர்.

தொழிலாளர் தரங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இல்லை. பல் வைத்தியர் கிடையாது. எக்ஸ்ரே படம் பிடிப்பவர் இல்லை. 17 டாக்டர்களுக்கும் 45 தாதிமாருக்கும் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

ஏதாவது துறையில் விஷேட நிபுணத்துவம் பெற்ற ஒருவர் கூட இல்லை. சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு அவசியமாகத் தேவைப்படும் மயக்க மருந்துகள், வாயுச் சிலிண்டர்கள் என்பன வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட மன்னார்ப் பகுதியில் வாழும் 33 ஆயிரம் மக்களும் பெருநிலப்பரப்பிலுள்ள மக்களும் நாட வேண்டிய இவ் வாதார வைத்தியசாலை எந்த வசதியும் இன்றி காணப்படுகிறது. கிராமிய வைத்தியாலைகளை விடவும் குறைந்த தரத்திலேயே இது இயங்கி வருகிறது.

## ‘அறுவைப்பாளர்கள்’ கவனிக்க

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தற்போது வர்த்தக சேவையை வேறாக்கி நடாத்துவதில் எம் போன்றவர்கள் சந்தோசப்படும் அதே வேளையில் அறிவிப்பாளர்களின் அறுவையையும் தாங்க வேண்டியிருப்பது வேதனையாகும்.

குறிப்பாக காலையில் கடமைக்கு செல்லவிருக்கும் இடைவெளி நேரத்தை ஆனந்தமாக களிக்க எண்ணினால், அது பெரும் பாடாகிறது. பாடல்கள் ஒலிபரப்பாகும் முன்னர், அவற்றிற்குரிய படங்களையோ, பாடியவர்களின் பெயரையோ, பாடல் எழுதியவரின் பெயரையோ குறிப்பிடுவதை விடுத்து, பாடல்களின் முதல் அடிகளையும், புரியாத விளக்கங்களையும் (துங்களுக்கு மட்டும் புரிந்த) அறிவிப்பாளர்கள் கூறுகின்றனர். பாடல் முதல் அடிகள் அவசியமற்றது. பாடலில் வந்துதானே ஆகும்! மேலும் இந்த அறுவைநேரங்களை குறைத்தால் மேலதிகமாக பாடல்களை ஒலிபரப்பி எம்போன்றவர்களை மகிழ்விக்கலாம்.

அதிகமாக இந்த ‘அறுவை’கள் எம் போன்ற பழைய பாடல் இரசிகர்களை கவலையில் ஆழ்த்துகிறது. எனவே தினமுரசு ஊடாக இந்த ‘தொப்பி’ யைத் தருகிறோம். அளவான அறிவிப்பாளர்கள் போட்டுக் கொண்டு, வரும் காலங்களில் வர்த்தக சேவையை வளம் பெறச் செய்யவும்.

**தேவகடாட்சம்-தனலட்சுமி-மல்லிகைத் தீவு.**

## மாணவர் இல்லாத பாடசாலை

(திருமலை நிருபர்)

பிள்ளைகள் எவரும் இல்லாமல் ஒரு பாடசாலை நடத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் கல்விப் பகுதியாளர்.

இந்த அதிசயப் பாடசாலை கும்புறுப்பிட்டிக் கிராமத்தில் இருக்கிறது. இங்குள்ள மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 90ம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 450 பிள்ளைகள் படித்தார்கள். கலவரம் காரணமாக இடம் பெயர்வுகள் நடந்தபோது பாடசாலையும் மூடப்பட்டு விட்டது.

எனினும் அரசின் மீள் குடியேற்ற நடவடிக்கைகாரணமாக 1996ஜனவரி 10ல் இப்பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது. மாணவர்கள் எவருமில்லாத பாடசாலைக்கு ஒன்பது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

குடிநீர் வசதி கூட இல்லாத நிலையில் ஆசிரியர்கள் அரட்டை அடித்துவிட்டு கால்மைல்தூரம் போய்த் தண்ணீர் கொண்டு வந்து சாப்பிட்டு விட்டு வீடு திரும்புகிறார்கள்.

செல்வாக்குள்ளவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட, தற்போது 3 பெண் ஆசிரியைகள் உட்பட ஐவர் கடமை(?) யாற்றுகிறார்கள்.

இதில் சிரிப்பு என்வென்றால் எந்தத் திணைக்கள அதிகாரியும் இன்றுவரை இப்பாடசாலையை எட்டிக் கூடப் பார்க்கவில்லையாம்.

## தடுப்பூசியை மறந்து போனார்கள்

வடக்கு கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தித் திணைக்களத்தில் ஏராளமான தடுப்பு மருந்துகள் தேங்கிப் போயுள்ளன.

கால் நடைகளுக்கான நோய்த்தடுப்புக் கென வழங்கப்படும் இம் மருந்துகள் உரிய காலங்களில் பயன்படுத்தப் படாதநிலையில், காலாவதியான பிறகும் பத்திரமாகத் திருக்கோணமலை அலுவலகத்தில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இம் மருந்துகள் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டியவை. உள்ளூரிலாவது பயன்படுத்தி இருக்கலாம். இரண்டும் நடக்காமல் பழுதடைந்து போயுள்ளன. இவற்றை இனிமேல் கழிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார் மேற்படி திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர்.

## ரஜினிக்கு திரை! மறைக்கப்பட்ட தகவல்கள்

நடிகர் ரஜினிகாந்த் அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பும்போது, விமானத்தில் வைத்து ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகையாளருக்கு பேட்டி கொடுத்தார்.

பேட்டியை எடுத்தவர் ஒரு பெண் நிருபர். பேட்டியளித்தபோது ரஜினிகாந்த் கறுப்பு லேபிள் மதுப் புட்டியை கையில் வைத்திருந்தார். இடைக்கிடையே அதிலிருந்து மது அருந்திக் கொண்டார்.

பத்திரிகை நிருபருக்கு அதனை மறைக்க வேண்டும் என்று ரஜினி போலித்தனம் காட்ட விரும்பவில்லை. மது அருந்துவது தவறு என்று அவர் நினைக்காததுதான் அதன் காரணம்.

அமெரிக்காவில் தங்கியிருந்தபோது அங்குள்ள சூதாட்டவிடுதிகளுக்கும் சென்றிருந்ததாகவும் ரஜினி பேட்டியில் சொல்லியிருந்தார்.

இந்த விபரங்கள் அனைத்தும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பேட்டியில் இடம் பெற்றிருந்தன. ரஜினியும் அதில் எதனையும் மறுக்கவில்லை.

இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான ரஜினியின் பேட்டியை தமிழக பத்திரிகைகள் அனைத்தும் மறுபிரசுரம் செய்திருந்தன. ஆனால், ரஜினி விமானத்தில் மது அருந்திக் கொண்டுவந்தார்,அமெரிக்காவில் சூதாட்ட விடுதிகளுக்குச் சென்றார் என்ற விபரங்களை மட்டும் தமிழக பத்திரிகைகள் தாமாகவே தணிக்கை செய்திருந்தன.

இது தொடர்பாக தமிழ் நாட்டின் பிரபல பத்திரிகையாளர் ‘ஞானி’ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“தமிழக பத்திரிகைகள் ரஜினிக்கு போலியான இமேஜை ஏற்படுத்த முற்படுகின்றன.

தமிழர்களது அரசியலில் அரசியல்வாதிகளுக்குள்ள மது அருந்தாதவர், சிகரெட் புகைக்காதவர் என்ற போலி நெறிகளை ரஜினிமீதும் சுமத்திப்பார்க்கின்றன.

எம்.ஜி.ஆருக்கு இருந்த அதே இமேஜை ரஜினிமீதும் பூசுவதுதான் தமிழகப் பத்திரிகைகளது நோக்கம் என்று ஞானி கூறியுள்ளார்.

ரஜினி பத்திரிகையாளர் மாநாட்டில் கூட சிகரெட் புகைத்தபடிதான் இருப்பார். இமேஜ் பற்றி கவலைப்படுபவராக அவர் இருந்தால் நரைத்த தாடியுடனும், மொட்டைத் தலையுடனும், சோடாப்புட்டி கண்ணாடியுடனும் பொது நிகழ்ச்சிகளில் தோன்றியிருக்க மாட்டார்.

ரஜினி ரஜினியாகவே இருக்க விரும்புகிறார். ‘எனது பலம் இது. பலவீனம் இது. இவற்றோடு என்னை ஏற்றுக் கொள்ள முடிந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள்’ என்பது போலவே ரஜினி நடந்து கொள்கிறார்.

ஆனால் சில பத்திரிகைகள்தான் ரஜினியை அவரது இயல்புகளுக்கு மாறாக சித்தரிக்க முற்படுகின்றன.

அதனால்தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் பேட்டியில் ரஜினி பற்றிக் குறிப்பிடப்பட்டதையும், ரஜினியே சொன்ன விடயத்தையும் வெட்டிவிட்டு பேட்டியை தமிழில் பிரசுரித்தார்கள்.

தமிழக அரசியலின் போலி நெறி என்பது என்ன?

**தமிழக அரசியல் களம்**



அரசியல்வாதிகள் குடிக்காலம், கூத்தடிக்காலம். அதையெல்லாம் திரைமறைவில் வைத்துக் கொள்ளலாமே தவிர, வெளியே மதுவைத் தொடாத, மங்கைகளை நாடாத, சிகரெட் புகைக்காத உத்தம சீலர்களாக காட்டிக்கொள்ள வேண்டும்.

இந்தப் போலி நெறிகள் உருவாவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களே முக்கிய காரணம் எனலாம்.

கருணாநிதி கறுப்புக்கண்ணாடி போட்டுக் கொண்டதால் அவரது வயது தெரியாமல் இருக்கிறது. எந்தவொரு பகிரங்க கூட்டத்திலும் சரி, பொது நிகழ்ச்சிகளிலும் சரி கருணாநிதி அந்தக் கறுப்புக் கண்ணாடியை கழற்றியதே கிடையாது.

அதேபோல எம்.ஜி.ஆர். தனது தலையில் உள்ள வழுக்கையை மறைக்க தொப்பியும், கறுப்புக் கண்ணாடியும் எப்போதும் அணிந்திருந்தார்.

ஆனால், ரஜினி அவ்வாறான இமேஜ் பராமரிப்பில் துளியும் அக்கறை காட்டவில்லை.

அப்படியிருந்தும் ரஜினிக்கு உள்ள மாபெரும் செல்வாக்கு குறையவே இல்லை.

போலி நெறிகளையும், இமேஜையும் காப்பாற்றினால்தான் மக்களிடம் செல்வாக்கு இருக்கும் என்பதை ரஜினி மாற்றிக் காட்டியிருக்கிறார்.

அப்படியானால் ரஜினியை மாபெரும் சக்தியாக உருவாக்கியது எது?

ஜெயலலிதா எதிர்ப்பு அலைதான்! ஜெயலலிதா எதிர்ப்பு அலை தமிழ் நாடெங்கும் எழுந்தது.

ஜெயலலிதாமீதான வெறுப்பு நீறு பூத்த நெருப்பாக இருந்தது.

அந்த அலைக்கு தலைமைதாங்கக் கூடிய வசீகரமும், வலிவும் உள்ள ஒருவர் தேவையாக இருந்தது.

பல இலட்சக்கணக்கான ரசிகர்கள் பலம் உள்ள ரஜினி அந்த எதிர்ப்பு அலையில் முன்னால் வந்தபோது அமோக வரவேற்புக் கிடைத்தது.

இதே ரஜினி, இதே ஜெயலலிதாவை எதிர்த்து ஐந்து வருடங்களுக்கு முன் பேசியிருந்தால் கவனிக்க ஆளிருந்திருக்காது.

1989ல் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்திருந்தது.

ஜானகி அணிக்கு வாக்களிக்குமாறு சொன்னார் ரஜினி. அவரது ரசிகர்களே அவரது முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். தேர்தலிலும் ஜானகி அணி படுதோல்வி கண்டது. ஜானகிகூட வெற்றி பெற இயலவில்லை.

காலத்திற்கு தேவையான கருத்தை, மக்கள் மத்தியில் நன்கு பிரபலமான ஒருவரான ரஜினி பிரதிபலித்தபோது, அவரது கருத்துக்கு மதிப்பும் கிடைத்தது.

ரஜினி குடிப்பார், சிகரெட் புகைப்பார், என்பதெல்லாம் மக்களுக்குத் தெரியும். அதற்காக மக்கள் அவரை புறக்கணிக்கப்போவதில்லை.

ஏனெனில், ஜெயலலிதா எதிர்ப்பு அலைக்கு தலைமை தாங்க ஒருவர் தேவை. அது ரஜினிதான் என்றான பின்னர் அவரை அவரது பலம் பலவீனங்களுடன் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டனர்.


பெண்களின் ஆடை தைக்கும் சிறிய நிலையத்திற்கு நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தேவை. ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: 103/2, Lewis Place, Negombo.

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம் , ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் “ஹிஸ்டீரியா” ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மே 19 முதல் 28 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST..) COLOMBO 11. T.P. 436383, 436390 ஜுன் 3, 4, Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், மே 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

**ஆயுள் கண்ணாடி ஜாதகம்**

உங்கள் ஜாதக அமைப்பின்படி எம் வீட்டில் எந்த கிரகம் நிலை பெற்றுள்ளது. அதன் முன் விளைவு பின் விளைவு எப்படி அமையும்? கணவர் மனைவி எப்படி அமைய வாய்புள்ளது? அத்துடன் மாத வாரி பலனுடன் நீங்கள் எழுதி எடுக்க இந்த பாரத்தை பூர்த்தி செய்து ரூ.1500 மணி ஆடர் செய்தால், பிற ஜோதிடர் உதவியின்றி நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே ஜாதகத்தை கண்ணாடி போல் தெரிந்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்கள் ரூ. 2750 அனுப்பவும்

முழுப்பெயர்–
பிறந்ததிகதி–
நேரம்.................... காலை–மாலை.............
பிறந்த மாவட்டம்.....................
ஆணா பெண்ணா..........................
தமிழ், ஆங்கிலம், மலையாளம், சாஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, அரபு எந்த மொழியில் தேவை.......................

முகவரி: ஜோதிட மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி. கே. சாமி [J.D.G.A.N.]J.P.
பி. கே. சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிட்டட்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு–13
கொழும்பு தொலை பேசி இல. 01-342463-342464-344831-344832
நுவரெலியா தொலை பேசி இல-052-2508-3093-3336-3570

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

**விளம்பரப் பகுதி**

FM. 99 வானொலியில் திரு. பீ.கே சாமி அவர்களின் ஜாதக ரீதியான- தெட்டத் தெளிவான பலனையொட்டி எண்ணற்ற கேள்வி பதில் வந்து குவிவதால், அவசரமானவர்கள் நேரில் வரவும்.

**மெய்ஞான ஜோதிட சிந்தாமணி**

மாதந்தோறும் வெளிவரும் திரு.பி.கே. சாமி அவர்களின் வெளியீடான மெய்ஞான ஜோதிட சிந்தாமணியை பெற முடியாதவர்கள் வருடசந்தா ரூ.240 அனுப்பினால் உங்கள் கை வசம் கிடைக்கப்பெறும். மெய்ஞான ஜோதிட சிந்தாமணி தொடர்பாக விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவைப்படுகின்றனர். தேவைகளுக்கு

ஆசிரியர்
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

**“மந்திரயோகி” மாந்திரீக மருத்துவம்**



காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஜந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம், YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-



YOGI.DR.SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE
KALLADY-BATTICALOA (P.O)
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.

**மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி**



ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரிக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம். ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கெரண்டி கார்டும் அனுப்பப்படும்.

33 வருட மலையாள மாந்திரிக மக்கள் ஒளி உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.பி.கே.சாமி (J.D.G.A.N)JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவட் லிமிடெட்
இல.162, மே பீல்ட் ரோட்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 01342463-342464-344831-344832
-FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
-FAX-0094523093

[illegible]




படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு உடனடித் தந்திரங்கள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

வட-புலப் போர்முனையில் ஏற்பட்டுள்ள பின்னடைவில் இருந்து மீள்வதுதான் புலிகளுக்கு முன்னுள்ள உடனடிப் பிரச்சனையாகும்.

யாழ்-குடாநாட்டை மறுபடியும் தமது தளப்பிரதேசமாக புலிகள் மாற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் சமீப எதிர்காலத்தில் சாத்தியமானதல்ல.

கெரில்லா போர் முறை மூலமாக புலிகள் படைத்தரப்புக்கு தொல்லை கொடுக்கலாம். ஆனால் யாழ்-குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றும் அளவுக்கு பாரிய சமர்களை நடத்தக்கூடிய பலம் இல்லை.

அதேவேளை-படைத்தரப்பும், அதன் தலைமையும் தொடர்ந்து போரிடும் கொள்கையை கடைப்பிடிக்குமானால், யாழ்-குடாநாட்டில் புலிகளது கெரில்லாத் தாக்குதல்களும் பாரிய தாக்கம் கொடுப்பவையாக அமைய முடியாது.

ஏனெனில், படைத்தரப்பு தொடர்ந்து போரிடும் கொள்கையை கடைப்பிடித்தால், வன்னி நிலப்பரப்பிலும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம்.

அவ்வாறான நிலையில் தமது தலைமைப் பீடத்தை பாதுகாப்பதில் புலிகளது அணிகளின் பிரதான கவனம் குவிந்திருக்கும்.

எனவே, யாழ் குடாநாட்டுக்குள் பாரிய தாக்குதல்களில் ஈடுபட முடியாமல் போகலாம்.

புலிகளைப் பொறுத்தவரை தளப்பிர தேசங்களை இழப்பதைவிட, தமது தலைமைப் பீடத்தை பாதுகாப்பதுதான் உயிர்நாடியான பிரச்சனை.

வன்னியை மக்கள் அடர்த்தியான பிரதேசமாக மாற்றுவதற்கு புலிகள் நினைப்பதில் இராணுவரீதியான காரணமும் உண்டு.

இடம் பெயர்ந்த மக்கள் நிறைந்த பூமியாக வன்னி இருக்குமானால், அங்கு படை நடவடிக்கைகளை உக்கிரப்படுத்த அரசாங்கம் தயங்கவேண்டியிருக்கும்.

ஆனால், வெளியுலகில் புலிகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய நாடுகளோ, பலமான சக்திகளோ இல்லாத நிலையில் சர்வதேச அபிப்பிராயங்கள் தொடர்பாக அரசாங்கம் கவலைப்படத்தேவையில்லை என்றாகி விட்டது.

எனவே, புலிகளது பலம் தவிர வேறெந்தக் காரணியும் படை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடும் என்று கருத இடமில்லை.

ஆனால், புலிகளது பலம் எத்தகையது? அதனை எதிர்கொள்வது எப்படி? போன்ற விடயங்களை சூரியக்கதிர் 1, சூரியக்கதிர் 2, மூலம் படைத்தரப்பு நாடி பிடித்தறிந்து விட்டது.

புலிகளது கெட்ட நேரமோ, அல்லது படைத்தரப்பின் அதிஷ்டமோ, கனரக ஆயுதங்களோடு வந்த புலிகளது ஆயுதக்கப்பல் மாட்டுப்பட்டதால், படைக்கல பலத்தை புலிகள் அதிகரிக்க முடியாமல் போய் விட்டது.

எனவே, மரபுச் சமரில் படைத்தரப்பு மிக உறுதியான நிலையில் இருக்கிறது.

மரபுச் சமரில் ஈடுபடும் ஒரு நிரந்தர இராணுவத்தை, இன்னொரு நிரந்தர இராணுவம்தான் எதிர்கொள்ள முடியும்.

எந்தவொரு நிரந்தர இராணுவத்துக்கும் படைக்கலங்களே முக்கியமானவை. படைக்கலங்கள் என்று சொல்லும்போது நவீன யுத்தத்தில் கனரக ஆயுதங்களும், டாங்கிகளும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன

ஆட்பலக் குறைவைக்கூட கனரக ஆயுத பலத்தால் ஓரளவு ஈடுசெய்துவிடலாம்.

குறிப்பாக, இஸ்ரேலின் இராணுவ வெற்றிகளுக்கு அதன் ஆட்பலத்தைவிட, ஆயுத பலம்தான் பெரிதும் உதவுகிறது.

படைக்கலங்கள் வாங்குவதானால் நிதி பலம் மட்டும் போதாது.

சமரை எதிர்நோக்கும் பலமான நிரந்தர இராணுவத்தை கட்டியமைக்க வேண்டுமானால், பிறிதொரு நாட்டின் உதவியும் மிக முக்கியமாகும்.

அவ்வாறு பிறிதொரு நாடு உதவியளிக்காத நிலையில், சொந்த நிதியை வைத்தே ஆயுதங்கள் வாங்கவேண்டிய நிலை ஏற்படும்.

புலிகளுக்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் திரட்டப்படும் நிதி மற்றும் வெளிநாட்டில் புலிகள் சார்பாகச் செய்யப்படும் வியாபாரங்களில் இருந்து பெறப்படும் நிதி போன்றவைதான் பிரதான நிதி ஆதாரமாக உள்ளன.

உள்நாட்டில் திரட்டப்படும் நிதியில் கணிசமானளவு இயக்கப் பராமரிப்புத் தேவைகளுக்கே சென்றுவிடும்.

இந்நிலையில் பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான கனரக ஆயுதங்கள், ஆட்டிலறிகள், அவற்றுக்கான ஷெல்கள் என்பவற்றை பெருந்தொகையாக கொள்வனவு செய்வது புலிகளது சக்திக்கு மீறின செயலாகவே இருக்கும்.

எனினும், இயக்கக் கட்டுப்பாடு, திட்டமிட்ட அணுகுமுறைகள் காரணமாக தமது சொந்த நிதி வசதியை புலிகள் பெருக்கிக்கொள்ள முடிந்தது.

அதனால்தான் சொந்தமாக கப்பல்கள் வாங்கவும், ஆயுதங்கள் கொள்வனவு செய்யவும் முடிந்தது. எனினும் அந்த நிதிபலம் ஒரு வரையறைக்கு மேல் இல்லையென்பதால் கனரக ஆயுதங்களை கொள்வனவு செய்வது புலிகளுக்கு கஷ்டமாக இருந்தது.

சூரியக்கதிர் 1 இன் பின்னர்தான் எப்படியாவது கனரக ஆயுதங்களில் ஒன்றாக ஆட்டிலறிப் பீரங்கிகளை வாங்கியே தீர வேண்டும் என்ற முடிவுக்கு புலிகள் வந்தனர்.

புலிகளது வெளிநாட்டுக் கிளைகளும் பகிரங்கமாகவே ஆட்டிலறி ஷெல் வாங்கப் பணம் திரட்டின.

'ஹொரிசோன்' கப்பலில் புலிகளுக்காக கொண்டுவரப்பட்ட ஆயுதங்களில் ஆட்டிலறிப் பீரங்கிகளும் இருந்தன.

அவற்றையும் இழக்க முடியாத நிலையில் கப்பல் மாட்டிக் கொண்டதுதான் புலிகளுக்கு பெரும் நஷ்டமாகியது.

'ஹொரிசோன்' கப்பல் மாட்டியிருக்காவிட்டால் சூரியக்கதிர் 2 இல் ஆட்டிலறிகளை புலிகள் பயன்படுத்தி எதிர்த் தாக்குதல் தொடுத்திருக்கக் கூடும்.

ஆனாலும், தாராளமாக பயன்படுத்தக் கூடிய அளவில் ஷெல்களை கொள்வனவு செய்வது இயலுமா என்பது சந்தேகம்தான்.

ஆக, எப்படிப்பார்த்தாலும் நேரடிச் சமரில் ஈடுபடக்கூடியவகையில் புலிகள் தமது நிரந்தர இராணுவத்தை உருவாக்க வேண்டுமானால், புலிகளது நிதி பலம் மட்டும் போதாது. பிறிதொரு சக்தியின் உதவிக்கரம் தேவை.

தற்போதைய நிலையில் வெளியுலகில் புலிகளைவிட, அரசாங்கத்தின் செல்வாக்குத் தான் கொடி கட்டிப் பறக்கிறது.

போர் நிறுத்தத்தை முதலில் முறித்தவர்கள் என்று அரசாங்கம் புலிகள்மீது சுமத்தும் குற்றச்சாட்டு சுலபமாக எடுபடுகிறது.

அதுபோதாது என்று, "அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்து விட்டோம்" என்று அரசாங்கம் மார்தட்டிக்கொள்வதற்கும் வெளியுலகில் வரவேற்புக் கிடைத்துள்ளது.

மொத்தத்தில் வெளியுலகம் முன்பாக, 'புலிகளை இராணுவரீதியில் சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை' என்ற அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அரசாங்கம் வெற்றி பெற்றுவிட்டது.

சர்வேதச அபிப்பிராயத்தை வென்றெடுப்பதில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குள்ள சாதகங்கள் காத்திரமாக உள்ளன.

★ இலங்கையின் இனப்பிரச்சனை தோற்றம் பெற்றதுக்கோ, வளர்ச்சியடைந்ததுக்கோ அவர் காரணமல்ல என்ற அபிப்பிராயம், "எனக்கொரு சந்தர்ப்பம் தந்தால் என்ன?" என்னும் அவரது வாதத்திற்கு வலுவூட்டுகிறது.

★ பதவிக்கு வந்த கையோடு போரை நிறுத்தி பேச்சை ஆரம்பித்தவர் என்பதால், புலிகள் இன்னமும் காலம் கொடுத்து அமைதி காத்திருக்கலாம் என்ற கருத்து ஏற்பட்டுள்ளது.

★ இந்தியாவோடு புலிகளுக்குள்ள முரண்பாடு தீவிரமடைந்துள்ளமை, இந்தியாவை புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஒத்துழைக்கத் தூண்டியுள்ளது.



★ புலிகளுக்கும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடும் சாதகம்தான். புலிகள் ஏனைய தமிழ் அமைப்புக்களது இருப்பையும் விரும்பவில்லை. தனி அதிகார நோக்கத்தோடு செயற்படுகிறார்கள் என்று வெளியுலகில் சொல்ல முடிகிறது.

> **புதிய தாக்குதல்களில் புலிகள் ஈடுபடும்போது, சாதகம் பாதி பாதகம் மீதி.**
>
> **சாதகம் – தாக்குதல் திறனை வெளிப்படுத்துவது,**
>
> **பாதகம் – அரசாங்கத்தை புதிய நடவடிக்கைக்கு தூண்டுவது.**

★ அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்தது மூலம், அதனை அமுல் நடத்தக்கூடிய சாத்தியத்தை அவருக்கு வழங்கிப்பார்க்கலாம் என்ற அபிப்பிராயம் வெளியுலக இராஜதந்திரிகளிடம் ஆழமாகியுள்ளது.

★ சூரியக்கதிர் 2 இன் பின்னர் யாழ் குடாநாட்டில் மக்கள் திரும்பத் தொடங்கியுள்ளனர். அங்கு சிவில் நிர்வாகத்தை ஆரம்பித்து, தமிழ் மக்களுக்கு இயல்பான வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுப்பதே தமது நோக்கம் என்று பிரசாரம் செய்ய முடிந்துள்ளது.

★ அவரது வசீகரமான புன்னகை. 'இவரையா குற்றம் சாட்டுகிறார்கள்?' என்று வெளியுலகின் புருவம் சந்தேகத்தால் உயருகிறது.

ஆக, வெளியுலக அபிப்பிராயம் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை உருவாக்குமளவுக்கு இல்லை.

அதே சமயம், வெளியுலக இராஜதந்திரிகள் மட்டத்தில் ஒரு சாரார் மத்தியில் உள்ள வேறொரு கருத்தும் நிலவுகிறது.

'புலிகள் பிடிவாத குணமுள்ளவர்கள். அதனால் அவர்கள் முழுமையான பலத்தோடு உள்ளபோது சமரச ஏற்பாடுகளுக்கு அவர்களை இணங்கவைக்க முடியாது. எனவே, அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளால் புலிகளது பலத்தை ஒரு வரையறைக்குள் கொண்டுவந்த பின்னர்தான் பேச்சுக்கு ஏற்ற சூழல் தோன்றும்', என்று அவர்கள் கருதுகின்றனர்.

அதாவது, புலிகள் முற்று முழுதாக வீழ்ச்சியடையவும் கூடாது. அதே நேரம் முழுப் பலமான நிலையிலும் இருக்கக்கூடாது.

புலிகள் முழுதாக வீழ்ச்சியடைந்தால் பின்னர் அரசாங்கத்தை தீர்வுக்கு உடன்பட வைக்கும் நிர்ப்பந்தம் இல்லாமல் போகும் என்பதுதான் அவர்களின் அபிப்பிராயம்.

இந்தியாவில் உள்ள இராஜதந்திரிகள் சிலர் மட்டத்திலும் அவ்வாறன அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது.

அவற்றை ஜனாதிபதி சந்திரிக்காவும் ஓரளவு உணர்ந்திருப்பதாகவே தோன்றுகிறது.

அதனால்தான், "புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டுவரவே இராணுவ நடவடிக்கை" என்று புத்திசாலித்தனமாகக் கூறியிருந்தார்.

ஆனால், புலிகளை போரில் முழுதாக முறியடிக்க முடியும் என்று அரசாங்கம் கருதுமானால் முடிவுவரை செல்லவே முயலும்.

தன்மீது நிர்ப்பந்தம் செலுத்தக்கூடிய ஒரு சக்தி இல்லாமல் போவதையே அரசாங்கம் விரும்பும்.

அதுதவிர, புலிகளுக்கு எதிரான வெற்றிகளை பெறுவதில் படைத்தரப்பு கணிசமான தூரம் முன்னேறிவிட்டால், பின்னர் ஒரு முடிவு வரை விட்டுப்பிடித்தேயாக வேண்டும்; இல்லாவிட்டால் படைத்தரப்புக்கு நம்பிக்கை யீனங்கள் உருவாகலாம்.

எனவே, புலிகளோடு நடைபெறும் போரில் சாதகங்களும், பாதகங்களும் [illegible] சமமாக உள்ள நிலையில் மட்டும்தான் அரசாங்கம் போர் நிறுத்தம், புலிகளோடு பேச்சுவார்த்தை என்ற கட்டம் பற்றி இனிமேல் சிந்திக்கும்.

அதனால்தான் போர்நிறுத்தம் பற்றி வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் விடுக்கும் கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் மூச்சே விடவில்லை.

சூரியக்கதிர் 2ற்கு முன்பாக யாழ்-குடாநாட்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை செயலாளருக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டது. நிபந்தனையற்ற போர் நிறுத்தம் வேண்டும் என்பதும் அதில் ஒரு கோரிக்கை.

அது தொடர்பாகக்கூட அரசாங்கம் ஒரு பொருட்டாகவே காட்டிக்கொள்ளவில்லை.

புலிகள் போர் நிறுத்தம் செய்யாமல் இருந்தபோதே, "போர்நிறுத்தம் செய்துவிட்டார்கள் புலிகள். ஒட்டுக் கேட்டு அறிந்தோம்." என்று அரச தரப்பு சொன்ன காலமும் இருந்தது.

அப்போது புலிகளோடு போரைத் தவிர்க்க வேண்டிய அவசியம் அரசுக்கு இருந்தது. அரசின் அந்தப் பலவீனத்தை புரிந்துகொண்டே புலிகளும் கடும் நிலைப்பாட்டில் உறுதியாக நின்றனர்.

இப்போது, வெகு ஜன ஒன்றியங்கள், வெளிநாட்டு தமிழர் அமைப்புக்கள் மூலமாக புலிகள் போர் நிறுத்தக் கோரிக்கையை எழுப்புகின்றனர்.

போர் தொடர்ந்தால் தாம் பலவீனமாவோம் என்று புலிகள் நம்புவதால்தான் போர் நிறுத்தம் கேட்கின்றனர். ஆகவே புலிகள் பலவீனமான நிலையில் உள்ளனர் என்று அரசாங்கம் கணிப்புச் செய்கிறது.

எனவே, பலவீனமான நிலையில் இருந்து புலிகள் மீள்வதற்கு முன்னர் முந்திக்கொள்ள நினைக்கிறது அரசாங்கம்.

எதிரியிடம் ஒரு வாளைக் கொடுத்துவிட்டு "என்ன தயாரா?" என்று கேட்டு சண்டை பிடிக்க யுத்தம் ஒன்றும் சினிமா அல்ல.

எதிரியின் கையிலிருந்து வாள் எப்போது நழுவும் என்று காத்திருந்து பாய்வதுதான் யுத்ததந்திரம்.

எனவே, அரசும் சரி, புலிகளும் சரி தாம் பலமான நிலையில் உள்ளபோது போர் நிறுத்தம் செய்து மறுதரப்பு வாளை எடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்க விரும்பப்போவதில்லை.

அப்படியானால், மூன்றாவது சக்தி ஒன்று தலையிட்டு, "வாளைக் கீழே போடுங்கள்" என்று சொல்ல வேண்டும்.

தற்போதைய நிலையில் அவ்வாறான ஒரு தலையீட்டை புலிகளும் விரும்புகிறார்கள்.

குறிப்பாக, வெளிநாடுகளில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள் போரை இக்கட்டத்தில் நிறுத்துவதுதான், புலிகளது பலத்தை தக்கவைத் துக் கொள்ள உதவும் என்று நம்புகிறார்கள்.

தமக்கு கௌரவக் குறைச்சல் இல்லாத வகையில் அவ்வாறான ஒரு ஏற்பாட்டுக்கு புலிகளது தலைமைப்பீடமும் தயாராகவே இருப்பதாகத் தோன்றுகிறது.

அப்படியில்லை என்றால் புலிகளது சர்வதேச செயலகப் பொறுப்பாளர் அன்டன் ராஜா வாய் திறந்திருக்கமாட்டார். மூன்றாவது சக்தி ஒன்று தலையிடுவதை ஆதரித்து அன்டன் ராஜா கருத்துச் சொல்லியிருப்பது, தலைமையின் விருப்பத்தை அறிந்துதான்.

போர் நிறுத்தக் கோரிக்கையை புலிகள் நேரடியாக முன்வைக்க விரும்பமாட்டார்கள்.

போர் நிறுத்தத்தை முறித்துவிட்டு இப்போது தாமே போர் நிறுத்தம் கேட்டால், அது பலவீனத்தின் அறிகுறியாகக் கொள்ளப் படலாம்.

எனவே, வடக்கில் உள்ள மக்களது விருப்பமாகவும், வெளியுலகில் உள்ள தமிழ் மக்களது எண்ணமாகவும் போர்நிறுத்தக் கோரிக்கையை வலுப்படுத்தியாக வேண்டும்.

அதேவேளே, தமது இராணுவரீதியிலான பலம் மங்கிவிடவில்லை என்று காட்டுவதற்கு வசதியான முனைகளில் தாக்குதல்களும் நடத்தியாக வேண்டும்.

தற்போதைய நிலையில் புலிகளின் உடனடித் தந்திரம் மேற்கண்ட இரண்டும் தான்.

புலிகளை மரபுப் போரில் வென்றாலும் கூட இலங்கையில் தாம் நினைத்ததைச் செய்யக்கூடிய அமைப்பாக புலிகள் இருப்பார்கள். எனவே-போரை விட போர் நிறுத்தம்தான் பிரயோசனமானது என்று வெளியுலகம் கருதக்கூடிய வகையில் புலிகள் தமது நடவடிக்கைகளை திட்டமிடக் கூடும்.

அதேவேளை, அத்தகைய நடவடிக்கைகள் புலிகளை மேலும் அழுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி, படைத்தரப்பின் புதிய நடவடிக்கைகளுக்கும் களம் திறந்து விடலாம்.

புலிகள் மீதான வெற்றிச் செய்திகளையே அரசாங்கம் தனது அரசியல் செல்வாக்குக்கும் நம்பியிருக்கிறது.

அந்த வெற்றிகளை கேள்விக்குள்ளாக்கும் புலிகளது பதிலடி நடவடிக்கைகள் அராசாங்கத்திற்கு பாதகமாகிவிடும். எனவே, மீண்டும் தமது வெற்றியை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கையில் இறங்கும்.

அதனைத் தடுக்க புலிகளிடம் பலம் இல்லாது போனால், மற்றுமொரு பின்னடைவை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

புலிகளது நடவடிக்கைகள் தலைநகர் வரை நீண்டமை அரசுக்கு பலத்த அடியாக அமைந்தது உண்மை.

அதேசமயம், புலிகள் அடிமடியிலேயே கைவைக்கத் துணிந்துவிட்டார்கள் என்பதால், புலிகளுக்கு எதிரான விரைவான பாரிய நடவடிக்கை அவசியம் என்று அரசாங்கத்தைத் தூண்டியும் விட்டன என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆக, பலம், பலவினத்தைப் பொறுத்தே இராணுவ நடவடிக்கைகளது பாதகங்களும், சாதகங்களும் அமைகின்றன.

புலிகளை நேரடியாக அழுத்தக்கூடிய தாக்குதல்களை முன்னர் படைத்தரப்பால் செய்ய முடியாதிருந்தது. அதனால் புலிகளது தாக்குதல்களுக்கு பதிலாக, புலிகள் மீது பதிலடி நடத்தி தமது கரத்தை அரசு உயர்த்திக் காட்ட முடியவில்லை.

இப்போது நிலமை வேறு. புலிகளின் ஒரு தாக்குதல் வெற்றியாக அமைந்தால், பின்னர் படைகளும் புலிகளை நோக்கிச் சென்று தாக்குதல் நடத்துகின்றன.

எனவே, புதிய தாக்குதல்கள் நடத்துவதன் மூலம் சாதகமும் உண்டு. பாதகமும் உண்டு என்ற நிலையில் புலிகள் உள்ளனர்.

இதுதான் தற்போதுள்ள சூழல்.



வெளியேறும்போது வாழைகளைப் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டுதான் சனம் போனது. திரும்பி வந்து பார்த்தா குலை போட்டு நிறைவாக நின்று வரவேற்புக் கொடுத்தனவாம் வாழைகள். வாழைக்கு பாய்ச்சிய நீர் வீண் போகவில்லை. வாழைக் குலைகள் திருநெல்வேலி சந்தையிலை கலாதியாக குவிந்து கிடக்காம். சந்தையும் களைகட்டியிருக்குதாம். யாழ்ப்பாணம் ஐஞ்சு மாசத்துக்குப் பிறகு முகம் கழுவின மாதிரித் தெரியுதாம். எண்டாலும் பழைய நிலைக்கு வர நாள் பிடிக்கும்தானே.

புத்தகத்துக்கை ரெண்டு எழுத்தார் டப்பு டுப்பு டப்பு கொண்டு திரியுற சீசன் தொடங்கியிருக்குதாம். அயலகப் படை நிண்ட காலத்திலும் புத்தகத்துக்கை வைச்சுத்தான் ரெண்டு எழுத் தார் கொண்டு திரிஞ்சவை. புத்தகத்தை உள்ளே அளவாக ஆழ மாக வெட்டி டப்பு டப்புவை வைச்சிருக்கிறது. தேவைப்பட்டால் வெளியே எடுத்து டப்பு-டப்பு. புத்திசாலித்தனம்தான். ஆனாலும் உண்மையான புத்தகம் கொண்டு போறவைபாடும் அல்லோ கஷ்டமாயிடும்.

'வாங்கோ, வாங்கோ' எண்டு யாழுக்குள் வாஞ்சையாக வரவேற்றாலும், வரக்கூடாத ஆக்களும், அழையாத விருந்தாளிகளாக வந்துடுவினமோ எண்ட யோசனையும் பச்சை உடையாருக்கு இருக்கும்தானே. பார்வைக்கு வாட்ட சாட்டமாக துடியாட்டமாக உள்ள ஆக்களைப் பார்த்தால் சந்தேகம் வரத்தான் செய்யும். இதுதான் தருணம் எண்டு மொட்டைக் கடிதங்களும் மெத்த அதிகமாகலாம்.

## அதிரடி அய்யாத்துரை

தலைநகரில் இந்த முறை 'வெசாக்' கொண்டாட்டம் களை கட்டியிருந்தது. கொண்டாட்டங்களில் தமிழ் குடி மக்களின் பங்கையும் மறுக்கவியலாது. ஏன் தெரியுமோ? கொண்டாட்டத்துக்காக நடந்த கலெக்சனுக்கு தமிழ் சனமும் தாராளமாகக் கொடுத்து உதவினவையாம். அது மட்டுமோ: கொழும்பில் வெசாக் பந்தல் ஒன்றை யாழ்ப்பாணத் தமிழ் ஆள் ஒருவர்தானே திறந்துவைச்சவர். நாட்டில் நல்ல சகுனங்களும் இடைக்கிடையே தெரியத்தான் செய்யிது. சரியாக பாவிக்கத்தான் தலைவர்களுக்கு மனசேயில்லையாக்கும்.

இணைப்பு இல்லாத தீர்வை ஏற்கக்கூடாது எண்டு கூட்டான கட்சித் தலைமைக்கு செயற்குழு கோரிக்கை. இதுதான் செய்தி. அப்படியானால் என்ன அர்த்தம். தலைமை மட்டத்தில் யாரோ ஒருவர் அல்லது சிலர் இணைப்பு இல்லாத தீர்வை ஏற்க நினைக்கினம் எண்டு செயற்குழுவே பயப்படுகிறது. ஈழம் கேட்ட தலைவர்கள் இணைப்பைக்கூட கைவிடக்கூடிய நிலைக்கு போயிட்டினம். எல்லாம் நீல வண்ண அறிவுச் செல்வத்தின் யோசனையால் வந்த வினை.

தாங்கள் ஆதரவு கொடுத்தால், அதனை வைத்து மலையக தனித்துவத் தலைவர் அதிகாரபீடத்தோடு பேரம் நடத்துவார். அதுதான் 'பார்க்கலாம்' எண்டு சொல்லி நழுவியதாம் பச்சைக் கட்சி. தனித்துவ தலைவர் விடயத்தில் நம்ப நட, நம்பி நடவாதே பொலிசியைக் கடைப்பிடிக்கிறாராம் பச்சைக் கட்சி இளம் தலைவர். மாமா யோசனை சொல்லியிருப்பாரோ?

மலையக தனித்துவக் கட்சியின் முன்னாள் செயலாளர் செல்லமானவர் கடும் கோபத்தில் இருக்கிறாராம். தனது மேதினக் கூட்டத்தில் குழப்பும் செய்யத் தூண்டியது தனது முன்னாள் தலைவரின் பேரன்தான் எண்டு சொல்லுகிறாராம்.

யாழுக்கு பத்திரிகையாளர்களை மட்டுமல்ல, தமிழ் கட்சியினரையும் அழைத்துச் செல்லவில்லையாம். தமிழ் கட்சியினரை அழைத்துச் செல்வதும் ஒன்றுதான், பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்வதும் ஒன்றுதான் என்று நினைத்திருப்பினமோ?

பாரிசில் உள்ள தமிழ் பத்திரிகை ஒன்று தவறான செய்தி போடும் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காமல் இருக்கிறதாம். அண்மையிலும் ஒரு செய்தி. கொழும்பு கொள்ளுப் பிட்டியில் இரண்டு தமிழ் வர்த்தகர்களை படையினர் கைது செய்தனர். விசாரித்தனர். ஆனால் பாரிஸ் பத்திரிகை கைது செய்தது படையினர் என்பதை திரித்து பொய் செய்தி வெளியிட்டது. யார்மீது கரிசனமோ?

சுள்ளென்று இருக்கிறதோ இந்தக் கவிதை; படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

"போருக்கும்–காதலுக்கும்
ஒரு ஒற்றுமை.
இரண்டையும்
எளிதாக துவக்கிவிடலாம்.
நிறுத்துவதுதான்
மிகவும்
கடினமான செயல்!"

இது கவிதை என்று நம்பியவர்கள் மன்னிக்கவும். மெங்கன் என்னும் அறிஞர் சொன்ன அர்த்தமுள்ள கருத்தே அது.



படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### ஆயுதம் கேட்டார்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது புலிகள் தடைவிதிக்குமுன்னர் மேலும் சில சம்பவங்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் சென்று கொண்டிருந்தனர். அச் சமயம் கண்ணிவெடிகள் வெடித்தன. அதிஷ்டவசமாக சிறு காயங்களுடன் தப்பிவிட்டார்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். புதைத்து வைத்த கண்ணிவெடிதான் வெடித்தது.

தற்செயலாக அமுக்கப்பட்டதா, அல்லது வேண்டுமென்றே வெடிக்க வைத்தார்களா என்பது தெரியவில்லை.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ்-மாவட்ட கமிட்டி உறுப்பினர்கள் சிலர் அதனை தமது திட்டமிட்ட நடவடிக்கை என்றே இயக்கத்திற்குள் பிரசாரம் செய்தனர்.

தம்மை புலிகளுக்கு எதிரான அதிதீவிரவாதிகளாக காண்பிப்பதுதான் அவர்களின் நோக்கம். டக்ளஸ் தேவானந்தா அணியினர்

'அராஜகவாதிகள் ஒழிக' என்ற கோஷம் விண்முட்ட எழுந்தது.

புலிகளும் அந்த ஊர்வலத்தை பார்வையிடத் தவறவில்லை.

ஊர்வல இறுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேசியவர்கள் வீசியவார்த்தைகளும் நெருப்புத் துண்டுகள்தான்.

கூட்டத்தில் உரையாற்றிய பெண்களும் காரமாகவே பேசினார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெண்கள் அமைப்பில் ஆரம்பத்தில் இருந்தே தீவிரமாக இயங்கியவர்களில் ஒருவர் 'ராஜி அக்கா.'

அவரும் கூட்டத்தில் உரையாற்றினார். "அராஜகவாதிகளுக்கு பெண்கள் பாடம் புகட்ட வேண்டும். அவர்களது முகாம்களை முற்றுகையிட வேண்டும்." என்றார்.

இன்னொரு பெண் உறுப்பினர் (பெயர் ஞாபகமில்லை) பேசுகையில், "அராஜகவாதிகளுக்கு எதிராக பெண்கள் ஆயுதம் ஏந்த வேண்டும்: வேறு வழியில்லை" என்றார்.

நெருப்பு தினம் நடந்து முடிந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் போக்கைப் பார்த்தவர்கள் 'புலிகளுக்கு சமமான அமைப்

அப்படியிருந்தும் சில பொறுப்பாளர்கள் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிச் சென்றனர். முகாம்களுக்கு முன்பாக புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளையும் அகற்றி விட்டனர்.

இவ்வாறான சூழலில் புலிகள் தாக்கிய போது திருப்பித் தாக்கும் முயற்சியே நடைபெறவில்லை.

புலிகளுக்குக்கூட அது ஆச்சரியமாகவே இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்களை தாக்குவது: சண்டை கடுமையாகி நீடித்தால்

இதேநேரம் சென்னையில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். வட்டாரத்திடம் இயக்க மோதல் தொடர்பாக கேட்கப்பட்டது. "சண்டை நடக்கிறது. கபூர் களத்தில் நிற்கிறார்" என்று சொன்னார்கள்.

### கபூர் கைது

அதே நேரம் சாவகச்சேரியில் கபூர் புலிகளால் கைதுசெய்யப்பட்டார். கபூர் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளரான பின்னர்தான் முரண்பாடுகள் அதிகரித்தன.

அவர் மூலமாக தமிழ்நாட்டுக்கு செய்தி அனுப்பினார்கள். "மன்னாரில் நாம் நிற்கிறோம். உடனடியாக ஆயுதங்கள் தேவை. அனுப்பிவைத்தால் இங்கு புலிகளை சமாளிக்க முடியும்." என்று மார்ட்டின் தொலைத் தொடர்பு சாதனம் மூலம் பத்மநாபாவுக்கு தகவல் அனுப்பினார்.

உடனே ஆயுதங்கள் சகிதம் படகு ஒன்றில் முக்கிய உறுப்பினர்களையும் மன்னாருக்கு அனுப்பிவைத்தார் பத்மநாபா.

படகு வருவதை எதிர்பார்த்து மன்னார் கடற் கரையில் காத்திருந்தனர் புலிகள் இயக்கத்தினர்.

படகு கரைக்கு வந்தது. புலிகள் முற்றுகையிட்டனர். படகில் இருந்த உறுப்பினர்கள் அதனை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போயினர். அவர்களை கைது செய்தனர் புலிகள்.

மலையகத்தில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப்.இயக்கத்தில் இணைந்தவர்களில் முக்கியமான ஒருவர் அன்பரசன். சிறந்த போராளி.

படகில் கைது செய்யப்பட்டவர்களில் அன்பரசனும் ஒருவர். கைது செய்யப்பட்டவர்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆயுதங்களையும் படகுகளையும் புலிகள் கைப்பற்றினார்கள். தமிழகக் கரையில், படகு மன்னாரில் சேர்ந்த செய்தியை அறிய தொலைத் தொடர்பு சாதனம் அருகே காத்திருந்தனர்.

மன்னாரில் இருந்து புலிகள் தொடர்பு கொண்டனர். "உங்கள் கையிலிருந்து நழுவிய ஆயுதங்களை நாங்கள் எந்திக் கொண்டோம்" என்று சொன்னார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பால் பெண்களுக்காக வெளியிடப்பட்ட சஞ்சிகை 'செந்தணல்'. அதன் அட்டைப் படத்தில் இடம்பெற்றிருந்த கவிதை வரிகளைத்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கே திருப்பிச் சொன்னார்கள் புலிகள்.

தமக்கு ஒத்துழைப்புக் கொடுத்தமைக்காக ஈ.பி.ஆர்.எல்.எஃப். மன்னார் பொறுப்பாளர் மார்ட்டினை பின்னர் விடுதலை செய்தனர் புலிகள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் மத்திய கமிட்டி உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்று, அங்கிருந்து தமிழ் நாட்டுக்கு சென்றுவிட்டார்.

ரமேஷ், செழியன், இப்ராகீம், தாஸ் ஆகியோரும் கொழும்பு சென்று தமிழ் நாட்டுக்குச் சென்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சிலர் ஈரோசிடம் சென்று தமக்குப் பாதுகாப்பு தருமாறு கேட்டனர்.

அப்போது பாலகுமார் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். 'அடுத்தது தம்மையும் புலிகள் தடை செய்து விடுவார்களோ' என்று பாலகுமாருக்கு யோசனை.

அதனால் பாதுகாப்பு கொடுக்க முடியாத நிலையை சூசகமாக உணர்த்தினார். அதேசமயம் முகாமுக்கு சென்றுவிட்டவர்களை பராமரிக்கவும் தவறவில்லை.

## ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது பாய்ச்சல்

புலிகளோடு இரகசியமாகத் தொடர்பு வைத்திருக்கின்றனர் என்று பிரசாரம் செய்தவர்கள்தான் அந்த உறுப்பினர்கள்.

அவர்களில் ஒருவர் தர்ஷன். யாழ்-பிராந்தியக் கமிட்டி உறுப்பினர். புலிகளுக்கு எதிரான பிரசாரத்தில் முன்னணிப் பாத்திரம் வகிப்பவராக காட்டுவதற்கு மிகச் சிரமப்பட்டார்.

தமது இயக்கத்தின் பலம், பலவீனம் தெரியாமல் வெறும் வாய்வீச்சுக்களில் இவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் பத்மநாபா தம்மிடம் ஆயுதம் கேட்டதாக பிரபாகரனிடம் சொன்னார்கள் இந்திய உளவுப்பிரிவான 'றோ' அதிகாரிகள் சிலர்.

சொன்னவர்கள் அத்தோடு நிறுத்தவில்லை. "பத்மநாபா ஏன் ஆயுதம் கேட்டார் தெரியுமா?" என்று கேட்டனர். "ஏன்?".

"உங்கள் இயக்கத்தால் பிரச்சனை வரலாம். உங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க ஆயுதம் தேவை என்று கேட்கிறார்" என்றனர் அதிகாரிகள்.

அதிகாரிகள் சொன்னதை வைத்து யோசித்தார் பிரபாகரன். 'ஈ.பி.ஆர்.எல்.எஃப். முந்துவதற்கு முன்பாக நாம் முந்திக்கொள்ள வேண்டும்' என்று நினைத்திருப்பார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கிட்டுவுக்கு தகவல் வந்துவிட்டது. "நாபா றோவிடம் ஆயுதம் கேட்கிறார். வசதியைப் பார்த்து ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பையும் கவனிக்கலாம்." என்று உத்தரவு வந்துவிட்டது.

டக்ளஸ் தேவானந்தா தமிழ்நாட்டுக்குச் சென்றபின்னர், பத்மநாபா அணியினரின் நடவடிக்கைகள் தொடர்பாக கிட்டுவுக்கு கடும் கசப்பு ஏற்பட்டிருந்தது.

ரமேஷை சந்தித்த கிட்டு தனது கசப்பை தெரிவித்திருந்தார். 'இப்போது நடைபெறும் இயக்க நடவடிக்கைகளுக்கும் தங்கள் ஆட்களுக்கும் (டக்ளஸ் தேவானந்தா ஆட்களுக்கு) ஒரு தொடர்புமில்லை என்று கூறிவிட்டார் ரமேஷ்.

### இரண்டாவது முத்திரை

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஈழம் முத்திரை வெளியிட்டது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

டேவிற்சன், ரமேஷ் ஆகியோர் முன்னின்று செய்த ஏற்பாடுதான் அது.

அதனால், மற்றுமொரு முத்திரையை வெளியிட்டனர் பத்மநாபா அணியினர்.

அந்த வெளியீட்டு விழாவும் நல்லூர் நாவலர் மண்டபத்தில்தான் நடைபெற்றது.

பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றியவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

முத்திரை வெளியீட்டு விழா உரைகள் யாவுமே புலிகளை அராஜகவாதிகள் என்று சாடுவதாகவே அமைந்தன.

இறுதியாக சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது உரையில் ஒரு கட்டத்தில் சொன்னது இது: "விஜிதரனை யார் கடத்தியது என்பது எமக்குத் தெரியும். அராஜக வாதிகளை நோக்கி எமது ஆயுதங்கள் திரும்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது."

சுரேஸ் பிரேமச்சந்திரனின் உரையால் உற்சாகம் கொண்ட யாழ்-பிராந்தியக் கமிட்டி மற்றுமொரு புலி எதிர்ப்புக்கு தயாரானது.

### நெருப்பு தினம்

யாழ்ப்பாணத்தில் நெருப்பு தினம் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

அராஜகம் ஒழிக என்பதுதான் பிரதான கோஷம். தீப்பந்தங்களுடன் ஊர்வலத்தினர் செல்வார்கள். இறுதியாக பொதுக்கூட்டம் நடைபெறும்.

அதற்கு முன்னரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் நெருப்பு தினம் நடத்தியிருந்தனர். அந்தநெருப்பு தினத்தின் நோக்கம்-இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமையை வலியுறுத்துவது.

அந்த நெருப்பு தினம் முடிவடைந்த மறுநாள்தான் அரியாலையில் இரண்டு புளொட் உறுப்பினர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர்.

இப்போது இது இரண்டாவது நெருப்பு தினம்.

மிகச் சிறப்பாக ஊர்வலத்தை நடத்தினார்கள். ஊர்வலத்தில் பெருந்தொகையான பெண்களும் கலந்துகொண்டனர்.



கபூரை நேரடியாக கிட்டுவுக்கு தெரியாது. 'கபூரைப் பிடித்துவிட்டோம்' என்று கிட்டுவுக்கு வோக்கியில் தகவல் கொடுத்தார் சாவகச்சேரி புலிகள் இயக்கப் பொறுப்பாளர் கேடில்ஸ்.

உடனே யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரச் சொன்னார் கிட்டு.

**அரசியல் தொடர்**
**அற்புதன் எழுதுவது**

'கபூரை போடுவது' என்று கிட்டு முடிவு செய்துவிட்டார். அதனால் தனியான அறை ஒன்றை ஒதுக்கி கபூரை வைத்திருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் தம்மிடம் சரணடையுமாறு புலிகள் வாகனங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்துச் சென்றனர்.

ஏராளமான உறுப்பினர்கள் புலிகளது முகாம்களில் சரணடைந்தனர்.

அனைவரையும் புலிகளது உளவுப்பிரிவு விசாரித்தது. இதில் ஒரு விடயம் என்னவென்றால், ரெலோ தடைசெய்யப்பட்டபோது,

## மன்னாரில் புலிகள் செய்த தந்திரம்

பாகத்தான் இருக்கிறார்கள்' என்று நினைத்தார்கள்.

### முற்றுகை

நெருப்பு தினத்துக்கு மறுநாள் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்கள் புலிகளால் முற்றுகையிடப்பட்டன.

யாழ் நகரில் எந்தவொரு முகாமிலிருந்தும் புலிகளை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படவில்லை. ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். பதிலடி நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்று எதிர்பார்த்து புலிகள் முகாம்களை சுற்றிவளைத்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவில் யாழ் மாவட்டத்தில் பொறுப்பாக இருந்தவர்கள் பலர் முன்கூட்டியே ஒரு முடிவு செய்திருந்தனர்.

"புலிகள் தாக்கினால் திருப்பித் தாக்குவதில்லை. எமது இயக்கத்திலும் பிரச்சனை. நாம் எதற்கு வீணாக அடிபட்டு தோழர்களை பறிகொடுக்க வேண்டும்?" என்பது அவர்களது வாதம்.

யாழ்ப்பாணத் தொகுதிக்கு பொறுப்பாக இருந்தவர் ஈஸ்வரன். அவரும், அவரோடு இருந்தவர்களும் ஆயுதங்களை தலைமையிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிச் செல்லப்போவதாக கூறினார்கள்.

டக்ளஸ் தேவானந்தா விரைவில் திரும்பி வருவார். எனவே ஒப்படைக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டதால் ஈஸ்வரன் உட்பட பல பொறுப்பாளர்கள் காத்திருந்தனர்.

பேச்சுவார்த்தை நடத்தி நிறுத்திவிடுவது என்றுதான் கிட்டு திட்டமிட்டிருந்தார்.

ஆனால், ஒரு இரவுக்குள் யாழ்ப்பாணத்தில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்கள் அனைத்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன.

புலிகளை எதிர்ப்பதில் முன்னணியில் நின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள்தான் முதலில் புலிகளிடம் சரணடைந்தார்கள். அவர்களில் தர்ஷனும் ஒருவர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ்-மாவட்ட இராணுவ பொறுப்பாளர் கபூரை தேடினார்கள் புலிகள். அவர் சாவகச்சேரியில் இருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா திரும்பி வந்ததும் தனக்கு ஆபத்து இருக்கிறது என்று சக தோழர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார் கபூர்.

யாழ் மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்களில் இருந்த ஆயுதங்களை சேகரித்து சாவகச்சேரியில் இருந்த முகாம் ஒன்றில் கொண்டு சென்று மறைத்து வைத்தார் கபூர்.

'புலிகள் எந் நேரமும் தாக்கக் கூடும். அதனால் ஆயுதங்கள் ஆங்காங்கே உதிரியாக இருப்பதைவிட ஒரே இடத்தில் இருப்பதுதான் சரி' என்று காரணம் சொன்னார்.

உண்மையான நோக்கம் அதுவல்ல. டக்ளஸ் தேவானந்தா அணியினரின் பலத்தை குறைப்பதுதான் அவரது சாமர்த்தியமான திட்டம்.

சாவகச்சேரியிலும் புலிகள் தாக்கினார்கள். உறுப்பினரின் வீடொன்றுக்குள் சென்று கபூர் மறைந்து கொண்டார்.

ரெலோ உறுப்பினர்கள் புலிகளால் கடுமையாக தாக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் அவ்வாறு மோசமாகத் தாக்கப்படவில்லை.

சரணடைந்த உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தாம் 'இயக்கத்தில் இருந்து முரண்பாடு காரணமாக ஒதுங்கியிருப்ப'தாக தெரிவித்தனர்.

"என்ன முரண்பாடு?" என்று கேட்கப்பட்டது.

"நாங்கள் டக்ளஸ் தேவானந்தாவின் ஆட்கள். ரமேஷ் கடத்தப்பட்டதோடு இயக்கத்தை விட்டு ஒதுங்கி விட்டோம்!" என்றனர். "அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள்." என்று விட்டார் கிட்டு.

"நாங்கள் டக்ளஸ் தேவானந்தாவின் ஆட்கள்" என்று சொன்னவர்களில் பத்மநாபா அணியினர் சிலரும் இருந்தனர்.

நெருப்பு தின ஊர்வலத்தில் முன்னணியில் நின்று அடையாளம் காணப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

மட்டக்களப்பில் சில பகுதிகளில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். எனினும் தொடர்ந்து தாக்குப் பிடிக்கக் கூடிய ஆயுதபலம் அவர்களிடம் போதியளவில் இருக்கவில்லை.

### புலிகளின் வலை

இதேவேளையில் மன்னாரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொறுப்பாளர் ஒருவரை புலிகள் பிடித்தனர். அவரது பெயர் மார்ட்டின்.

### மற்றொரு தடை

1986 டிசம்பரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை தடை செய்த சூட்டோடு புலிகள் மற்றொரு அறிவித்தலை வெளியிட்டனர்.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான 'தமிழீழ இராணு'வத்தை (TEA) தடை செய்துவிட்டதாக அறிவித்தனர்.

தமிழீழ இராணுவத்தினர் மறுபேச்சே பேசவில்லை. தம்மிடமிருந்த சொற்ப ஆயுதங்களையும் புலிகளிடம் ஒப்படைத்து விட்டனர்.

'தமிழீழ இராணுவ உறுப்பினர்கள் பலர் புலிகள் இயக்கத்தில் இணைந்து விட்டனர். ஏனையோரும் வந்து சேரலாம்' என்று புலிகள் அறிவித்தனர்.

அதனையடுத்து ஏனைய சிறு குழுக்களின் உறுப்பினர்களும் தாமாகவே செயலிழக்கத் தொடங்கினார்கள்.

இறுதியில் மிஞ்சியது 'ஈரோஸ்'.

இக்கட்டத்தில்தான் மன்னாரில் புலிகள் இயக்கத்திற்கு பொறுப்பாக இருந்தார் விக்ரர்.

மன்னாரில் இராணுவத்தினருக்கும், புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே கடும் சமர் ஒன்று ஏற்பட்டது.

மன்னார் சமரும், கிட்டு-கோட்டை முகாம் இராணுவ அதிகாரி கொத்தலாவலயுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாகவும் வரும் வாரம் சொல்கிறேன்.

(தொடர்ந்து வரும்)

## கடற்போரில் பலியான கரும்புலிகள்



பிரபாகரன்-ரதீஸ்



பிரபாகரன்-ரதன்

12.04.96 அன்று கொழும்பு துறைமுக தாக்குதல் முயற்சியில் 9 கடற்கரும்புலிகள் பலியானது தெரிந்ததே. பலியானவர்களில் கடற்புலிகளது தளபதிகளில் இருவரான லெப்டினன்ட் கேணல் ரதீஸ், மேஜர் ரதன் ஆகியோர் பிரபாகரனுடன் இறுதியாக எடுத்துக் கொண்ட புகைப்படம்.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது — இராஜதந்திரி

# அகற்றப்பட வேண்டிய இராணுவ அழுத்தங்கள்

## இடம்பெயர்ந்தவர்களுக்கு- மட்டுமல்ல- புலம்பெயர்ந்தவர்களுக்கும் தீர்வு தேவை!

இராணுவத்தின் தலைமை மாறியுள்ளது.

லெப்டினன்ட் ஜெனரல் ரொஹான் தளுவத்த இலங்கை இராணுவத்தின் 14 வது பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1983ம் ஆண்டிலிருந்து நாட்டில் மோதல் நிலபரத்துக்கு முகங்கொடுத்துவரும் இராணுவம், கடந்த ஒரு வருட காலத்தில் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியுள்ளது.

ஒப்பரேஷன் சூரியக்கதிர்-1, சூரியக்கதிர்-2 ஆகியனவற்றில் கிடைத்த வெற்றிகளே வடக்கே இராணுவத்தின் கரத்தை ஓங்கச் செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இராணுவம் பூதாகாரமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இந்த வளர்ச்சி வடக்கு, கிழக்கில் மட்டும் நெருக்கடி நிலையைதோற்றுவிக்கவில்லை.

தென்னிலங்கையிலும் பல்வேறு அநர்த்தங்களை 'இராணுவத்தர்பார்' தோற்றுவித்திருந்தது.

பதவி விலகிச் சென்ற இராணுவத் தளபதியான ஜெனரல் ஜெரி டி சில்வாகூட, இரு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தின் தலைமையைத் தாம் பொறுப்பேற்ற போது, இராணுவத்துக்குள் குத்து வெட்டுகள் மலிந்திருந்ததாகவும், பலதரப்பட்ட மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுகள் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு-கிழக்கில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்தபோது, தென்னிலங்கையில் அராஜகம் தலைவிரித்தாடியது.

ஆட்கடத்தல்கள், கொலைகள் என்று பல்வேறு வடிவத்திலும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் வியாபித்திருந்தன.

அன்றைய ஆட்சியாளர்களின் போக்குக்கூட கர்ண கடூரமானதாகவும், அப்பாவி மக்களைப் பந்தாடுவதாகவும் விளங்கியிருந்தது.

1994 ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா பிபிஸி செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய பேட்டியொன்றில்கூட, ஐ.தே.க. ஆட்சியில் இராணுவம் இயங்கிய விதத்தை கடுமையாகச் சாடியிருந்தார்.

ஒரு நாட்டில் உள்ள ஆயுதப்படைகளின் வளர்ச்சி, பெருக்கம் என்பன அந்நாட்டின் கைத்தொழில், பொருளாதார, அரசியல் சார்ந்ததாகவே அமைந்துள்ளது.

உலகில் பிரமாண்டமான ஆயுதப்படைகளைக் கொண்டுள்ள நாடுகளை எடுத்து நோக்கும் போது, அந்நாடுகள் பெருமளவில் ஆளணிகளைக் கொண்டுள்ளபோதிலும், தமது பொருளாதார நிலபரங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய விதத்திலேயே இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் இலங்கையில் ஆயுதப்படைகளின் வளர்ச்சி என்பது விரலுக்கு மிஞ்சிய வீக்கமாகவே இருக்கின்றது.

கடந்த 17 வருடகால உள்நாட்டு யுத்தம் காரணமாக கோடிக் கணக்கான பணத்தை- தனது சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில்- இராணுவத்தைக் கட்டி எழுப்ப இலங்கை அரசு செலவிட்டுள்ளது.

இலங்கையின் பாரிய அபிவிருத்தித் திட்டமாக மகாவலி அபிவிருத்தித்திட்டம் அமைந்திருந்தது.

இத்திட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இத்திட்டத்திற்கெனச் செலவிடப்பட்ட தொகையையொத்த அளவே இலங்கையின் இராணுவ நடிவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது என்று அண்மையில் மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜயவர்த்தன தெரிவித்திருந்தார்.

இராணுவ நடவடிக்கைக்கான செலவீனம் ஒருபுறமிருக்க, உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகள், அநர்த்தங்களினால் ஏற்பட்ட நஷ்டங்கள்கூட எண்ணிலடங்காத பல கோடிகளாகவே உள்ளன.

இலங்கையில் கடந்த 17 வருடகால யுத்தம் மட்டும் இருந்திராவிடில், தென்கிழக்காசிய நாடுகளான தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர், ஆகியனவற்றையொத்த ஒரு பலம் மிக்க பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட நாடாக இலங்கை விளங்கியிருக்குமெனவும் மத்திய வங்கி ஆளுநர் கூறியிருந்தார்.

ஆனால் மத்திய வங்கியே உருக்குலைந்த நிலையில் இலங்கையின் பொருளாதார நிலபரமும் ஆட்டங்கண்டுள்ளது.

ஆட்சியாளர்கள் 'பிச்சாடனர்'களாக வெளிநாடுகளிடம் கையேந்தி நிக்கின்றனர். அண்மையில்கூட ஜனாதிபதி சந்திரிகா சீனாவிடமிருந்து பலகோடி ரூபாக்களை உதவியாகப் பெற்றார்.

கூடவே, கடந்த வாரம் வெளிநாட்டு இராஜதந்திரிகள், சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் தமது செயலகத்துக்கு வரவழைத்து.



முன்னாள் தளபதிக்குப் பிரியாவிடை-“நன்றி சென்றுவருக! இனி என்முறை”

வடபகுதிக்கான புனர்வாழ்வு- புனரமைப்புத் திட்டங்களுக்கு சர்வதேச சமூகத்தின் உதவியையும் ஜனாதிபதி கோரியிருந்தார்.

எனவே இலங்கையின் இன்றைய உள்நாட்டு யுத்தம் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளை முழுமையாகப் பாதித்துவிட்டுள்ளது.

எனவே வடக்கு-கிழக்கின் புனர் நிர்மாணம், அப்பிரதேச மக்களின் அமைதியான- சமாதான சகவாழ்வு என்பவற்றுக்கு ஒரு காத்திரமான அரசியல் ஸ்திரப்பாடு நிலவ வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இதனையே புதிய இராணுவத்தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ரொஹான் தளுவத்தகூட குறிப்பிட்டுள்ளார்.

“எல்.ரி.ரி.ஈ.யினரை அவர்களது 'கோட்டை'யாக இருந்த யாழ்ப்பாணப் பெருநிலப் பகுதியிலிருந்து பின்வாங்கச் செய்துள்ளோம்.

ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான ஒரு நிரந்தரத்தீர்வு என்பது அரசியல் ரீதியாகவே ஏற்பட முடியும்” என்று தளபதி தளுவத்த தெரிவித்திருந்தார்.

தளபதி தளுவத்த இராணுவத் தளபதி மட்டுமே தவிர, அரசியல், நிர்வாக நடைமுறைகள் குறித்து தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களையே சார்ந்ததாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முற்றிலுமாக மக்களால் தெரிவு செய்யப்பட்டதாகும். அதேவேளை இந்த அரசாங்கத்தின் தலைமை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியைக் கொண்டதாகும்.

முப்படைத்தளபதிகளையும் ஓரந்தள்ளி இராணுவ ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தீர்மானங்களை எடுக்கும் வல்லமையைக் கொண்டதாகவே இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி விளங்குகின்றது.

எனவே, ஜனநாயகம் என்ற போர்வைக்குள் மறைந்துகிடக்கும் ஒரு சர்வாதிகாரமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை காணப்படுகின்றது.

இந்நிலையில் யார் எதைச் சொன்னாலும் இறுதித் தீர்மானம் என்பது ஜனாதிபதியினாலேயே எடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின் பிதாமகரான ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஒருதடவை இப்படிக் கூறியிருந்தார்:- “ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற மட்டும் என்னால் முடியாதேதவிர மற்றைய அனைத்தையும் நிறைவேற்று அதிகாரம் மூலம் என்னால் சாதிக்க முடியும்.”

**“எல்.ரி.ரி.ஈ.யும் - அரசும் உடன்பட்டால் மட்டுமே சர்வதேச மத்தியஸ்தம் சாத்தியமாகும்.”**

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியும், அங்கே மக்கள் மீளவும் வந்து குடியேற ஆரம்பித்திருப்பதும் ஆட்சியாளர்களுக்கு மனநிறைவைத் தரலாம்.

ஆனால் வடக்கே மக்களின் நாளாந்த வாழ்க்கையை சுமுகமானதாக்கி, அவர்களை கௌரவமாக வாழச் செய்வதற்கு ஏராளமான பணிகள் செய்யப்படவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணப் பெருநிலப் பகுதியிலிருந்தும் பின்வாங்கியுள்ள எல்.ரி.ரி.ஈ.யினர் கிளிநொச்சி, மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கிளிநொச்சி, வன்னி, மற்றும் முல்லைப்பிரதேசங்களில் படையினர் தமது நிலையைப் பலப்படுத்த அப்பிரதேசங்களிலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவே எத்தனிப்பர்.

இதேவேளை யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ள படையினர் எவ்வகையிலும் அங்கிருந்து உடனடியாக விலகிவிடமாட்டார்கள்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் ஊடுருவல்கள் அவ்வப்போது பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெறலாம். அத்துடன் குடாநாட்டுக்குள் கெரில்லாத்தாக்குதல்களைக்கூட எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொள்ளலாம்.

ஆனால் படையினரது பிரசன்னம் தொடர்ந்து வடக்கே முழுஅளவில் இருக்கவே செய்யும்.

பொதுமக்களின் ஆதரவையும், நல்லெண்ணத்தையும் பெறும் வகையில் படையினர் வாஞ்சையோடு பழகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இருந்தபோதிலும் கடந்த கால நிகழ்வுகள் மக்கள் மனதில் உள்ள கலக்கத்தை முற்றிலுமாக அகற்றிவிடவில்லை.

படையினர் பத்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடமாடித்திரிந்த காலங்களில் இடம் பெற்ற நிகழ்வுகள் யாழ் குடாநாட்டவரிடையே சிம்ம சொப்பனமாகவே இருக்கின்றன.



புதிய தளபதிக்கு மரியாதை

இதுதவிர கடந்தகாலங்களில் தென்னிலங்கையில் படையினர் நடந்து கொண்ட விதம் குறித்த தகவல்களும், யாழ்ப்பாண மக்களை ஒரு மனப்பீதியுடன்கூடிய சூழலிலேயே வாழச் செய்யும்.

கடந்த பல வருடகாலமாகவே ஓர் இராணுவமயப்படுத்தப்பட்ட நிலையிலேயே யாழ்ப்பாண மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இராணுவ அழுத்தங்கள் முற்றிலுமாக நீக்கப்படும் பட்சத்திலேயே ஒரு முற்று முழுதான மாமூல் வாழ்க்கையை வடக்கு-கிழக்கில் காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ள இராணுவ முற்றுகையையடுத்து வெளிநாடுகளில் உள்ள எல்.ரி.ரி.ஈ. காரியாலயங்கள், போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டு பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினரது தலைமை இலங்கையில் இருக்கும்போது, வெளிநாடுகளிலுள்ள எல்.ரி.ரி.ஈ.யினரது கோரிக்கைகளுக்கும், கூச்சல்களுக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் செவிசாய்ப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்.ரி.ரி.ஈ.யினரும், அரசாங்கமும் போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவர வேண்டியதும், அரசியல் பேச்சுக்களில் இறங்கவேண்டியதும் அவசியமானதாகின்றது.

எனவே இலங்கையில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தலைமையும், சந்திரிகா அரசும் உடன்பாடொன்றுக்கு வந்தாலே தவிர வேறெவ்வகையிலும் போர்நிறுத்தம்- பேச்சுவார்த்தை என்பவற்றை எதிர்பார்க்க முடியாது.

வெளிநாடொன்றின் மத்தியஸ்தத்துடனாவது சமரச முயற்சிகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாடுகள் பல மத்தியஸ்தத்துக்கு உதவ எப்போதுமே விருப்பம் வெளியிட்டு வந்துள்ளன.

ஆனால் எல்.ரி.ரி.ஈ. இயக்கமும், அரசாங்கமும் உடன்பட்டால் மட்டுமே தம்மால் மத்தியஸ்தத்துக்கு வரமுடியும் எனவும் அவை கூறத்தவறியிருக்கவில்லை.

கடந்தகாலங்களில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கும், அரச தரப்பினருக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்கள்கூட இலங்கையில் இரு தரப்பினருக்குமிடையே தோன்றிய உடன்பாட்டையடுத்தே இடம் பெற்றன.

கடந்த வாரம் வெளிநாட்டு இராஜதந்திரிகள் முன்பாக உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா, அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் குறித்து வடபகுதியில் உள்ள மக்களுடனேயே பேசப்போவதாகக் கூறியிருந்தார்.

ஆனால் வடக்கே வீதிக்குவீதி, சந்திக்குச் சந்தி கனரக ஆயுதங்கள், வாகனங்கள் சகிதம் படையினரை வைத்துக்கொண்டு மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதென்பது- நொந்து, நொடிந்து போயுள்ள மக்களைப் பலவந்தப்படுத்தி தீர்வொன்றை ஏற்கச் செய்வதாகவே அமைந்திருக்கும்.

ஒரு கையில் துப்பாக்கியையும், மறுகையில் தீர்வுப்பொதியையும் வைத்திருக்கலாகாது.

இத்தகைய அணுகுமுறை எவ்வகையிலும் ஒரு சிறந்த ஜனநாயகப் பண்பாக அமையமுடியாது.

வடக்கே இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திருப்பலாம்.

ஆனால் இலங்கையிலிருந்தும் புலம் பெயர்ந்து இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

அம்மக்கள் எல்.ரி.ரி.ஈ.யினர் உட்பட இலங்கையின் பல்வேறு தமிழ் அரசியல் அமைப்புக்களையும் சார்ந்தவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில், எல்.ரி.ரி.ஈ.யினர் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தி, முழுஅளவிலான ஒரு தீர்வை எட்டுவதிலேயே ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

ரோசியாவின் பிணம் இப்போது கே.ஜி.பி.யின் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டிருக்கும். 'ரோசியா-டியர்! என்னை மன்னித்துக்கொள்! உன் அழகான உடலின் வசீகரத்தை நான் மறக்கமாட்டேன். நீயே என்னைக் கொல்ல துணிந்த பின்னர் எனக்கு வேறு வழியிருக்கவில்லை.' கார்லோஸ் மனதுக்குள் வருத்தப்பட்டான்.

அவன் வருதப்பட்டுக்கொண்டிருக்க, மகதலோனா அவன் தோளில் தட்டினாள். அப்போதுதான் குளித்துவிட்டு பூந்துவாலையை உடலில் சுற்றிக்கொண்டு வந்திருந்தாள். அதனால் மிக கவர்ச்சியாக இருந்தாள். முழங்காலுக்கு மேலே நின்றுவிட்ட துவாலை கால்களின் வாளிப்பைக் காட்டி கார்லோஸுக்குள் குறு குறுப்பு கொடுத்தது.

கார்லோஸ் மெல்ல ரோசியாவை மறந்தான். கார்லோஸின் தாடையை தொட்டு நிமிர்த்தி அவன் முகமருகே குனிந்து கண்ணடித்தாள். மிக வாசனையாக இருந்தாள்.

"என்ன யோசனை?" என்றாள்.

"மகதலோனா, நீ உடனே பாரிசுக்குப் புறப்படவேண்டும். இங்கே ஆபத்து அருகில் வந்துவிட்டது! பிரான்சில் ஒரு வேலையும் செய்யப்படவேண்டியுள்ளது."

கார்லோஸின் மடியில் வந்து அமர்ந்துகொண்டு, "நீயில்லாமல் நான் மட்டும் தனியாகவா?" என்றாள்.

அவளின் மிகுந்த நெருக்கமும், மெத்தென்று அவள் அமர்ந்திருந்ததும் கார்லோஸுக்கு இதமாக இருந்தது. அவளது தொடையில் மெல்ல தன் இடது கரத்தால் வருடிக்கொண்டே சொன்னான்: "துணையாக புருனோ பிரேகுவேட் வருவான்! துணிச்சலானவன். துடிப்பானவன். மிக உபயோகமாக இருப்பான். அதற்காக அவனை உபயோகித்துவிடாதே!"

"ச்சீ.." என்று அவன் மார்பில் தன் கைகளால் குத்தினாள். பூந்துவாலை மெல்ல அவிழ்ந்தது. அதனை அலட்சியம் செய்து, "பாரிசில் கைது செய்ய மாட்டார்களா?" என்று கேட்டாள்.

"மாட்டார்கள்!" என்றான் கார்லோஸ் உறுதியாக.

"சரி போகிறேன்" என்றாள்.

"அதற்குமுன் ஒரு வேலை இருக் கிறது!"

"என்ன வேலை!"

"ஐஸ்கீரிம் கரைந்துபோக முன்னர் சாப்பிட்டு விடுகிறேனே!" என்றான். துவாலையை எடுத்து தூர வீசினான்.

# மனித வேட்டை 9

## சென்றவாரம்

ஜெர்மன் முனிச் நகரில் இயங்கிய ரேடியோ ஃப்ரீயூரோப் வானொலி நிலையம் கார்லோஸால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

ஜெர்மனில் வைத்து சோவியத் உளவுப் பிரிவு (கே.ஜி.பி) கார்லோஸை கொலை செய்ய முயற்சிக்கிறது. முன்கூட்டியே தகவலறிந்து தப்பிக்கொள்கிறான் கார்லோஸ்.

இனி..

## தருவது- ரசிகன்

# கார்லோஸின் எச்சரிக்கை

பாரிசில் மகதலோனாவும், புருனே பிரேகுவாட்டும் சென்று இறங்கியதில் இருந்தே, ஃபிரான்ஸ் உளவுத்துறையால் நிழல் போலத் தொடரப்பட்டனர்.

ஃபிரான்சில் இருந்து கோர்சிகா தேசிய விடுதலை முன்னணி (F.L.N.C) இயக்கத்தின் உதவி இருவருக்கும் கிடைத்தது.

F.L.N.C வுக்கும் கார்லோஸுக்கும் இரகசியத் தொடர்பு இருந்தது. அதனால் கார்லோஸின் ஆட்களுக்கு பாரிசில் அவர்கள் உதவினார்கள்.

ஃபிரான்ஸ் உள்துறை அமைச்சருக்கு தகவல்கள் யாவும் சொல்லப்பட்டன.

உள்துறை அமைச்சர் யோசித்தார். ஃபிரான்சில் வைத்து கார்லோஸின் ஆட்களை பிடித்தால் கார்லோஸுக்கு கோபம் வரலாம்.

விளைவு, ஃபிரான்சில் குண்டுகள் வெடிக்கலாம்!

உள்துறை அமைச்சரிடமிருந்து உத்தரவு பறந்தது. "கைது செய்ய வேண்டாம். கண்காணியுங்கள்! இங்கே ஏதாவது விபரீதம் செய்வது தான் அவர்கள் நோக்கமாக இருந்தால் கைது செய்யலாம்."

தாம் கண்காணிக்கப்படுவது தெரியாமலேயே மகதலோனாவும், புருனே பிரேகுவார்ட்டும் சுதந்திரமாக நடமாடினார்கள்.

இருவரையும் மறைந்திருந்து புகைப்படங்களும் எடுத்துவைத்துக் கொண்டனர் ஃபிரான்ஸ் உளவுப்பிரிவினர்.

1982 பெப்ரவரி 16ம் திகதி இரவு மகதலோனாவும், புருனே பிரேகுவாட்டும் கார் ஒன்றில் புறப்பட்டனர்.

அந்தக் கார் ஃபேஜோ ரகம். பழைய மொடல். காருக்குள் வெடி மருந்துகளும், விஷவாயுப் போத்தல்களும் இருந்தன.

புருனே பிரேகுவாட் கைத்துப்பாக்கி வைத்திருந்தான். அவன்தான் காரைச் செலுத்தினான்.

ஃபேஜோ புறப்பட்டு வீதியில் வழுக்கிச் செல்ல, அதனைத் தொடர்ந்தது மற்றொரு கார். அதனுள்ளே ஃபிரான்ஸ் உளவுத்துறையினர் அமர்ந்திருந்தனர்.

பாரிஸ் நகரில் ஜோர்ஜ் அவெனியூ வீதியில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பேஜோ சென்று ஓய்ந்து நின்றது.

அந்த வாகனத் தரிப்பிடத்தில் அதன் எதிரேயுள்ள அடுக்குமாடிக் கட்டிடங்களில் வசிப்போரின் கார்களுக்கு மட்டுமே இடமளிக்கப்படும்.

வாகனத்தரிப்பிட காவலனுக்கு அந்த ஃபேஜோக் கார் வெளியாரினது என்பது தெரிந்துவிட்டது. ஓடிவந்தான். "காரை எடுங்கள்" என்றான். புருனே பிரேகுவார்ட் ஏதோ சொன்னான். தரிப்பிடக் காவலனுக்கு கோபம் வந்துவிட்டது. "பக்கத்திலே குட்டி இருப்பதால் துள்ளுகிறாயா? காருக்குள் வைத்தே காரியம் முடிக்க உனக்கு இந்த இடம்தானா கிடைத்தது! போய்விடு! அல்லது பொலிஸுக்கு போன் பண்ணுவேன்!" என்றான்.

புருனே பிரேகுவார்ட்டுக்கு நெற்றி நரம்புகள் புடைத்தன. கோபம் உச்சியில் ஏறியது. அதனால் ஒரு தவறு செய்தான்.

"வேசி மகனே? நான் யார் தெரியுமாடா?" என்று கேட்டபடியே தன் கைத்துப்பாக்கியை உருவி, காரின் ஜன்னல் ஊடாக காவலரின் நெஞ்சில் பதித்தான்.

இத்தனை நேரமும் உஷாராகப் பேசிய காவலன் பெட்டிப்பாம்பாகிவிட்டான். முழிகள் பிதுங்க, தன்னிச்சையாக இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டு மன்றாடினான்.

"பிழைத்துப் போ நாயே!" என்றுவிட்டு புருனே பிரேகுவாட் காரைக் கிளப்பினான்.

தூரத்தில் ஹெட்லைட்டை அணைத்துவிட்டு நின்று, அங்கு நடந்தவற்றையெல்லாம் ஃபிரான்ஸ் உளவுத்துறையினர் கவனித்தனர். ஃபேஜோ புறப்பட்டதும் காவலனிடம் வந்து அவசரமாய் விசாரித்துவிட்டு, பின் தொடர்ந்தபடியே, உள்துறை அமைச்சரோடு வோக்கியில் தொடர்பு கொண்டனர்.

அப்போதுதான் மனைவியை நைட்டியில் இருந்து வெளியே எடுத்து வியந்து, கழுத்தில் வாசனை முகர்ந்து கொண்டிருந்த உள்துறை அமைச்சருக்கு, வோக்கியில் அழைப்புவர எரிச்சலாக இருந்தது.

"யெஸ்!" என்றார் வெறுப்பாக. மறுமுனையில் தகவல் சொல்லப்பட்டது. தகவலைக் கேட்டபடியே மனைவியைக் கவனித்தார். ஒரு காலைக்குத்திட்டு மடக்கியபடி மல்லாந்திருந்தாள். அமைச்சருக்கு உதடு வறண்டு போனது. பொறுமை இல்லை. "உடனே கைது செய்யுங்கள்!" என்று விட்டார் அதனால் வரப்போகும் விளைவுகளை அறியாமல்.

கார்லோஸ் தன் எதிரே கம்பீரமாக வீற்றிருக்கும் மனிதரை மரியாதை கலந்த வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

கார்லோஸை நேரில் காணப் பலபேர் ஆவலாக இருந்தார்கள். ஆனால் கார்லோஸ் காணவிரும்பிய மிகச் சிலரில் அவன் எதிரில் இருப்பவரும் ஒருவர்.

-எதிரே இருந்தவர்-
லிபிய அதிபர் கேணல் கடாபி.



25 Février 1982

A Exc. M. Gaston Defferre, Ministre d'État, ministre de l'Intérieur et de la décentralisation.

M. le Ministre

ஃபிரான்ஸ் நாட்டு உள்துறை அமைச்சருக்கு கார்லோஸ் அனுப்பிய போர்ப்பிரகடன எச்சரிக்கைக் கடிதம்

சுருட்டை முடி. ஊடுருவும் விழிகள். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருப்பவர் என்று அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளால் குற்றம் சாட்டப்படுபவர். உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்ற நாடு இருக்கவே கூடாது என்று கர்ஜிப்பவர்.

ஒபேக் நாடுகளது எண்ணெய் வள அமைச்சர்களை கார்லோஸ் கடத்தியபோது, அவன்மீது கடாபிக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. பின்னர் படிப்படியாக தனது கருத்தை மாற்றிக் கொண்டார் கடாபி. கார்லோஸை சந்திக்கவும் அழைப்பு விடுத்தார்.

மகதலோனாவையும் புருனே பிரேகுவாட்டையும் பாரிசுக்கு அனுப்பிவிட்டு லிபியாவின் தலைநகரான திரிபொலிக்கு சென்றான் கார்லோஸ்.

"வந்தது தான் வந்தாய், இன்னும் ஒரு வாரம் தங்கிச் செல்லலாமே!" என்றார் கடாபி கணீரென்ற குரலில்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்! வேறு வேலையொன்று வந்துவிட்டது. ஃபிரான்சில் என் ஆட்கள் இருவரை கைதுசெய்துவிட்டார்கள்! விடுவிக்க வேண்டியது என் கடமை!"

"என்ன செய்யப்போகிறாய்?"

"கட்டம் ஒன்று. ஃபிரான்சுக்கு எச்சரிக்கை."

"சரிதான்போ என்று அலட்சியம் செய்தால்?"

"கட்டம் இரண்டு. ஃபிரான்ஸ் தன் அலட்சியத்திற்காக வருத்தப்பட வேண்டியிருக்கும். தகுந்த விலை தரவேண்டியிருக்கும்!"

கார்லோஸின் உறுதியைக் கண்டு கடாபியின் உதட்டில் மெல்லியதாக புன்னகை எட்டிப்பார்த்தது.

கார்லோஸை கட்டியணைத்து விடை கொடுத்தார் கடாபி.

கடாபி ஒரு ஜோக்கடித்தார். "கார்லோஸ் உனது அணைப்புக்கு பெண்கள் ஏங்குவதில் ஆச்சரியமில்லை."

லிபியாவில் இருந்து ஹங்கேரி நாட்டுக்கு தென்யேமன் கடவுச் சீட்டு மூலம் பயணம் செய்தான் கார்லோஸ்.

அந்தக் கடவுச் சீட்டு இராஜதந்திரிகளுக்கு உரியது. அதனால் எவ்வித சோதனையும் இல்லாமல் விமானநிலைய பிரத்தியோக வழிமூலமாக கார்லோஸ் வெளியே செல்ல முடிந்தது.

ஹங்கேரியில் உள்ள புடாபெஸ்ட் நகரில் தனது பாதுகாப்பு இல்லத்தில் தங்கிக் கொண்டான் கார்லோஸ்.

அங்கிருந்துதான் ஃபிரான்ஸ் உள்துறை அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

சாதாரண கடிதமல்ல. போர்ப்பிரகடனம்! ஸ்பானிய மொழியும் கார்லோஸுக்கு நன்கு தெரிந்திருந்தது. கடிதம் ஸ்பானிய மொழியில்தான் எழுதப்பட்டது.

1982 மார்ச் முதலாம் திகதி ஃபிரான்ஸ் உள்துறை அமைச்சரகத்தை பரபரப்பு தொற்றிக் கொண்டது.



கார்லோஸ்

உள்துறை அமைச்சர் கஸ்ரன் டெஃப்பரே வியர்த்திருந்தார். மேலதிக பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டு அன்று காலையில் கிடைத்த கடிதத்தை மீண்டும் ஒரு தடவை படித்துப் பார்த்தார்.

**உள்துறை அமைச்சர் அவர்களுக்கு! தற்காலிக வாழ்த்துக்கள்!**

நிரந்தரமான வாழ்த்துக்களை தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன். ஏனென்றால் இன்னும் 30 நாட்களில் ஃபிரான்சில் என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ என்று நானறியேன். உங்கள் முடிவைப் பொறுத்துத்தான் நடக்கக்கூடாதவற்றை நடக்கவைக்கும் முடிவை நாங்கள் மேற்கொள்ளவேண்டி இருக்கும்.

ஃபிரான்சுக்கும் நமக்கும் விரோதமில்லை. ஃபிரான்ஸ் நமது எதிரியுமல்ல.

ஆனால், ஃபிரான்ஸ் தவறு செய்துவிட்டது. நமது அரேபிய புரட்சிப் படையின் இரண்டு உறுப்பினர்களை பிடித்து சிறையில் போட்டதுமல்லாமல், நீதி விசாரணையும் நடத்திக்கொண்டிருக்கிறது.

ஃபிரான்ஸின் நீதி நம்மைக் கட்டுப்படுத்தாது. ஃபிரான்ஸ்சின் தீர்ப்பு நம்மைக் கோபப்படுத்திவிடும்.

வேண்டாம். நமக்குள் பகை வேண்டாம். ஆகவே, பின்வரும் விடயங்களை, அவை எச்சரிகையாக கொள்ளப்படாது தகுதியுள்ளவையாக தெரிவிக்க விரும்புகிறேன்.

1. எமது படைவீரர்கள் இருவரையும் விசாரணைக்குட்படுத்துவதை உடனே நிறுத்துக.

2. இக் கடிதம் கிடைத்ததிலிருந்து 30 நாட்களுக்குள் எமது வீரர்களை விடுதலை செய்ய வேண்டும்.

3. எமது வீரர்களிடமிருந்து கைப்பற்றிய சகல ஆவணங்களுடனும், அவர்களை விடுவிக்கும் உத்தரவு ஆவணங்களுடனும் எமது வீரர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

4. விடுவிக்கப்படும் எமது வீரர்கள் தாம் செல்லவிரும்பும் நாட்டுக்கு போக்குவரத்து விமானத்தில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ஆக, நாலு நிபந்தனைகள். சுலபம்!

சோசலிச ஃபிரான்சுடன் நாம் போர்தொடுக்க விரும்பவில்லை. இருப்பினும் அத்தகைய நிலைக்கு எம்மைத் தூண்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இக் கடித விபரம் அந்தரங்கமானது. இருப்பினும் நீங்கள் விரும்பின் வெளியிடலாம்.

விரைவில் திருப்திகரமான முடிவை ஃபிரான்ஸ் எடுக்கும் என்று நம்புகிறோம்.

-அரேபிய புரட்சியின் ஓரங்கமான அரேபிய இராணுவ போராளிகள் அமைப்பின் சார்பாக.

கார்லோஸ்.

பின்குறிப்பு:- இக் கடிதத்தின் உண்மை அடையாளமாக எனது கைவிரல் அடையாளத்தை பதித்துள்ளேன்.

(பதட்டம் தொடரும்)

# மர்லின் பெயரில் ஒரு விளம்பரம்

ஹொலிவூட்டின் கனவுக் கன்னி மர்லின் மன்றோ மறைந்து 34 ஆண்டுகள் கால வெள்ளத்தில் கரைந்து போயின.

ஆனால், மர்லினின் புகழ் மட்டும் காலத்தின் கரத்தையும் மீறி வளர்ந்து கொண்டிருக்கிறது.

மர்லின் என்ற பெயருக்கு இப்போதும் மயக்கும் சக்தி இருக்கிறது. மயக்க மாத்திரையின் தன்மை இருக்கிறது.

சமீபத்தில் வெளியான ஒரு செய்தி நிரம்ப ஆச்சரியமான இருந்தது.



அமெரிக்காவில் உள்ள பிரபல நட்சத்திர விடுதி ஒன்றில் வாடிக்கையாளர்கள் வருகை மிகவும் குறைந்துவிட்டது. அதனால் பல அறைகள் வெறுமையாகக் கிடந்தன. வருமானம் இல்லை.

விடுதி உரிமையாளருக்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

"மர்லின் மன்றோ 1960 இல் தூங்கிய கட்டில் எமது நட்சத்திர விடுதியில் இருக்கிறது.

மர்லினின் மேனியின் இதம்! நம் விடுதியில் தங்குவது அதற்கு ஈடான சுகம்!" என்றரீதியில் விளம்பரம் தூள்கிளப்பியது.

என்ன ஆச்சரியம்! நட்சத்திர விடுதியை இளைஞர்கள் பட்டாளம் முற்றுகையிட்டுவிட்டது. தமது காதலிகளோடு வந்தும் அறை வாடகைக்கு கேட்கிறார்களாம்.

ஹோட்டல் அதிபருக்கு சந்தோசம் என்றாலும், ஒரு சங்கடமும் இருக்கிறது.

மர்லின் தூங்கிய கட்டில் இருக்கும் அறையைத்தான் அனைவருமே கேட்கிறார்கள்.

அதனால் பதிவு செய்பவர்களுக்குத்தான் அந்த அறை என்று விதி போட்டுவிட்டார்கள்.

மூன்றுமாதத்திற்கு தேவையான பதிவுகள் செய்யப்பட்டுவிட்டதால், இனிமேல் பதிவு செய்பவர்கள் மூன்று மாதம் வரை காத்திருக்க வேண்டும்.

கட்டிலுக்கே இப்படி ஒரு மரியாதை என்றால்...?

இறந்த பின்னரும் இத்தனைதூரம் மயக்கும் மர்லின் மன்றோவின் இளமைக் காலம் சோகமானது.

கம்பனி ஒன்றில் ஹெல்பராக வேலை பார்த்தள்.

புகைப்பட நிபுணரான பென் லியான் என்பவரது பர்வையில் பட்டாள் மர்லின் மன்றோ. அப்போது மர்லினின் பெயர் நார்மாஜுனை.

எந்தப் பெண்ணிலும் இல்லாத சில விசேஷங்கள் நார்மாவில் இருப்பதை தனது கமராக் கண்களால் கண்டு கொண்டார் பென் லியான்.

நார்மாவை பல போஸ்களில் படம் பிடித்து பத்திரிகைகளில் வெளியிட்டார். நார்மாஜுனை மர்லின் மன்றோ ஆக்கியதும் அவர்தான்.

புகைப்படங்களில் மர்லினின் கவர்ச்சிக் கோணங்கள் அமெரிக்காவையே மயக்கியது. "யார் இந்த மர்லின்?" என்று கேள்விகள் எழுந்தது. ஹொலிவூட் படவுலகம் அழைத்தது.

தன்னைக் கவர்ந்த ஆண்களுடன் தாராளமாக பழகினாள் மர்லின். அதில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியும் அடக்கம்.

1962 ஆகஸ்ட் 3ம் திகதி மர்லின் மன்றோ தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மாண்டு போனாள். அந்த மரணத்தில் உள்ள சந்தேகம் இன்றுவரை மறையவில்லை.

அதேபோல மர்லின்மீதான மயக்கமும் இன்றுவரை மறையவில்லை.

# தடைக்கு மேல் தடை
## 'பண்டிட் குயின்' படும்பாடு

பூலான்தேவியின் கதையை வைத்து எடுக்கப்பட்ட படம், 'பண்டிட் குயின்.'

படப்பிடிப்பு ஆரம்பித்து, படம் திரையிடப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் வரை 'பண்டிட் குயின்' சர்ச்சை ஓயவில்லை.

முதலில் பூலான்தேவி தரப்பில் இருந்து எதிர்ப்பு கிளம்பியது. தனது காதலனுடன் மேலிருந்து உறவு கொள்வது போல காட்சி வருவதை கடுமையாக ஆட்சேபித்தார் பூலான்தேவி.

'பண்டிட் குயின்' படத்தில் வன்முறையும், செக்சும் அதிகம் என்று கத்தரிக்கோலை தூக்கி மிரட்டியது தணிக்கைக் குழு.

பல காட்சிகளை தணிக்கைக் குழுவின் கத்தரிக்கோல் சாப்பிட்டுவிட்டது.

அப்படியிருந்தும் சகல தடைகளையும் மீறிப் படம் வெளியானது.

இந்தி நடிகர் அமிதாப்பச்சனின் விநியோக நிறுவனம்தான் பண்டிட்குயினை வாங்கி திரையிட்டது.

படம் வெளியாக முன்னரே கிளம்பிய சர்ச்சைகள் படத்திற்கு இலவச விளம்பரமாக அமைந்துவிட்டன.

வசூல் குவியத் தொடங்கியது. தணிக்கைக் குழுவின் கத்தரிப்பையும் மீறி படத்தில் சூடான காட்சிகள்.

கூட்டம் நிரம்பி வழிந்தது.

இச் சமயத்தில் தான் பூலான்தேவியும் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார்.

முதலில் 'பண்டிட் குயின்' படத்தில் தன்னை கேவலப்படுத்துவதாகக் கூறிய பூலான்தேவி, தேர்தலில் போட்டியிடும் போது மனம் மாறிவிட்டார்.

'பண்டிட் குயின்' படத்தைப் பார்த்தால் தனது கடந்தகால செயல்களுக்கான காரணத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள் என்று சொல்லத்தொடங்கினார்.

இளசுகள் மத்தியில் தனக்கு மவுசு கூடும் என்றும் கணக்குப்போட்டார் பூலான் தேவி.

ஆனால், படத்தை தடை செய்யுமாறு மகளிர் அமைப்புக்கள் கிளர்ந்தெழுந்தன. நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது.

நீதிமன்றம் தடைவிதித்தது.

அமிதாப்பச்சன் நிறுவனம் அப்பீல் செய்தது. இப்போது தடை நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒரு நிபந்தனை.

பூலான்தேவி தேர்தலில் போட்டியிடுவதால் அவரது தொகுதியில் தேர்தல் முடிந்தபின்னர்தான் படத்தை திரையிடலாம் என்று தீர்ப்பளித்துவிட்டது நீதிமன்றம்.

மறுபடி திரையிடப்பட்டதும் பண்டிட் குயின் வசூல் மழை பொழியும். ஆனால், பாவம் பூலான் தேவி. அவருக்குத்தான் லாபமில்லை.

அதுமட்டுமல்ல, பூலான் தேவியால் கொல்லப்பட்டவர்களது மனைவிமார்கள் எல்லாம் ஒன்றுகூடி பூலான் தேவிக்கு எதிராகப் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

முன்னாள் கொள்ளைக்காரி பூலான் தேவி வாக்காளர்களின் உள்ளங்களை கொள்ளையிடுவதிலும் கெட்டிக்காரி தானா? தேர்தல் முடிவு விடை சொல்லும்.





படிப்பகம்

www.padippakam.com

# ஏசுவைச் சிலுவையில் மீண்டும் அறைகிறார்!

மாவிடம் சாகுது
வாழ்விடம் அழியுது
மாரி பொய்க்குது
மண்ப தைக்குது
அரிசி வருமுன்
ஆவி போகுது!
பெரிய மனிதர்
பொய்யில் வாழ்கிறார்!
வீடுகள் இடியுது
விளை நிலம் அழுகுது!
வெள்ளைத் தாமரை
இதழில் குருதி!
வெண்புறா இறகை
விரித்துப் பறக்குது!
மண்பதை கொள்ளக்
குண்டுகள் விழுகுது!
எப்போது இங்கு
சமா தானம்?
ஒப்புக் காக
ஓடுது ரிவியில்!
பொய்மை பெருகுது
போலிகள் கூடுது
வீதியில் மனிதம்
விழுந்து சாகுது!
போதி மாதவன்
போதித்தது எல்லாம்
போர்வைக்கு உள்ளே
புழுத்து நாறுது!
ஏசுவைச் சிலுவையில்
மீண்டும் அறைகிறார்!
இவர்களும் ஓர்நாள்
சிலுவை சமப்பர்!
எத்தனை நாளைக்கு
இத்தனை வேஷம்?
எல்லாம் கலந்து
வெளியில் வருகுது:
எவர்க்கும் இருக்குது
அரக்கக் குணமது:
இல்லை என்று
சொல்வோர் யாரோ?
அப்படி ஆனால்
அவரே காந்தி!
போரென முழங்கும்
புல்லறி வாளர்
போகும் உயிர்க்கு
நியாயம் சொல்வரோ?
புதைத்த மனிதரின்
எலும்பை எடுப்போர்
எடுத்த குழியில்
புதிய பிணங்களை
போட்டுப் புதைப்பது
எத்தனை எத்தனை...?
யுத்தம் என்ற
கோரப் பசிக்குப்
போகும் உயிர்க்கு
நியாயம் சொல்வரோ?
ஏது சொல்லியும்
உயிருடல் மீளா!
இவர்களும் ஓர்நாள்
சிலுவை சமப்பர்!
இல்லையோ நல்லார்
சொல்லித் தடுக்க?
இந்த யுத்தம்
இன்னும் தொடருமோ?
காந்தி இருந்தார்,
புத்தர் இருந்தார்,
கடவுள் வந்தார்
மனித வடிவில்!
இவர்கள் மீண்டும்
பிறப்ப ராயின்:
இங்கே மனிதர்
இல்லையோ என்பர்!
இவர்கள் சொல்லி
வைத்தவை எல்லாம்
சாக்கடைக் குள்ளே
சங்கம மாகுது!
எவர்வந்து இவர்க்கு
எதுசொன் னாலும்
கேளான் காதில்
ஊதிய சங்கே!

பா-அமிர்தநாயகம்-கொழும்பு-13.

# ஒரு காலம் வரும்

என்றோ
ஒரு
காலம் வரும்!
**
அன்று,
அப்பாவி மனிதங்களின்
உள்ளத்து
உணர்வுகள்
உடைப்பெடுக்கும்!
**
இளம் பிறை கூட
அரிவாளாகும்!
**
தாரகைகள்
தரையிறங்கி
இது வரைக்கும்
மனிதங்களால்
கண்டுபிடிக்கப்படாத
நவீன
கைக்குண்டுகளாய் மாறும்!
**
இன்றைய(த்)
துப்பாக்கிகளும்
'ஷெல்'களும்
செயலிழந்து
ஊனமுற்றும்
உறக்கமுற்றும்
முதுகெலும்பொடிந்து,
மூலைகளில்
முடங்கிக் கிடக்கும்!
**
தென்றல் கூட
தேகங்களை(ச்)
சுடுமளவு
சூட்டைச்சுமந்து வரும்!
**
சூரியனும்
பூமியில் விழுந்து
அணு குண்டாய்
வெடித்துச் சிதறும்!
**
இன்றைய
ஆயுதபாணிகள்
நிராயுத பாணிகளாயும்,
நிராயுத பாணிகள்
ஆயுத பாணிகளாயும் கூட
மாற்றம் பெற
என்றோ
ஒரு
காலம் வரும்!

காவத்தமுனை-
ஹாறூன்.

# மனசில்லியே புள்ள



அடிபட்ட பாம்பாட்டம்
என்னோட
கோபமாகயிருப்ப!
**
கறு புறு கறு புறுண்ணு
என்ன
தீட்டித் தொலப்ப!
**
நீ விரும்பி ருசிக்கும்
தேன் கிண்ணத்தில
என் பெயர மட்டும்
கிள்ளி எறிவ!
**
உன் உளத்திலிருந்து
என்ன இறக்கி
மண்ணுல போட்டு
காலால
கசக்கியிருப்ப!
**
'மச்சானே என்ன
கட்டிக்க' என்ற வாய
மரத்தில கொண்டு
தேச்சிருப்ப!
**
நீ பணத்தில
மிதக்கிற,
நான் வறுமய
சமக்கிறன்!
என்னுல உன்
கோபத்த கொட்டாத!
**
உதட்டோட
உதடுபோல
பணத்தோட
பணம்தான
செம்மையா ஒட்டுது...?
**
உண்ட காசிக்கி
மனசில்லியே புள்ள!

மீராவோடை-எஸ்.நஸீம்

# புரியவில்லை

குட்டிப் பூனைகளை
தடவிக் கொடுக்கிறோம்.
ΨΨ
குட்டி நாய்களை
எடுத்து கொஞ்சுகிறோம்.
ΨΨ
கிளிகள் பேச
கைதட்டி மகிழ்கிறோம்.
ΨΨ
குயில்களின் கூவலில்
இசைகள் கேட்கிறோம்.
ΨΨ
இயற்கையின் அசைவில்
நாட்டியம் பார்க்கிறோம்
ΨΨ
பூக்களின் மலர்வில்
கவிதைகள் படைக்கிறோம்.
ΨΨ
தென்றல் காற்றில்
கீதம் இசைக்கிறோம்.
ΨΨ
சாரல் மழையில்
ஆடல் புரிகிறோம்.
ΨΨ
ஆனாலும்
ஏன் நாம்
அடித்துக் கொ(ல்)ள்கிறோர்!

சுபா வரன்-கண்டி

# தேன் கிண்ணம்

## அமோக வாக்கு வசூல் தமிழகமெங்கும் வெற்றி நடை போடுகிறது

## தி.மு.க. கூட்டணி

இயக்கம்-சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்
கதை-வசனம்-கலைஞர் கருணாநிதி
ஒளிப்பதிவு-சன் டி.வி. மற்றும் தமிழக பத்திரிகைகள்
இசை-ரஜினி ரசிகர் மன்றம்
பாடல்கள்-அண்ணாமலை, பாட்ஷா, முத்து.




பிரதான நடிகர்கள்-கலைஞர் கருணாநிதி
மூப்பனார்
சரத்குமார் இவர்களோடு
கௌரவ வேடத்தில் ரஜினிகாந்த்
துணை நடிகர்கள்-வேட்பாளர்கள்
கட்சித் தொண்டர்கள்
-விளம்பரம்-
காதிலை பூ கந்தசாமி

# ஒரு காதல் வரலாறு

மரத்தின் கக்கத்தில்
தென்றலுடன் சல்லாபிக்கும்
தேங்காய் ஒன்றை
நீ
கொக்கை கட்டி பறி...
அது என் இதயமாகும்!
**
அதை... (உன் காதல்)
மண்வெட்டியில்
குத்தி குத்தி
உரித்துப் போடு..
அது என் சுவாசமாகும்!
**
தோலுரித்த தேங்காயை
உருட்டி உருட்டி
விளையாடு...
அது என் வாலிபமாகும்!
**
உரித்த தேங்காயில்
(உன் பிரிவுக்) கத்தியால்
ஓங்கி வெட்டு....
என் இதயம் பிளக்கும்!
**
ஊத்துண்ணும் தண்ணியை
(உன் 'ஆசை') கோப்பையில்
ஊத்தி அருந்து..
அது என் கண்ணீராகும்!
**
உடைந்த தேங்காயை
துருவி எடு...
அது என் நினைவுகளாகும்!
**
வெறும் சிரட்டையை
வெயிலில் போட்டு வை...
அது என் வாழ்க்கையாகும்!
**
காய்ந்த சிரட்டையை தீயில்
எரித்து
நீ கூதல் காய்...
அது என் தேகமாகும்!
**
அடி கொக்கு விழிக்காரியே..!
என் நிலைமை
காண்..!

சிபி.எம்ஜஸம்.நகீம்-
பொத்துவில்-2.

# பெயர் மாற்றம்

இலங்கை மண்ணின்
யுத்த பிரதேசத்தில்
பிறந்து,
அயல் பிரதேசத்தில்
வசிக்கும்
"அகதி"யெனும்-
பெயருடைய நான்,
அம் மண்ணைத் தழுவி
"குடி பெயர்ந்தவன்"
என-
எனது பெயரை
மாற்றிக் கொள்கிறேன்...!
இன்றிலிருந்து...
நிரப்பப்படும்
விண்ணப்பங்களிலும்...
பெறப்படும்-
நிவாரணங்களுக்கும்
"குடி பெயர்ந்தவன்"
என்றே-
ஒப்பமிடுவேன்...!
என்பதை
நம்
கலவர நாட்டுக்கு
தெரியப்படுத்துகிறேன்.

ஆர். சாந்தசீலன்,
பொத்துவில்.

# காதல் யுத்தம்

கண்ணே!
நீ,
என்னை நிராகரித்து,
கடிந்த வார்த்தைகள்-
செல்
விழுந்த மாதிரி...!
♥X♥
பெண்ணே!
என்னைத்
தற்செயலாய்க் கண்டு
முறைத்த பார்வை-
நேரடி
மோதல் மாதிரி...!
♥X♥
கனியே!
உன்
மனதுக்குள்ளேயே
என்னைத்திட்டுவது-
மறைந்திருந்து
தாக்குவது மாதிரி..!
♥X♥
தேனே!
என்னை
நேரடியாக வந்து
பேசித் தாக்குகின்றாய்-
தற்கொலைப்
படை மாதிரி..!
♥X♥
என்
விவகாரம் அறிந்த
வீட்டார்
அல்லல் படுகின்றனர்-
போராட்டத்தில் அகப்பட்ட
பொது மக்கள் மாதிரி...!
♥X♥
நீயோ,
துன்பங்களை
அறியாதவளாய் இருக்கின்றாய்-..
அரசியல்வாதிகள்
மாதிரி..!
♥X♥
இவ்வேளை,
உன்னிடம் இருந்து
நல்ல வார்த்தைகள்
பறந்து வந்தால்-
அது,
சமாதானப் புறா மாதிரி...!
♥X♥
நமது காதல்
மலர்ந்தால்-
அது,
எனக்கொரு
சமாதானத்
தீர்வு மாதிரி...!
♥X♥
இத்தனைக்கு மத்தியில்
உன் மனதை
நான்,
வென்றடைந்தால்-
அது,
எனக்கொரு
தனி நாடு
கிடைத்த மாதிரி..!
♥X♥

சா.காந்தன்- சென்றல் கேம்ப்.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 12.05.96 முதல் 18.05.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், செவ்வாய். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

சந்திரன்- கும்பம், மீனம், மேடம், ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் உயர்ச்சி, கடின உழைப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- | பொருள் வரவு, மன மகிழ்வு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | மனக் கலக்கம், பலவித நற்பேறு. | பகல் 12 மணி |
| சனி- | இனசன நன்மை, பிரயாண மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, சுகமுண்டு. | காலை 6 மணி |
| திங்கள்- | பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, வீண் விரயம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வீண் கலக்கம், அந்நியர் நட்பு. | காலை 8 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, பண வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | இனசன நன்மை, காரியசித்தி. | காலை 7 மணி |
| சனி- | பொருள் பேறு, சுக முண்டு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | சுகமுண்டு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பிரயாண மிகுதி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் நன்மை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | பகைமை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் மந்தம், வீண் விரயம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, காரிய சித்தி. | மு.ப. 9 மணி |
| சனி- | உறவினர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், இனசன நன்மை. | மு.ப. 9 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த நன்மை, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | பண வரவு, துயர் நீங்கும். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நஷ்டம், பெண்களால் தொல்லை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | மனக் கலக்கம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை 8 மணி |
| புதன் - | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | காரியசித்தி, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகாயம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, உறவினர் நன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பயணமிகுதி, செலவு அதிகம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, அந்நியர் பகை. | பி.ப. 2 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பண வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- | பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன்., அதிஷ்ட இலக்கம்-7

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பண வரவு. | காலை 6 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் பிரயாணம், மனக் கஷ்டம். | காலை 6 மணி |
| சனி- | துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், வீண் பிரயாசம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், மனப் பயம். | காலை 6 மணி |
| சனி- | வெளியிடவாழ்க்கை, உயர்ந்த எண்ணம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை நீங்கும், பண வரவு. | காலை 7 மணி |
| புதன்- | முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, ஆடம்பர வாழ்க்கை. | காலை 7 மணி |


அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## சின்ன நாய்க்குட்டி



சின்ன வன்ன நாய்க்குட்டி!
சிறப்பு நிறைந்த நாய்க்குட்டி!
பொன்னன் வளர்க்கும் நாய்க்குட்டி!
புதுமையான நாய்க்குட்டி!

சின்ன வாலை ஆட்டுமாம்,
சிங்கம் போலே தோன்றுமாம்,
கண்ணால் காணும் எவரையும்
கருத்தாய்ப் பார்த்துக் கொள்ளுமாம்!

கள்ளர் வந்தால் துரத்துமாம்
கணித்துக் காவல் செய்யுமாம்
தொல்லை தரும் விலங்குகள்
தூரப் போகச் செய்யுமாம்!

பொன்னன் செல்லும் திசையெல்லாம்,
புரிந்து பின்னால் செல்லுமாம்
என்ன வேலை சொன்னாலும்
இயங்கி செய்து முடிக்குமாம்!

மல்லிகா பத்மநாதன்- பறையூர்

ரஸத்திலே தேர்ச்சி கொள்!
ராஜஸம் பயில்!
ரீதி தவறேல்! ருசி பல வென்றுணர்!
ரூபம் செம்மை செய்! ரேகையில் கனி கொள்!
ரோதனம் தவிர்! ரௌத்திரம் பழகு!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# மயூரனின் பொதுநலம்

தர்மபுரி நாட்டின் அரசன் மகன் அஜந்தனும், மந்திரி மகன் மயூரனும் நல்ல நண்பர்கள். இருவரும் சகல கலைகளையும் கற்ற வீரர்கள்.

அஜந்தன் எப்போதுமே தன்னலத்தையே பெரிதாக நினைப்பவன். ஆனால் மயூரனோ இவனுக்கு நேர் மாறு. பிறருக்கு உதவி செய்வது அவனக்குப் பிடித்தமான செயல்.

ஒரு முறை இருவரும் தர்மபுரி நாட்டின் நதிக்கரையில் அமர்ந்தபடி நாட்டு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது இடையில் அஜந்தன்,

"நீ முதன் மந்திரியின் மகனாக இருந்தும் கூட எளிமையான வாழ்க்கை நடத்துகிறாய். ஒரு சாதாரண குடிமகன் போலவே இருக்கிறாய். அத்தோடு பொது நல நோக்கு வேறு. ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"வாழ்க்கையில் வசதிகள் எப்போதும் நிலைத்திருப்பதில்லை. எனக்கு ஆடம்பரமாக வாழ்வதில் இஷ்டமில்லை. எனவே தான் எப்போதும் போல, எல்லாரையும் போல சாதாரண வாழ்க்கை வாழ விரும்புகிறேன், பிறருக்கு உதவி செய்ய விரும்புகிறேன்," என்றான் மயூரன்.

"அப்படியானால் நாம் நம் சுகங்களை எல்லாம் விட்டு விட்டு பிறருக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று சொல்கிறாயா?" என்று கேட்டான் அஜந்தன்.

"நான் அப்படிச் சொல்லவில்லை. எனக்கு ஆடம்பரமாக வாழப்பிடிக்கவில்லை. ஆனால் தொண்டோ, சேவையோ, உதவியோ, தருமமோ எதுவோ- நாம் இவற்றையும் செய்ய வேண்டும் என்று தான் சொல்ல வருகிறேன்," என்றான் மயூரன்.

"என்னால் உன்னைப் போன்று எளிமையாகவும் வாழ முடியாது; பொதுநல நோக்குத்திற்கு என்னால் நேரத்தைச் செலவிடவும் முடியாது," என்றான் அஜந்தன்.

அவர்கள் இருவருமே பேச்சு சுவாரஸ்யத்தில் இருந்ததால் நீருக்கு அடியில் பதுங்கிப் பதுங்கி வந்த முதலையைக் கவனிக்கத் தவறி விட்டனர்.

நதியின் கரைக்கு வந்த முதலை, வினாடி நேரத்தில் அஜந்தனின் காலைக் கவ்வி,



நீருக்குள் இழுத்தது.

இதைச் சற்றும் எதிர்பாராத அஜந்தன், "ஆ!" என்று அலறியபடி நீருக்குள் போய் விழுந்தான்.

முதலை அவனை நீருக்குள் இழுக்க இரண்டு கைகளையும் படபடவென்று நீரில் அடித்தபடி கத்தினான்.

தன் கண்ணெதிரே ஒரு முதலை இளவரசனை இழுத்துச் செல்வதை உணர்ந்த மயூரன் 'விருட்'டென தனது இடுப்பில் இருந்த குறுவாளை கையில் எடுத்துக் கொண்டு நதியில் குதித்தான்.

இளவரசனைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் முதலைக்கு ஈடு கொடுத்து அசுரத்தனமாக நீந்தினான்.

முதலையை நெருங்கிய மயூரன், சட்டென்று நீரில் மூழ்கி, குறுவாளை இறுகப் பற்றி, கீழிருந்து மேலாக முதலையின் வயிற்றில் ஓங்கிக் குத்தினான். முதலை துள்ளியது.

மயூரன் மறுபடியும் குறுவாளால் முதலையின் வயிற்றில் குத்தினான். அப்போது முதலை 'ஆ'வென்று வாயைத் திறந்து துடித்தது.

அதே சமயம்-

அஜந்தனின் கல்கள் முதலையின் வாயிலிருந்து மீண்டன. ஆனாலும் அவனால் நீந்த முடியவில்லை. கைகளாலேயே நீரில் அடித்து அடித்து தத்தளித்தான்.

மயூரன் முதலையுடன் மூர்க்கமாகப் போரிட்டான். குறுவாளால் அதன் வயிற்றில் பல குத்துக்கள் குத்தினான். இந்தப் போராட்டத்திற்குப் பின் முதலை மடிந்தது.

அஜந்தனைத் தாங்கிப் பிடித்து, நீந்திக் கரை வந்து சேர்ந்தான் மயூரன். கரையை அடைந்த அஜந்தன், மயூரனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதான்.

"நாம் தான் மரணத்தின் பிடியில் இருந்து மீண்டு விட்டோமே; ஏன் இப்போது அழுகிறீர்கள்?" என்று கேட்டான் மயூரன்.

"இல்லை. நான் அதற்காக அழவில்லை. நீ மட்டும் என்னைப் போல் சுயநலவாதியாக இருந்திருந்தால் நான் நிச்சயம் அந்த முதலைக்குப் பலியாகியிருப்பேன். உன் பொது நல நோக்கினால் தான் நான் உயிர் பிழைத்தேன். இனி நானும் உன்னைப் போல் பிறருக்கு உதவுவேன்" என்றான்.

அதைக் கேட்டு மிகவும் ஆனந்தமடைந்தான் மயூரன்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கின்றது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.05.1996.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 140**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 138

**பரிசுக்குரியவர்:**
த. கீதாரமணி
நிமால் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன். அன்ரூ. புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. | உ. நெகேமியா பிரசன்னா. ரணபிம றோயல் கல்லூரி, கண்டி. |
| அ. அ. முஹம்மது அஸாம். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | எம்.எம். ஸப்னாஸ். ஐ. ஆர். விலாயோனகபுர, திக்குவல்லை. |
| சு. ஜெறோம். புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | ஜே. றோஷான். பெரியமுல்லை, நீர்கொழும்பு. |
| குழந்தைவேல் நிறஞ்சன். உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை. | செல்வி. சி. வினோதினி. சென். ஜோன்ஸ் மகாவித்தியாலயம், மட்டக்குளி. |
| கே. கோபிகா. யாழ்ப்பாண வீதி, வவுனியா. | க. சந்திரிக்கா. நாகொல்ல வீதி, மாத்தளை. |

## வாரம் ஒரு நாடு
### மெக்ஸிகோ

**தலைநகர்**-மெக்ஸிகோ சிட்டி
**பரப்பு** - 19,72,547 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை** - 9 கோடி
**மொழி** - ஸ்பானிஷ், அமேரிந்தியான் மொழிகள்
**எழுத்தறிவு** - 92%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்**- பெஸோ
**தனி நபர் வருமானம்** - 3950 டொலர்.



**அமைவிடம்:**
மத்திய அமெரிக்காவின் ஐக்கியக் குடியரசு நாடு மெக்ஸிகோ.

**வரலாறு:**
ஸ்பெயினின் காலனியாக இருந்தது. 1821ல் சுதந்திரமடைந்தது. 1923 ல் குடியரசானது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

**பொருளாதாரம்:**
மேக்ஸிகோவின் 80 சதவிகித நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்றதல்ல. எனவே பெரும் பான்மையான உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. உள்நாட்டுத் தேவையின் 85% எண்ணெய் இங்கேயே கிடைக்கிறது. நிலக்கரிச் சுரங்களும் உள்ளன.

## வானவில்(RAINBOW)

★ 'விப்ஜியோர்' (VIBGYOR) என்பது எதைக் குறிக்கிறது?

வானவில்லில் உள்ள ஏழு வர்ணங்களின் முதல் எழுத்துக்களைக் குறிக்கும்.

V ஊதா (VIOLET), I-கரும்நீலம் (INDIGO), B- நீலம் (BLUE), G-பச்சை (GREEN), Y-மஞ்சள் (YELLOW), O-செம்மஞ்சள் (ORANGE), R-சிவப்பு (RED) ஆகியவை யையே குறிக்கிறது.



★ வெள்ளை ஒளி என்பது இந்த ஏழு நிறங்களின் கலவையே என்பதைக் கண்டு பிடித்தவர் யார்?

புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடித்த சேர் ஐஸாக் நியூட்டன் இதைக் கண்டு பிடித்தார்.

★ எப்போது கண்டு பிடித்தார்?

நியூட்டன் 1665 ம் ஆண்டு ஒளியின் தன்மைகளைப் பற்றி படித்துக் கொண்டிருந்தார். அப்போது முக்கோணக் கண்ணாடியை ஒளி செல்லும் வழியில் வைத்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அப்போது திரையில் இந்த ஏழு வர்ணங்களும் விழுவதைக் கண்டார்.

★ ஏழு வர்ணங்களின் கூட்டுக்கலவைதான் வெள்ளை என்ற உண்மையை எந்த சாதனத்தைக் கொண்டு விளக்கினார்?

நியூட்டனின் கலர் டிஸ்க்கைக் கொண்டு விளங்கினார்.

★ மாலைப் பொழுதில் வானத்தின் எந்தத் திசையில் வானவில் உருவாகிறது?

கிழக்குத் திசையில்- அதாவது சூரியனுக்கு எதிர்த்திசையில்.

## பல்நோய்கள் யாவை?

பல்நோய்கள், பற்சொத்தை (Dental Caries),பற்சீழ் (Pyorrhoea) என இருவகைப்படும். பற்சொத்தை என்பது பல் எனாமல் கெட்டு தந்தினி (Dentine)யும் கெடுவதாகும். நோயுற்ற பல் அரிக்கப்பட்டு குழிகளும் சில வேளைகளில் துளைகளும் ஏற்படலாம். தொடக்கத்திலேயே மருத்துவம் செய்யாவிடில் நோய் முற்றிப் பல் விழுவதுடன் நோய் மற்றப் பகுதிகளுக்கும் விரைவில் பரவக் கூடும்.

பற் சொத்தைக்கு முக்கிய காரணம் கார்போ ஹைகரேட் மிகுந்துள்ள வெல்லப் பொருட்கள், மாவுப்பொருட்கள் ஆகிய வற்றை மிகுதியாக உண்பதாகும். குடிக் கும் நீரில் 10 லட்சம் துளியில் ஒரு துளியளவு புளோரின் (Fluorine) இருந்தால் பற்சொத்தை வராது. இது கூடினாலோ குறைந்தாலோ பற்சொத்தை உண்டாக வாய்ப்புண்டு.

பல் ஈறுகளில் அழற்சியேற்பட்டுச் சீழ்வருவது பற்சீழ் எனப்படும். இந்நோயால் பல்லின் வேர் உள்ள குழியின் எலும்பு அரிக்கப்பட்டு விடும். இறுதியில் பல்லே விழுந்துவிடும்.

## விடுகதைகளும் விடைகளும்

1.வளைக்க முடியுது; ஒடிக்க முடியவில்லை. அது என்ன?
2.பறிக்க பறிக்க பெரிதாகின்றது. அது என்ன?
3. பையில் தான் இருந்தால் மற்றொன்றை இருக்கவிடாது. அது என்ன?
4.வெட்கம் கெட்ட புளிய மரம்; வெட்ட வெட்ட வளருது. அது என்ன?
5.தொட்டால் பிடித்துக் கொள்ளும்; பசையல்ல, விட்டால் வேலை செய்யும் எந்திரமும் அல்ல; அது என்ன?

**விடைகள்**

1. தலைமயிர்
2. குழி
3. கிழிசல்
4. தலைமயிர்
5. மின்சாரம்.

தொகுப்பு: எம். கண்ணன்

## பூங்காரி கங்காரு

அவுஸ்திரேலியாவில் பூங்காரி கங்காரு என்னும் ஒரு வகை கங்காரு இருக்கின்றது. பார்ப்பதற்கு நாய் போன்று தோற்றமளிக்கும் இது மரங்களில் தான் வசிக்கும். இதற்கு நீளமாக புசு புசு என்று வால் இருக்கும். இது மட்டுமன்றி இதன் கால்களின் அடிப்பாகம் குஷன் போன்று இருக்கும். இருந்தாலும் இது கரடு முரடாக இருப்பதால் மரக்கிளைகளில் இருந்து வழுக்கிவிடாமல் பாதுகாக்கிறது. நீண்ட நகங்களைக் கொண்ட இது மரக்கிளைகளில் தங்கு தடையின்றி நடக்கிறது. இவ்வகை கங்காருவின் பின்கால்கள் குட்டையாகவும் முன் கால்கள் நீளமாகவும் இருக்கும்.





படிப்பகம்

www.padippakam.com

# மனிதா! கவனி!



உலகில் எத்தனை விந்தைகள். படத்தில் பாருங்கள். நாயாரிடம் பால் குடிக்கின்றன இரண்டு பூனைக் குட்டிகள். தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. கடந்த ஒரு மாதகாலமாக இந்த நாயாரின் உபயத்தில்தான் பால் குடித்து உயிர் வாழ்கின்றன இரண்டு பூனைகளும்.

இரண்டாவது படம், நம்நாட்டில் 'கிளிக்' செய்யப்பட்டது.

பசு மாட்டிடம் பால் குடித்து பசியைத் தீர்க்கிறார் நாயார். தன் கன்றுக் குட்டி பால் அருந்த அனுமதிப்பது போலவே நாயாருக்கும் அனுமதி கொடுத்திருக்கிறது பசுமாடு.

வளர்ப்பு பிராணிகள் மத்தியில் தம்மை வளர்க்கும் மனிதர்களுக்கு புத்தி சொல்லும் எண்ணம் வந்துவிட்டதோ. அதுதான் இப்படிச் செய்கையில் காட்டுகின்றனவோ! மனிதா திருந்திவிடு! பேதம் கொல்! கேட்பானா?!



## புயல் பறித்த பூ




படத்தில் விமான ஓட்டியின் ஆசனத்தில் அமரத் தயாராகும் சிறுமியின் பெயர் ஜெசிகா. வயது, ஆக. 7 மட்டும். அமெரிக்காவில் சான்பிரான்சிக்கோ பகுதியைச் சேர்ந்தவள். அப்பா பெயர் லாயிட்.

சிறுவயதிலேயே சிறுமி ஜெசிக்காவுக்கு அபாரத்திறமை இருப்பதைக் கண்ட அப்பா லாயிட் அவளுக்கு விமானம் செலுத்தக் கற்றுக்கொடுத்தார். ஜெசிக்காவுக்கு கற்பூர மூளை. சொல்லிக்கொடுத்ததை புரிந்து கொண்டு விமானம் செலுத்தி சாதனை படைத்தாள். எல்லோருக்கும் வியப்பு.

கடந்த மாதம் 10 ம் திகதி (10.4.95) அப்பா லாயிட்டுடன் விமானம் ஓட்டிக் கொண்டிருந்தாள். திடீரென்று பலத்த புயல் அடித்தது. புயலில் சிக்கிய விமானம் விபத்தில் சிக்கியது. விமானம் செலுத்திய சுட்டிப் பெண் ஜெசிக்காவும், அருகில் இருந்த தந்தையும் பலியானார்கள். இந்தப்படம் விமானம் புறப்பட முன்னர் எடுக்கப்பட்டது. சாவை சந்திக்கப் போகும் விபரீதம் உணராமல் புன்னகைக்கும் சிறுமி! மகா சோகம்! சாவே உனக்கு ஒரு சாவு வராதா?

## தகவல் பெட்டி

## மறந்தபடி உண்ணலாம்



படத்தில் இருப்பது என்ன தெரியுமா? ரசியாவின் விண்கலம். 'பூரன்' என்னும் பெயர் கொண்டது. விண்ணுக்கு சென்று வந்த பின்னர் உபயோகம் இல்லாமல் கிடந்தது. யாரோ சில புத்திசாலி ரசியர்கள் அரசின் அனுமதியுடன் இதனை ஹோட்டலாக்கி விட்டார்கள்.

இதில் ஒரு அதிசயம் இருக்கிறது. விண்கலத்துக்குள் சாப்பிட செல்பவர்கள் காற்றால் மிதந்து கொண்டே சாப்பிடலாம். தம்மை விண்வெளி வீரர்கள் போல அவர்கள் கருதிக்கொள்லாம். சுமார் 45 நிமிடங்கள் காற்றில் மிதந்துகொண்டு சாப்பிடமுடியும். கட்டணம் அதற்குத் தனி.

இந்த விண்வெளி ஹோட்டலுக்குள் செல்ல முன்னர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படவேண்டும்.

## ஓரே மிதி!



திருட்டுகளில் இரண்டு வகை உண்டு வசதியாக வாழத் திருடுவது முதல் வகை. வயிற்றுப் பசிக்காக திருடுவது இரண்டாவது வகை.

நைரோபி நகரில் ஏழைச் சிறுவன் ஒருவன் பெண் ஒருவரின் நெக்கலசை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். கூட்டம் துரத்தியது. பசிக்களையால் ஓட முடியாமல் மாட்டிக் கொண்டான் சிறுவன். ஆளாளுக்கு தர்ம அடி கொடுத்தனர். சிறுவன் சுருண்டு விழுந்தான். மனிதாபிமானமே துளியும் இல்லாமல் சிறுவனை தெருவில் போட்டு கழுத்தில் ஏறி மிதித்தனர். மறுநாள் இப் புகைப்படம் பத்திரிகைகளில் வெளிவந்தபோது கடும் கண்டணங்கள் எழுந்தன.

உதைத்து மிதித்தபின் கண்டித்து என்ன பலன்? மனிதாபிமானம் சர்வதேச ரீதியாக தரம் தாழ்ந்து வருகிறதோ?

## நடையா இது நடையா?



நாய்களை வைத்து கண்காட்சி. பன்றிகளை வைத்து கண்காட்சி. பாம்புகளை வைத்து விநோதம் என்று புதுப்புது சமாச்சாரங்கள் பொழுது போக்காகி வருகின்றன.

படத்தில் இருப்பது தாரா. காலைப் பாருங்கள், குழந்தைகள் அணியும் சப்பாத்துப் போட்டிருக்கிறது அல்லவா. குழந்தைகளைப் போலவே சப்பாத்துடன் அழகாக நடக்கவும் பழகி இருக்கிறது. அதற்காகவே மெச்சிக்கோவில் நடைபெற்ற தாரா கண்காட்சியில் முதல் பரிசை வென்றுவிட்டது. பரிசுத்தொகை ஆயிரம் அமெரிக்க டொலர்கள். கிட்டத்தட்ட 55 ஆயிரம் ரூபாய்கள்! பணமுள்ளவர்கள் பரிசு கொடுக்கிறார்கள். நீங்கள் யாரும் வாயைப் பிளக்க வேண்டாம்.



படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## கனகாவின் சிபாரிசு

முன்னாள் நடிகை தேவிகாவுக்கு தனது மகள் கனகாவை எப்படியாவது முன்னுக்கு கொண்டுவந்துவிட கொள்ளை ஆசை. தற்போது 'கட்டப் பஞ்சாயத்து' படத்தில் கார்த்திக்குடன் நடித்துவருகிறார் கனகா. படவாய்ப்புக்கள் குறைச்சல்தான். கிசு-கிசுவுக்கு மட்டும் குறைச்சல் இல்லை.

பார்த்தார் தேவிகா, சொந்தமாக ஒரு படம் தயாரித்து கனகாவை நடிக்க வைக்கப் போகிறார். கனகாவின் பலத்த சிபாரிசு காரணமாக கதாநாயகனாக கார்த்திக் நடிக்கலாம் என்று தகவல்.

## சங்கீதாவுக்கு காவல்

நடிகை சங்கீதாவுக்கு பாதுகாப்பாக செல்கிறார் அவரது தாய்க்குலம். காதல் காட்சிகளில் சங்கீதா நடிக்கும் போது நடுவர் மாதிரி செயல்படுகிறார் தாய்க்குலம். நடிகர்களுடன் கட்டிப்பிடித்து நடிக்கும்போது "மெதுவா, மெதுவா.." என்று எச்சரிக்கை குரல் எழுப்புகிறாராம்.

அதனாலோ என்னவோ இயக்குநர்கள் சங்கீதாவின் தாயார்மீது எரிச்சலில் இருக்கிறார்களாம்.

## நக்மாவின் நன்றி

கார்த்திக்கும்-நக்மாவும் முதன் முதலாக ஜோடி சேர்ந்துள்ள படம் மேட்டுக்குடி. நக்மாவின் நடிப்பைப் பார்த்துவிட்டு கார்த்திக்தான் சிபாரிசு செய்தாராம். அதற்கு நன்றி சொல்லும் வகையில் கார்த்திக்குடன் காதல் காட்சிகளில் நெருக்கமாக நடித்து ஒத்துழைக்கிறார் நக்மா.

அன்புள்ள மன்னவனே
ஆசை காதலனே
இதயம் புரியாதா
என் நிலைமை தெரியாதா? என்று தொடங்கும் பாடலும், படமாக்கப்பட்டுள்ளது.

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தை இயக்கிய குஷ்புவின் காதலர் சி. சுந்தர் இயக்குகிறார். இசை, சிற்பி, பாடல்கள், பழனிபாரதி.

முகப்பில்
விஜயசாந்தி
படம்:-வேட்டைக்காரி
பார்த்திபன்
படம்:-பாரதி கண்ணம்ம

## ஸ்ரீதேவிக்கு டும் டும்

'தேவராகம்' படத்தின் பின்னர் தமிழ் படங்களில் ஸ்ரீதேவி தொடர்ந்து நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஸ்ரீதேவி வேறு முடிவில் இருப்பதுபோலத் தெரிகிறது.

இந்திப்பட அதிபர்கள் இருவருக்கு அவர்கள் கொடுத்த முன் பணத்தை திருப்பி அனுப்பிவிட்டார் ஸ்ரீதேவி. அதனால் வேறு நடிகைகளை ஒப்பந்தம் செய்துள்ளார்கள். விரைவில் திருமணம் செய்யப் போவதால் புதிய படங்களில் நடிப்பதில்லை என்று முடிவாம். நல்ல மணமகன் கிடைக்க வாழ்த்துவோம்.

## இளையராஜாவின் அடுத்த சாதனை

இசை ஞானி இளையராஜா இசையில் சமீபத்திய ஹிட் காலாபாணி படப்பாடல்கள் 30 லட்சம் ரூபாய் செலவில் பின்னணி இசை வெளுத்துவாங்கியுள்ளது. இசைக்காக பணத்தை கொட்டியது வீணாகவில்லை. இளையராஜாவுக்கும் திருப்தி. (காலாபாணிதான் தமிழில் சிறைச்சாலையாக ஓடிக் கொண்டிருக்கிறது)

விரைவில் அமெரிக்கா போகிறார் இளையராஜா. இலண்டன் சென்று 'சிம்பொனி' இசை சாதனை புரிந்ததுபோல, அமெரிக்கா சென்று 'பொப்' 'ஜாஸ்' போன்ற இசையில் சாதனை படைக்கத் திட்டமிட்டுள்ளாராம்.

40 நாட்கள் அமெரிக்காவில் தங்கியிருந்து இசையில் கொடி பறக்க விட்டு திரும்பப் போகிறார்.

## புதிய தத்துவம்

"சைட் அடிக்கணும், ஜாலியா இருக்கணும், ஆவா லவ் பண்ணக் கூடாது. ஏன தெரியுமா? லவ் பண்ணினா இதயம் சுருங்கி, அது ஒருத்திக்கு மட்டுமே சொந்தம்னு ஆயிடும். என்னைக்குமே அது பிரச்சனைதான். அதனாலதான் சொல்றேன், யாரையும் லவ் பண்ணக்கூடாது? சைட் அடிக்கணும்..." இப்படியொரு தத்துவத்தை எடுத்துவிட்டார் விக்னேஷ். 'வானி மஹால்' படத்தில் வரும் ஒரு காட்சிக்காகத்தான் இந்த வசனம் பேசப்பட்டது.

விக்னேஷ், சுவலட்சுமி ஜோடி நடித்து விரைவில் வெளியாகப் போகும் படம் அது.



சரத்குமார்-நக்மா படம்: அரவிந்தன்

## 'பெரிய மனுஷன்' ரகுவரன்

'பெரிய மனுஷன்' என்ற பெயரில் நெப்போலியனை கதாநாயகனாக வைத்து புதிய படம் ஒன்றை இயக்கவிருந்தார் பாலுமகேந்திரா. பின்னர் அத்திட்டத்தை கைவிட்டுவிட்டார். 'பெரிய மனுஷன்' என்ற பெயரை மட்டும் விடவில்லை. ரகுவரனை கதாநாயகனாகப் போட்டு 'பெரிய மனுஷன்' படத்தை தொடரப் போகிறார். கதாநாயகனாக நடித்து சூடு கண்டவர் ரகுவரன். மறுபடியும் எதற்கு விஷப் பரீட்சை?

## மறுபடியும் அதே ஜோடி

'வான்மதி' படத்தின் வெற்றியை அடுத்து அதே பட நிறுவனம் தயாரித்துவரும் படம் 'காதல் கோட்டை'. அஜித்குமார்- ஹீரா, தேவயாணி ஆகியோர் நடிக்கிறார்கள். அதனையடுத்து மூன்றாவதாக தயாராகும் படம் 'நினைவே ஒரு பறவை'. அதிலும் அஜித்குமார்தான் கதாநாயகன். 'வான்மதி' படத்தில் அவரது ஜோடியாக நடித்த சுவாதிதான் கதாநாயகி. சுவாதியும், அஜித்குமாரும் நெருக்கமாக மற்றொரு வாய்ப்பு.

## அவசரம்-அவசரம்

தமிழக காவல் துறையில் துணிச்சலான பெண் அதிகாரி திலகவதி. காவல்துறையில் இருந்தபடியே பல கதைகள், நாவல்கள் என்று எழுதிக் குவித்திருக்கிறார்.

திலகவதி எழுதிய கதை 'பத்தினிப் பெண்' என்ற பெயரில் திரைப்படமாக வந்தது.

இப்போது மற்றொரு கதை திரைப்படமாகிறது. படத்திற்கு வைக்கப்பட்டுள்ள பெயர், 'அவசரம்'

படத்தை இயக்குபவர் திலகவதியின் மகன். பெயர் பிரபுதிலக். சதீஷ் என்னும் புதுமுகம் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக சங்கீதா நடிக்கிறார். ராதிகா, வடிவுக்கரசி, தலைவாசல் விஜய், பெரியார்தாசன் ஆகியோரும் நடிக்கின்றனர்.



## மூன்று வித்தியாசங்கள்

புதிய படம் ஒன்றுக்கு விதியாசமாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். படத்தின் பெயர்; 'அழகி ஆண்களுக்கு மட்டும்'

படத்தின் இயக்குநர் புதியவர். அவரது பெயரும் வித்தியாச ரகம்தான். அவரது பெயர், பத்மாமகன்.

அதுமட்டுமல்ல மற்றொரு வித்தியாசமும் படத்தில் இருக்கிறது.

முதலிரவுக் காட்சியில் கட்டிலில் மணமகள் மட்டும் இருக்கிறாள். மணமகன் வெளியே செல்கிறான். ஏன் என்று கேட்கிறாள். "இதுவரைக்கும் எந்த ஆம்பளையும் இல்லாமல் இரவை நீ சந்திச்சதில்லை. ஆம்பளையே இல்லாத இந்த இரவுதான் உனக்கு முதலிரவு" என்கிறான் மண மகன்.

விபசார விடுதியில் இருக்கும் அழகியை திருமணம் செய்கிறார் கதாநாயகன். அதனால்தான் முதலிரவில் அப்படி ஒரு வித்தியாசம்.

மோகமுள் படத்தில் நடித்த அபிஷேக் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகி புதுமுகம். பெயர் பத்மினி.

படத்தின் பெயரை சொல்வதில்தான் சங்கடம். படம் பார்க்க புறப்படும்போது 'என்ன படத்திற்கு போகிறீர்கள்?' என்று கேட்டால் சட்டென்று சொல்லிவிடமுடியாத பெயரல்லவா!

## இளமையின் இரகசியம்

இந்தியில் காலைவிட்டுப் பார்த்துவிட்டு மறுபடி தமிழுக்கு வந்தவர் ஹீரா.

'காதல் கோட்டை' படத்தில் அஜித்குமாருடன் நடித்துக் கொண்டிருக்கிறார்.

அஜித்குமார் போன்ற இளம் ஹீரோக்களுடன் நடிக்கிறீர்களே. ஒத்து வருமா? என்று கேட்டதற்கு ஹீரா சொன்ன பதில் இது. "அஜித் மாதிரி சின்ன பசங்க கூட நடிக்கும் போது நான் இன்னமும் இளமையாகிறேன். இந்தியில் பாருங்கள். ஸ்ரீதேவி, மாதுரி டிக்ஷித், ரேகா, ரவீணா எல்லாம் அவங்களவிட சின்ன பசங்க கூட நடிச்சு பிரபலம் ஆனாங்க." என்கிறார் ஹீரா.

## கார்த்திக்கின் குறும்பு

கார்த்திக் ஒரு குறும்புக்காரர் என்பது பிரபலமான சமாச்சாரம். தன்னோடு நடிக்கும் நடிகைகளோடு அவர் செய்யும் குறும்புகளில் ஒன்று பட்டப்பெயர் வைப்பது.

ரேவதிக்கு புதுமைப் பெண், குஷ்புவுக்கு சைனீஸ் பட்லர், சவுந்தர்யாவுக்கு குலாபி. அந்தப் பட்டியலில் நக்மாவுக்கு வைத்துள்ள பட்டப் பெயர் என்ன தெரியுமா? ஜிலேபி. கார்த்திக் பொல்லாத ஆளப்பா. அது சரி, ஜிலேபி என்றால் என்ன? சுவையான தின்பண்டம்!

## என்ன பெயர் சொந்தப் பெயர்?

உங்கள் அபிமான நடிகர், நடிகைகளது சொந்தப் பெயர்களை அறிய ஆசைப்படுவீர்கள்தானே! இதோ ஒரு பட்டியல்.

| | |
|---|---|
| எம்.ஜி.ஆர் | -எம்.ஜி.ராமச்சந்தர். |
| சிவாஜிகணேசன் | -வி.சி. கணேசன். |
| கமலஹாசன் | -கமலஹாசன். |
| ரஜினிகாந்த் | -சிவாஜிராவ். |
| விஜய்காந்த் | -விஜய்ராஜ். |
| சத்யராஜ் | -ரங்கராஜ். |
| பிரபு | -பிரபுராம். |
| கார்த்திக் | -முரளி. |
| சிவகுமார் | -பழனிச்சாமி |
| ராஜ்கிரண் | -மொய்தீன் அப்துல் காதர். |
| ராமராஜன் | -குமரேசன். |
| விஜய் | -ஜோசப் விஜய். |
| ராம்கி | -ராமகிருஷ்ணன். |
| அர்ஜுன் | -சீனு. |
| நெப்போலியன் | -குமரேசன். |
| ஆனந்தராஜ் | -பழனிராஜ். |
| கவுண்டமணி | -மணி. |
| மணிரத்னம் | -சுப்பிரமணி. |
| பாரதிராஜா | -சின்னச்சாமி. |
| குஷ்பு | -நக்கத் |
| சுவாதி | -லீனா |
| ரேவதி | -ஆஷா கேளுண்ணி. |
| விஜயசாந்தி | -சாந்தி. |
| அர்ச்சனா | -சுதா. |
| கனகா | -மகாலட்சுமி. |
| நக்மா | -நந்திதா. |
| சில்க்சுமிதா | -விஜயலட்சுமி. |
| விசித்ரா | -ஜெயந்தி. |
| ரோஜா | -ஸ்ரீலதா. |
| சங்கவி | -காவ்யா. |
| ரம்பா | -விஜயலட்சுமி. |
| கஸ்தூரி | -ஷன்மதி. |
| கே.ஆர்.விஜயா | -தெய்வநாயகி. |
| ரஞ்சிதா | -ஸ்ரீவள்ளி. |



கார்த்திக்-நக்மா படம்: மேட்டுக்குடி



நவீன்-சி
படம் க



படிப்பகம்

www.padippakam.com



பிரபு-ரம்பா
படம் சிவசக்தி

# சங்கவி விடு தூது

சங்கவி அப்படியொன்றும் பெரிய நடிகையல்ல. கவர்ச்சி என்று பார்த்தால் கூட சங்கவியை தூக்கிச் சாப்பிடுமளவுக்கு பல நடிகைகள் இருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் சங்கவிக்கு பட வாய்ப்புக்கள் குவிவது எப்படி என்று பல முன்னணி நடிகைகள் முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

'பகவத் சிங்' படத்தில் நெப்போலியன் ஜோடியாக சங்கவி நடிக்கிறார். முதலில் வேறு ஒரு நடிகையைத்தான் ஒப்பந்தம் செய்திருந்தார்கள்.

நெப்போலியனை தனது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார் சங்கவி. விருந்து பிரமாதம். அன்றிரவே படத்தின் இயக்குநருக்கு நெப்போலியனிடம் இருந்து போன் வந்தது. "சங்கவி நடித்தால்தான் நன்றாக இருக்கும்." என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் நெப்போலியன்.

'பகவத் சிங்' படத்தில் மட்டுமல்ல, வேறு சில படங்களிலும் சக நடிகைகளின் வாய்ப்புக்களை இப்படித் தட்டிப் பறித்துள்ளார் சங்கவி.

பாடல் காட்சிகளில் நடிக்கும் போது சுண்டுவிரல் மந்திரம் போட்டு கதாநாயகன்களை வசியப்படுத்துகிறார் என்று ஏற்கனவே முணு முணுப்புக்கள் இருக்கின்றன.

'மன்னவா' படத்தில் பிரசாந்த் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார். 'புது நிலவு' படத்தில் ரமேஷ் அரவிந்த் ஜோடியாக நடிக்கிறார். வளர்ந்துவரும் இளம் ஹீரோக்கள்தான் சங்கவியின் குறி.

இறுதியாக சங்கவி விடுத்துள்ள தூது அஜித்குமாருக்கு.

அஜித்குமார் வலையில் சிக்குவாரா? விபரம் தெரிந்த சங்கவி வீசியுள்ள வலையில் சிக்காமல் இருப்பது கஷ்டம்தான்.



சங்கவி
படம் புது நிலவு

# 'அரசியலுக்கு வருவேன்'
## விஜயகாந்த் அறிவிப்பு

சமீபத்தில் கலைஞர் கருணாநிதியின் தரையுலகப் பொன்விழாவை சிறப்பாக நடத்தி முடிக்க காரணமாக இருந்தவர் விஜயகாந்த். அரசியல் தொடர்பான கேள்விகளுக்கு விஜயகாந்த் சொல்லியுள்ள பதில்கள் இவை.

**கே:- நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**விஜய:-** நடிப்பு என்பது என் போன்றவர்களின் தொழில். நடிகர்கள் என்று தரம்பிரித்துப் பார்க்காதீர்கள். முதலில் மனிதராகப் பாருங்கள். எங்களுக்கு வாக்குப் போட உரிமை இருக்கிறது. வாக்குப் போட உரிமையுள்ள எவருமே அரசியலில் ஈடுபடவும் உரிமை உள்ளது.

**கே:- நீங்கள் அரசியலில் ஈடுபடுவீர்களா? எப்போது?**

**விஜய:-** நான் நிச்சயமாக அரசியலுக்கு வருவேன். அது எப்போது என்பதை திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. எனக்கே தெரியாது. அது வரை தனியாகவே என்னாலான தொண்டுகளை செய்து கொண்டிருப்பேன்.

தமிழன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். அதுதான் என் அடிப்படைக் கொள்கை." என்று கூறியுள்ளார் விஜயகாந்த்.

## புதிய கூட்டணி

வடிவேலு தனியாக நடித்துப் பார்த்தார். ஆரம்பத்தில் இருந்த வரவேற்பு தற்போது இல்லை. கவுண்டமணி செந்தில் ஜோடி தொடர்ந்து தூள் கிளப்புகிறது.

இரட்டையராக நடிக்கும் நகைச்சுவை நடிகர்களுக்குத்தான் மவுசு இருப்பதை புரிந்து கொண்டார் வடிவேலு. பயில்வான் ரங்கநாதனை தனது ஜோடியாக சேர்த்துக் கொண்டார். 'சுந்தர புருஷன்' உட்பட ஐந்து படங்களில் இருவரும் கூட்டுச்சேர்ந்து நடிக்கிறார்கள். இந்தக் கூட்டணி நிலைக்குமா என்று பார்க்கலாம்.

# மினி சினி

* பிரபுவின் நூறாவது படமான 'ராஜகுமார'னை அடுத்து நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிவாஜி ஃபிலிம்ஸ் புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. இதில் ஹீரோவாக கமல் நடிக்கவிருக்கிறார்.

* அர்ஜுனுக்கு ஜோடியாக 'எங்க ஊரு சிப்பாய்' படத்தில் அறிமுகமான ஸ்ரீபானு தனது பெயரை தற்போது பிரியவதனா என்று மாற்றி வைத்திருக்கிறார்.

* அமிதாப்பச்சன் கோப்பரேஷன் நிறுவனம் தமிழில் முதன் முறையாக தயாரிக்கும் 'உல்லாசம்' படத்தில், 'மீரா', 'காவல் கீதம்' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்த விக்ரம் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார்.

* ராம்கி-சங்கவி ஜோடியாக நடிக்கும் 'ஒன் பை டூ' படத்தின் பெயரை 'பொண்டாட்டி போட்ட முடிச்சு' என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள்.

* 'ஈரமான ரோஜாவே' படத்தில் அறிமுகமான மோகினி தற்போது ரிஷி கபூருக்கு ஜோடியாக இந்திப் படமொன்றில் நடித்து வருகிறார். இதற்கு முன்னர் 'டான்ஸர்' என்ற இந்திப் படத்தில் மோகினி நடித்துள்ளார்.

* நதியாவைத் தொடர்ந்து அம்பிகாவும் அமெரிக்காவிலிருந்து கோடம்பாக்கத்திற்கு வந்து விட்டார். இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர் இயக்கும் 'கல்கி' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார் அம்பிகா.

* மலையாள நடிகரும், சரிதாவின் கணவருமான முகேஷ் முதன் முறையாக படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்திற்கான கதை-திரைக்கதை வேலைகள் முடிவடைந்துவிட்டன.

* பார்த்திபன் தற்போது நடித்து வரும் 'பாரதி கண்ணம்மா' படத்தில் முதலில் கார்த்திக் நடிப்பதாக இருந்தது. பின்னர் முரளி நடிப்பதாக இருந்தது. ஏனோ கடைசியில் இருவரையும் விட்டு விட்டார் தயாரிப்பாளர்.

* பிரபு நடிக்கும் 'பாஞ்சாலங்குறிச்சி', 'சத்யராஜ்' நடிக்கும் 'சேனாதிபதி' ஆகிய இரு படங்களை ஒரே நேரத்தில் தயாரித்து வரும் கே. பாலு அடுத்து கார்த்திக் நடிக்கும் ஒரு படத்தையும் தயாரிக்கவிருக்கிறார்.

* 'மன்னவா' படத்தில் ஊர்வசியுடன் இணைந்து சொந்தக் குரலில் ஒரு பாடலைப் பாடிய பிரசாந்திற்கு, தனது படங்களில் தொடர்ந்து பாடும் எண்ணம் உள்ளதாம்.

## புயல் ரம்பா

நக்மாவுக்கு போட்டியாக தமிழில் ரவுண்ட் வந்து கொண்டிருப்பவர் ரம்பா. 'செங்கோட்டை' படம் வெளிவந்திருக்கிறது. அதிலும் ரம்பா தன் திறமையை காட்டியிருக்கிறார்.

'சுந்தர புருஷன்' படம் விரைவில் வெளிவரவிருக்கிறது. அது தவிர பிரபுவுடன் 'சிவசக்தி' படத்தில் ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறாராம்.

இந்த ஆண்டுக்குள் தமிழ்ப் பட ரசிகர்களை கைக்குள் போட்டுவிடுவது என்ற நம்பிக்கையோடு கவர்ச்சிப் புயலாக சுழன்று கொண்டிருக்கிறார். புயல் என்ன பாடு படுத்தப் போகிறதோ?!

## மூன்று கதாநாயகிகள்

இரண்டு கதாநாயகிகளுடன் நடித்து அலுத்துவிட்டது சத்யராஜுக்கு.

அதனால் 'வள்ளல்' படத்தில் மூன்று கதாநாயகிகளை ஜோடிகளாக்கியுள்ளனர். மீனா, ரோஜா, சங்கீதா மூவரும் கதாநாயகிகள்.

சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தயாரிக்கும் பிரமாண்டமான படம் வள்ளல்.

அருவாள் மீசையோடு பெரிய மனித தோரணையில் சத்யராஜுக்கு மேக்-அப் போட்டுள்ளார்கள்.

# தயாராகிறான் கடத்தல் மன்னன்

மோகன்லால்-பிரபு நடித்த சிறைச்சாலை படம் நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படமும் வெளியான பின்னர் தமிழில் மோகன்லாலின் மார்க்கெட் சூடு பிடிக்கும்.

தற்போது மலையாளத்தில் மோகன்லால் நடிக்கும் படங்கள் தமிழிலும் வெளியிட ஏற்றவகையில்தான் தயாரிக்கப்படுகின்றன.

'கடத்தல் மன்னன்' என்னும் பெயரில் தமிழ்-மலையாளம் இரண்டிலும் புதிய படம் ஒன்று தயாராகி வருகிறது. மோகன்லால் கதாநாயகனாக நடிக்க, பிரகாஷ்ராஜ் வில்லனாக நடிக்கிறார். பிரேமா, ஸ்ரீவித்யா, சார்வி, கிட்டி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை, தேவா, பாடல்கள், வைரமுத்து, வசனம், வியாகத் அலிகான், கதை, திரைக்கதை, இயக்கம் சுரேஸ் கிருஷ்ணா. 'பாட்ஷா' 'வீரா' போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர்.

# சத்யராஜ் கம்புச் சண்டை

சத்யராஜ்-சவுந்தர்யா-சுகன்யா ஜோடியாக நடித்து வரும் படம் சேனாதிபதி. படப்பிடிப்புக்கள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

300 குதிரை வண்டிகளில் சத்யராஜை வில்லன் கோஷ்டி துரத்துகிறது. அவர்களுடன் சத்யராஜ் கம்புச் சண்டை போடும் காட்சி பிரமாண்டமாக படமாக்கப்பட்டுள்ளது.

நம்பியார், பொன்னம்பலம், மனோரமா, கவுண்டமணி, செந்தில், விஜயகுமார், ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கின்றனர்.





ராஜ்கிரண்-வனிதா
படம் மாணிக்கம்

www.padippakam.com

# வீட்டிலே விசேஷம்

சில வீடுகளில் கால் வைத்தாலே, உடம்பு கூசிப் போகும். குப்பையும் கூளமும் தூசியுமாக இருக்கும். கண்ட இடத்தில் சாமான்கள் கண்டபடி இறைத்துக் கிடக்கும். வீடு என்பது குழந்தைகள், பெரியவர்கள் எல்லோரும் இருக்கும் இடம். உண்டு.



இருந்து, உறங்கி, படுத்து எழுந்திருக்க வேண்டிய இல்லத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டாமோ?

"வீட்டில் குடும்ப அங்கத்தவர்கள் அதிகம். அவர்களுக்கு சமைத்துப்பரிமாறவே நேரம் சரியாக இருக்கிறது. இப்படி இருக்கும் போது வீட்டைத் தூசி தட்டுவது எங்கே? சுத்தமாக்குவது எங்கே?" என்று சிலர் சொல்வார்கள்.

வீட்டை அழகுபடுத்த, சுவர் அலங்காரம், தரை விரிப்பு, கலைப்பொருட்கள் வேண்டும் என்றில்லை. வீட்டிலுள்ள புழங்கும் சாமான்களைத் தூசியில்லாமல், பளிச் சென்று வரிசை வரிசையாக வைத்திருந்தாலே போதும்! வீடு, வீடாக இருக்கும்.

வீட்டைச் சுத்தப்படுத்த சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். வருடத்திற்குச் செய்ய வேண்டியது, மாதத்திற்கு ஒரு முறை, வாரத்திற்கு ஒரு முறை, தினமும் ஒரு முறை என சில விஷயங்களைச் செய்ய வேண்டும்.

வீட்டில் பூச்சி புழுத் தொல்லைகள் வராமலும், சுவர் கதவுகளுக்குப் பாதுகாப்பாகவும் இருக்க வருடத்திற்கு ஒரு முறை வெள்ளையடித்து, பெயின்ட் அடிக்க வேண்டும்.

மாதத்திற்கு ஒருநாள் வீடு முழுவதிலும் தூசி, ஒட்டடை அடித்து விட வேண்டும். புத்தகங்கள், துணிமணிகளை ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். பலசரக்குச் சாமான்கள் வைக்கும் டப்பாக்கள், போத்தல்களை சோப்புப் போட்டுக் கழுவி வைக்க வேண்டும்.

வாராவாரம் சோபா, டி.வி. அலமாரிகளிலுள்ள பொருட்களின் மீது படியும் தூசியைத் துணியால் துடைக்க வேண்டும். ரீப்போக்களில் காணப்படும் பழைய பேப்பர்கள், புத்தகங்களை எடுத்து விட்டுப் புதிதாகப் போட வேண்டும்.

தினமும் வீட்டைப் பெருக்கித் துடைப்பது மிகவும் அவசியம். தூசி, தும்புகள் மனிதனுக்கு உயிர் தருகின்ற பிராண வாயுவை அசுத்தப்படுத்திவிடுவதோடு, மேலும் பலவியாதிகளுக்கும் காரணமாகி விடும்.

வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை கொடுத்துப் பாருங்கள். பிறகு உங்கள் வீடு, அழகான- ஆரோக்கியமான வீடாக மாறிவிடும்.

# கனவிலே கழுதையா?

கனவில் எந்த மிருகம் அல்லது பறவை வந்தால் நல்லது அல்லது கெட்டது என்று கனவு சாஸ்திரம் தெரிவிக்கிறது.



கனவில் கீரி வந்தால் நஷ்டம். ஆனால் ஆமை வந்தால் லாபம்.

கழுதையை நேரில் பார்த்தால் அபசகுனம். ஆனால் கனவில் பார்த்தாலோ பேரதிஷ்டம்.

கன்றுக்குட்டி கனவில் வந்தால் நல்லது நடக்கும்.

குதிரையைக் கனவில் காண்பவர்களுக்கு எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.

கனவில் கழுகு பறக்கிறதா? இப்போதே தாலிக்கு ஓடர் கொடுங்கள். உடனே திருமணம்தான்.

# உள்ளத்தில் இளமை வேண்டும்

லேடீஸ் ஸ்பெஷல்

சில பெண்கள் நாற்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடியவுடன் ஏதோ தமக்கு வயதாகிப் போய் விட்டதாக நினைக்கிறார்கள். மேலை நாடுகளில் நாற்பது வயதில் தான் வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் நம்மூர்ப் பெண்கள் நாற்பது வயதாகி விட்டாலே, 'இனிமேல் நமக்கு என்ன அழகு வேண்டிக் கிடக்கிறது, கல்யாணமாகி குழந்தைகளையும் பெற்று விட்டோமே' என்று நினைக்கிறார்கள்.



தலையை ஒழுங்காக வாரமாட்டார்கள், புடவையை அழகாக உடுத்த மாட்டார்கள், புடவைக்கு ஏற்ற பிளவுஸ்களை அணிய மாட்டார்கள். ஏதோ ஆச்சா போச்சா என்று தலைவாரி, முகத்தில் கொஞ்சம் பவுடரைத் தீற்றிக் கொண்டு நின்றால், புருஷன் வேறு பெண்களை ஏறெடுத்துப் பார்ப்பானா மாட்டானா? நாற்பது வயதில் ஐம்பது வயதுத் தோற்றத்தைக் காட்டி வீணான கஷ்டத்தை விலைக்கு வாங்காதீர்கள்.

நாற்பது வயதிற்குப் பின்னர், சில பெண்மணிகள் எவ்வளவு நேர்த்தியாக இருப்பார்கள் தெரியுமா? முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் இந்திரா காந்தி, எலிசபெத் மகாராணி, மார்க்கிரட் தட்சர்.

பெண்கள் எப்போதும் உடம்பை ஸ்லிம்மாக வைத்திருக்க வேண்டும். கண்டதையும் அள்ளி வாயில் போடாமல், உடம்பைப் பெருக்க வைக்காத உணவுப்பொருட்களைச் சாப்பிட வேண்டும். சதை போடாதபடி முடிந்தளவு உடற்பயிற்சியும், தோல் சுருங்காமல் இருக்க கைகால்களுக்கு மசாஜ் செய்து வந்தால் இளமை என்றைக்கும் இருக்குமே!

காலையில் எழுந்ததும், குளித்து திருத்தமாக உடையணிந்து, தலையைப் படிய வாரிக் கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்யுங்கள். அடித்துச் சொன்னால் கூட நாற்பது வயது ஆனவர் என்று நம்பமாட்டார்கள்.

# டி.வி. நல்ல டி.வி.தான்

*டி.வியின் மேற்பகுதியை மட்டுமே துடைத்துச் சுத்தப்படுத்த வேண்டும்.

*டி.வியின் உள்பகுதிகளை மெக்கானிக் மூலம்தான் சுத்தப்படுத் வேண்டும். உள் பகுதிகளில் நாம் சுத்தப் படுத்துவோமேயானால், நமக்கே தெரியாமல் ஏதாவது வயர்கள் அறுந்து போய்விடும் அபாயம் உண்டு.

*அன்டனா வயர் தேவையை விட அதிகமாக இருந்தால் அதை இறுக்கமாகக் கட்டி வைக்காமல், அப்படியே தளர்வாக விடுதல் நல்லது.

*புயல், காற்று, மழை, மின்னல் போன்ற சமயங்களில் அன்டனா பின்னைக் கழற்றி விட வேண்டும்.

*இடை வெளி இல்லாமல் தொடர்ந்து 24 மணிநேரமும் டி.வியை இயக்கி, டி.வியைச் சூடேற்றக் கூடாது. அவ்வப்போது சில நிமிடங்கள் ஓய்வு கொடுக்க வேண்டும்.



*டி.வி.வயரோ, அன்டனா வயரோ சிறிது அறுந்து போயிருந்தால் கூட திரையில் படம் தான் ஒழுங்காக வருகிறதே என்று கவனிக்காமல் விட்டு விடக்கூடாது. உடனே அதைச் சரி செய்ய வேண்டும்.

*டி.வி.யின் உதிரிப்பாகங்கள் பழுதடைந்து அவற்றை மாற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில், மலிவாகக் கிடைக்கிறதே என்று தரமற்றவற்றைப் பொருத்தக் கூடாது. அவை நீடித்த காலம் பாவிக்காது. எனவே விலை கூடுதலானாலும் தரமானவற்றையே வாங்குங்கள்.

*டி.வியை குழந்தைகள் கைக்கு எட்டாதபடி வைக்கவேண்டும். முடிந்தவரை எல்லோரும் இயக்குவதைத் தவிர்த்து, ஒரே கை பட வைத்திருத்தல் நன்று.

*டி.வி.பழுதடைந்தால் அதை நன்கு திறமையுள்ள மெக்கானிக்கிடம் கொடுத்துப் பழுதுபார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு அரைகுறை மெக்கானிக்கிடம் கொடுத்தால் சில வேளைகளில் சிறிய பிழைகளையும் பெரிதாக்கி விடுவார்.

*புதிதாக டி.வி.வாங்கும் போது, அதற்கான பில், உத்தரவாதப் பத்திரம் போன்றவற்றைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். உத்தரவாத காலத்திற்குள் டி.வி.பழுதடைய நேரிட்டால் அதற்கு இவை உதவியாக இருக்கும்.

*டி.வியை பத்தடி தூர இடைவெளி விட்டு அமர்ந்து பார்க்க வேண்டும். அதே போன்று தொடர்ந்து, ஓய்வின்றி டி.வி. பார்ப்பதால் கண்கள் பாதிக்கப்படும். எனவே கண்களுக்கும் ஓய்வு கொடுத்துப் பார்க்க வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

## மட்டன் பப்ஸ்

(தொகுத்துத் தருவது-சுகந்தினி)

தேவையான பொருட்கள்:

ஆட்டிறைச்சி - 1/2 கிலோ
சின்ன வெங்காயம் - 1/4 கிலோ
மிளகாய்த்தூள் - 2 கரண்டி
பூண்டு - 100 கிராம்
பச்சை மிளகாய் - 4
தக்காளிப் பழம் - 4
கோதுமை மாவு - 1/2 கிலோ
எண்ணெய் - 1/2 லிட்டர்

செய்முறை:

ஆட்டிறைச்சியை நன்கு கழுவி, அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டு, மிதமான சூட்டில் போட்டு நன்றாக வதக்கவும். வெங்காயம், பூண்டு ஆகியவற்றைச் சுத்தம் செய்து, அம்மியில் போட்டு நறுவல் துருவலாக அரைக்கவும். இறைச்சி வெந்ததும் அரைத்த வெங்காயம், பூண்டோடு உப்புப் போட்டுக் கிளறவும். சிறிது நேரம் கழித்து மிளகாய், மிளகாய்த்தூள், தக்காளிப் பழம் இவைகளைப் போட்டு வதக்கவும். பின்னர் வாணலியில் இறைச்சி முழ்கும் அளவிற்குத் தண்ணீர் விட்டு மூடி வேக வைக்கவும். வெந்ததும் வேறொரு பாத்திரத்தில் மாற்றி வைக்கவும்.

கோதுமை மாவுடன் சிறிது உப்பு, எண்ணெய், தண்ணீர் விட்டு கெட்டியாகப் பிசையவும். பத்து நிமிடம் கழித்து, ரொட்டி தட்டுவது போல் தட்டி, நடுவில் வேகவைத்த இறைச்சிக்கறியை வைத்து முக்கோண வடிவத்தில் செய்து கொள்ளுங்கள். பின் அடுப்பில் வாணலியை வைத்து, எண்ணெய் ஊற்றி, செய்து வைத்திருக்கும் பப்ஸை போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து எடுங்கள். இது இரண்டு நாட்கள் வரை பழுதடையாமல் இருக்கும்.

# குத்தும்—சாவும்

## மரண விளையாட்டு

குத்துச் சண்டைப் போட்டி உயிரைக் குடிக்கும் விபரீத விளையாட்டாகக் காட்சி தருகிறது. கடந்த 12 மாதங்களில் 6 குத்துச் சண்டை வீரர்கள் பந்தயத்தில் மோதும் போது மரணமடைந்து உள்ளனர். தற்போது அவுஸ்திரேலிய ஃபெதர் வெயிட் வீரர் ஹொப்சன் (வயது 23) பந்தயத்தில் மோதும் போது தலையில் பலத்த அடிபட்டது. அவரது தலையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் தராமல் ஹொப்சன் மரணமடைந்தார். ஹொப்சன் ஏப்ரல் 30ந் திகதியன்று பந்தயத்தில் மோதி மரணமானார்.

பெப்ரவரி 25ம் திகதி உலக குத்துச் சண்டை கவுன்சில் சாம்பியன் ஜெரால்ட் மக்மில்லன் (வயது 23) லண்டனில் நடைபெற்ற போட்டியொன்றில் மோதி சரிந்தார். அவர் உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பிறகு மார்ச் 7ம் திகதி நினைவு திரும்பியது. இருப்பினும் அவரால் பழைய நிலையை



அடைய முடியவில்லை. மே 6 ம் திகதி (1995 கொலம்பிய வீரர்) ஜிம் கார்சியா (வயது 23) லஸ்வேகாஸ் போட்டியில் மோதும் போது அடிபட்டு மரணம் அடைந்தார். செப்டம்பர் 9ம் திகதி (1995) தென் கொரிய ஃபாந்தம் வெயிட் வீரர் டோங்சூன் லீ (வயது 32) போட்டியொன்றில் காயமடைந்து டோக்கியோ மருத்துவமனையில் இறந்தார். ஒக்டோபர் 1ம் திகதி (1995) தென் ஆபிரிக்க லைட் வெயிட் வீரர் மத்தியூ புலே பந்தயத்தில் அடிபட்டு இறந்தார். ஒக்டோபர் 13ம் திகதி (1995)ஸ்கொட்லாந்து ஃபாந்தம் வெயிட் வீரர் ஜேம்ஸ் மர்ரே (வயது 25) பந்தய மோதல் ஒன்றில் காயமடைந்து இறந்தார். ஒக்டோபர் 15ம் திகதி (1995) பிலிப்பைன்ஸ் ஃபிளைவெயிட் வீரர் ரிஸ்டிடுடோ எஸ்பினலி (வயது 19) மணிலா பந்தயத்தில் காயமடைந்ததால் மரணம் அடைந்தார்.

# சார்ஜாவில் கிரிக்கெட்



சார்ஜாவில் நான்கு நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி வருகிற நவம்பர் மாதம் 7ம் திகதி தொடங்குவுள்ளது. போட்டியில் இலங்கை, பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன.

சார்ஜாவில் வருடந்தோறும் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

சாம்பியன் கோப்பைக்கான பந்தயம் நவம்பர் 7ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை நடக்கிறது. இப்போட்டியில் கலந்து கொள்ள மேற்கூறிய மூன்று நாடுகளுடன் இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் இந்தப் போட்டிகள் நடைபெறும் நேரத்தில் இந்திய அணி தனது சொந்த மண்ணில் பல போட்டிகளில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளது. இந்தப் போட்டியில் 4வது அணியாக ஆட வைக்க இங்கிலாந்து அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் முதலில், ஒக்டோபர் மாதத்தில் தான் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பாகிஸ்தான் அணியின் வேண்டுகோளுக்கிணங்க நவம்பர் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இலங்கை, பாகிஸ்தான் அணிகள் இப்போட்டியில் கலந்து கொள்வதை உறுதி செய்து விட்டன.

# ஏன் விலகவேண்டும் நான்?

உலகக்கிண்ணப்போட்டி, சிங்கப்பூர் சிங்கர் கிண்ணப் போட்டி, சார்ஜாவில் பெப்சி கிண்ணப் போட்டி மூன்றிலும் இந்தியா தோல்வி கண்டது.

அதனையடுத்து இந்திய அணிக்கப்டன் அசாருதீன் பதவி விலக வேண்டும் என்று சுனில் கவாஸ்கர் கூறியிருந்தார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கரின் கருத்தை அசாருதீன் கடுமையாக மறுத்துள்ளார்.

"நான் எதற்காக பதவி விலக வேண்டும்? வெற்றி பெற்றால் பாராட்டுவதும், தோல்வி கிடைத்தால் வசைபாடுவதும் வழக்கமாகி விட்டது.

நான் எனது துடுப்பாட்டத் திறமையை இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் மீண்டும் பளிச்சிடச் செய்வேன். பொதுவாகவே எமது வீரர்களது துடுப்பாட்டம் மோசமாகியுள்ளது.

பந்து தடுப்பிலும் நாம் திறமையாக விளையாட வேண்டி உள்ளது. நான் பந்து தடுப்பில் கூடிய கவனம் எடுக்கிறேன். தினமும் 150 கேட்ச் பிடித்து பயிற்சி பெறுகிறேன். கிரிக்கெட்டில் பந்து தடுப்பு (ஃபீல்டிங்) மிக முக்கியமானது. சக வீரர்களுக்கும் அதனை உணர்த்தி இருக்கிறேன்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் நாம் திறமையாக விளையாடுவோம். இங்கிலாந்து சூழலுக்கு எமது வீரர்கள் பழகிவிட்டால்



போதும், நன்கு ஆடமுடியும்." என்று கூறியுள்ளார் அசாருதீன்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன்களில் ஒருவரான ஸ்ரீ காந்த் அசாருதீனுக்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார்.

"போட்டிகளில் ஏற்படும் தோல்விகளை கப்டனின் தலையில் மட்டும் போடுவது சரியல்ல. அசாருதீன் நல்ல கப்டன். அவரது தன்னம்பிக்கையை குறைக்கும் விதமாக சிலர் பேசுவது சரியல்ல." என்கிறார் ஸ்ரீகாந்த்.

# அப்பாவுக்கு வழக்கு

ஜெர்மனியைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனையான ஸ்டெபி கிராப், விளையாட்டு மூலம் கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்துள்ளார். அதற்கு முறையாக வரி கட்டவில்லை என்று கடந்த ஓகஸ்ட் மாதம் ஸ்டெபி கிராபின் தந்தை பீட்டர் கிராப் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நீண்ட நாட்களாக விசாரணை நடந்து வந்தது. தற்போது அவர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 237 பக்கம் கொண்ட புத்தகத்தில் குற்றச் சாட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? இரத்தினபுரி வாசகிக்கு அதிஷ்டம்

| | |
|---|---|
| இவ்வாரம் | பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி |
| இவர்தான். | எம்.ஜெஸமின் ரியுரி புஸ்பம் |
| | கலதுர குரோசரி, மெத-கலதுர, இரத்தினபுரி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை M

பெயர்:............................

முகவரி:............................

............................

கையொப்பம்:............................

உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-05-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

# 12 திகில்

# நீ! நீயா!

## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"பாஸ்! உங்களுக்காக வருகிறேனே தவிர எனக்கு நம்பிக்கையில்லே."

"ஏம்மா? ஏன் அப்படிச் சொல்றே ஜென்னி?"

"பின்னே என்ன? அந்த ஜோதி ஒரு சரியான குடிகாரி. அவள் நகையைக் காணலன்னு சொன்னது ராத்திரி. 'எப்பவுமே அந்த மாதிரி ஆளுங்க பேச்சு பொழுது விடிஞ்சா போச்சு'ன்னு சொல்லுவாங்களே. இவ மட்டும் விதி விலக்கா?"

"விடிஞ்சதுக்குப்பிறகும் மயக்கம் தீராத ஆளுங்க உண்டு. இவள் அந்த ரகமாக ஏன் இருக்கக் கூடாது?"

"சரி போய்த்தான் பார்ப்போமே. அவங்கம்மாவை நினைச்சாத்தான் எரிச்சலாக வருது. பேச்சா பேசறாங்க பேச்சு! ஸில்வி."

பயந்து கொண்டே அழைப்பு மணியை இங்கே அழுத்த உள்ளே எங்கேயோ கிணுகிணுவென்று சங்கீதம் பாடியது அது.

கதவைத் திறந்தவள் ராஜி. "வாங்க" என்றாள் சிரிப்புடன்.

"உங்கம்மா இல்லையா?" என்று ஜென்னி அச்சமாகக் கேட்க–

"இல்லியே."

"எங்கே போயிருக்காங்க?"

"நல்லவங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதனால சொர்க்கம் தான் போயிருப்பாங்கன்னு நம்பறேன்."

"அன்னைக்குக் கூட பார்த்தோமேம்மா."

"இங்கே பார்த்தீங்களே அவங்களா? அய.... அவங்க என் மாமியார். அம்மா அல்ல. அவங்களைத் தேடிட்டா வந்தீங்க? ஸாரி. வெளியே போயிட்டாங்களே. சாப்பாட்டுக்குத்தான் திரும்புவாங்க."

"ஜோதி?"

"மாடியில இன்னனும் தூங்கிட்டிருக்கிறா. எழுப்பட்டுமா?"

"வேணாம். அவள்கிட்ட அப்புறமா பேசிக்கறோம். ஆட்சேபனை இல்லேன்னா உங்களோட கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கோமே."

"ஷ்யூர்" கதவை முழுசாகத் திறந்து விட்டாள். "வாங்க உள்ளே வந்து உட்காருங்க. சூடா? குளிரா? என்ன சாப்பிடறீங்க?"

"அப்புறம் சாப்பிடலாம். உட்காருங்களேன்."

தனி சோபாவில் அமர்ந்து கொண்டாள். "சொல்லுங்க."

"அதென்னமோ வைர நெக்லஸ் காணலன்னு சொன்னாங்களே– அது வாஸ்தவமான பேச்சுதானா?"

"ஆமாம். சரி. உங்களுக்கேன் சந்தேகம் வருது?"

"இல்லே, சில பேர் பேச்சு பொழுது விடிந்தால் போச்சுன்னு சொல்லுவாங்க." அதான் கேட்டேன்.

"இல்லே நிஜமாகவே காணாமப் போச்சு."

"எவ்வளவோ லட்சம் பெறும்னு சொன்னாங்களே நிஜமா?"

"தப்பு. கோடிக்கணக்கில பெறும். அது திரும்ப கிடைக்கல்லன்னா அத்தனையும் போச்சு. எல்லாமே காலி ஆயிடும்."

"அப்படி என்ன வைரம் அது? கோஹினூரரா?"

"சே.சே நெக்லஸ் ஒண்ணும் அவ்வளவு பெரிய விஷயமில்லே. அதில ஒரு சாவி ஒண்ணு டாலர் மாதிரி ஒட்ட வைச்சு இருக்கும். அதிலேதான் இருக்கு சூட்சமம் பூராவும்."

"சாவியிலா? அப்படி என்ன விசேஷம்.?"

தயக்கமாக சுற்று முற்றும் பார்த்தாள். "உங்களை நம்பலாமா?"

"நிச்சயமா நம்பலாம். ரகசியங்கள் இங்கே பாதுகாக்கப்படும்."

"அந்த சாவிதான் என் மாமியாரோட ஆபீஸ் லாக்கருக்கனாது. குடும்பத்தின் அத்தனை தஸ்தாவேஜுகளும், நகைகளும், பணமும் அதிலேயே தான் இருக்கு."

"தமாஷாத்தானிருக்கு."

"எதைச் சொல்றீங்க ஜென்னி.?"

"அவ்வளவு முக்கியமான சாவியை எடுத்துகிட்டு சாதாரணமாக வெளியே தெருவிலே போகிறதே தப்பு. அதிலேயும் பார்ட்டி மாதிரி ஜனநடமாட்டம் அதிகமுள்ள இடங்களுக்குக் கொண்டுட்டுப் போகிறது இன்னும் தப்பு. அதுவும் இந்த மாதிரி தன்னிலை முன்னிலை படர்க்கை பாக்காத பெண் எடுத்துப் போக அனுமதிக்கிறது இன்னமும் பெரியதப்பு."

"அது எங்களுக்குப் புரியாமலில்லை. மிஸ் ஜென்னி! ஆனா வேற வழியில்லே."

"ஏனாம்?"

"முதலாவது அந்த ஜோதி, சொல்ற பேச்சைக் கேட்கிற ஜாதி இல்லே. அப்படியே சொல்லிட்டாலும் அதோட செத்தோம். வீட்டையே ரெண்டென்ன? நாலு செய்துடுவா."

"அதனாலென்ன? டூப்ளிகேட் சாவி இருக்குமே!"

"அது இன்னமும் சங்கடமான சங்கதி.





இவங்க தாத்தா காலத்திலேயே அதைத் தொலைச்சிட்டார். இது வரை கண்டுபிடிக்கப் படல்ல."

"இப்ப இதுவும் தொலைஞ்சா?"

"லாக்கர் கம்பெனி பம்பாய்லே இருக்கு. அவங்களுக்குத் தகவல் சொல்லி, அவங்க வந்து ஆராய்ந்து திரும்பப் போய் இன்னொரு சாவியைத் தயார் செய்து கொண்டு வந்தால் தான் உண்டு. ஆனா அதுக்கு கொஞ்ச நாளாகும்."

"கொஞ்ச நாள்ன்னா?"

"கொஞ்சம் தான்– ஒரு இரண்டு மூணு வருஷம்."

"சுறுசுறுப்பான கம்பெனி தான்."

"எங்க கவலையே வேற." அந்த ராஜி முகத்தில் கொஞ்சம் கலவரம் காட்டினாள். "பயமும் வேற."

"என்ன அது?"

"அதுக்குள்ளே சாவியைத் திருடினவன் ஆபீஸ் லேஃபை திறந்து வழிச்சு எடுத்துட்டுப் போயிடாம இருக்கணும்."

"அதெப்படி முடியும்? ஆபீஸில ஆளே இல்லையா?"

"நிறையப்பேர் இருக்காங்க. அது தான் சங்கடமே."

"என்ன சங்கடம்?"

"யார் வேணுமானாலும் வருவாங்க போவாங்க. யார் யாரைத் தேடி வந்திருக்கிறாங்கன்னு யாருக்கும் புரியாது. யார் எந்த ரூமுக்குள்ளே போனாலும் கேட்கிறதுக்கு நாதியேயில்லே."

"சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்க வீட்டு பெண் ஜோதிக்கு பொறுப்பு போதாது."

"அது எல்லாருக்கும் தெரிந்த சங்கதியாச்சே."

"நீங்க ஏன் கொஞ்சம்-கொஞ்சம் துணிச்சலாக நின்று போராடி அவளைத் திருத்தக் கூடாது?"

"ஒரே வழி. அந்த வைர நெக்லஸை சாவியோட சேர்த்துக் கண்டுபிடிக்க வேண்டியதுதான், வேற வழியேயில்லே."

"அதாவது. அந்த சாவியின் மகிமை தெரிஞ்சவங்க யாரோதான் அதைத் திருடி இருக்கணும்னு சொல்றீங்களா?"

"பின்னே?"

"இப்படியுமிருக்கலாமே. வைரத்துக்கும் நகைக்கும் ஆசைப்பட்டு யாரோ ஒரு சில்லரைத் திருடன் ஏன் அதைத் திருடியிருக்கக் கூடாது?"

"அப்படியுமிருக்கலாம். ஆனா நகைக்கு ஆசைப்பட்டு திருடறவன்னா வாட்சை ஏன் விட்டுட்டுப் போறான்? அது தங்கத்தாலான செயின்- கெட்டியாக ஒன்பது பவுனுக்கும் மேலே இருக்குமே. அதை விட்டுப் போக மட்டும் மனசு வருமா?"

"அப்போ–"

"சந்தேகமேயில்லே. திருட்டு நடந்ததே ஒரு பெரிய கொள்ளைக்கு ஆசைப்பட்ட யாரோ செய்த வேலைதான்"

"ஒரு விஷயம் சொல்றீங்களா? கேட்கலாமா?"

"கேளுங்களேன்."

"அபிராமி என்கிற பெண்ணுக்கும் உங்க ஜோதிக்கும் சிநேகிதம் உண்டா.?"

புரியாமல் பார்த்தாள் அந்த ராஜி. "சிநேகிதமா?"

"சிநேகிதமில்லேன்னா பகையுணர்வு- அதாவது சண்டை ஏதும் நடந்ததுண்டா இதுவரை?"

வினோதமாகப் பார்த்தாள் அந்த ராஜி.

"சொல்லுங்கம்மா. அப்படி ஏதும் உண்டா?"

"புரியல."

"என்ன புரியல? தமிழில தானே கேட்கிறேன்."

"அது புரியுது. ஆனா இந்தக் கேள்வியை ஏன் கேட்கறீங்கன்னுதான் புரியல லேன்னேன்."

"அது வந்து–" என்று ஆரம்பித்து ஜென்னியை ஓர் ஓரமாக இழுத்துப் போய் அதட்டினான் ராஜா. மெதுவான குரலில் "முண்டம்."

"ஏன்? என்ன ஆச்சு?"

"அந்த வரதராஜனைப்பற்றிச் சொல்லப் போகிறாயா என்ன?"

"கேட்டேனா?"

"அவ்வளவுதான். செத்தேன்."

"ஏன்?"

"அவங்க அண்ணன்– அதான் என் வீட்டுக்காரர்– முதல் வேலையா ஒரு டின் மண்ணெண்ணையை ஊத்தி ஒரே ஒரு தீக்குச்சியாலே என் கதையை முடித்து விடுவார். இதுவேற வம்பா?"

"என்னதான் வழி?"

"இல்லே."

"பின்னே நீயாக ஏன் சந்தேகப் படறயாம்? எதைப் பேசணும்? எதைப் பேசக் கூடாதுன்னு எனக்குத் தெரியாதா என்ன?"

அவர்கள் திரும்பிப் போகும் போது–

மாடி ஏறிப் போயிருந்தாள் அந்த ராஜி. "ஒரு நிமிஷம். ஜோதி குரல் கொடுக்கிறா. என்னன்னு பார்த்துட்டு வந்திடறேன்." அவள் போகும் முன்பாகவே–

வராண்டாவுக்கு வந்து நின்றாள் அந்த ஜோதி.

"ஹேய்யூ. அண்ணீ. கொஞ்சம் கறுப்பு காப்பி கொண்டு வாங்களேன்... ப்ளீஸ்.. என்னால் தலைவலியைத் தாங்க முடியல்ல."

சுட்டுவிரலை அசைத்து இவர்களைக் காட்டினாள்.

"யார். இவங்க? எதுக்கு வந்திருக்கிறாங்க?"

"கேஸ் விஷயமா விசாரணைக்கு வந்திருக்கிறாங்க."

"விசாரணை? யூமீன் போலிஸ்?"

"நோ. துப்பறியும் நிபுணர்கள்.. ராஜா, ஜென்னி."

"ஓ! கேள்விப்பட்டிருக்கேன். கொஞ்சம் காப்பியோ தேநீரோ கொடுத்து-அனுப்பிடு. எனக்கு துப்பறியற மேதைகள் யாருமே தேவையில்லே."

"ஜோதி."

"அனுப்பு, அவங்களைப் போகச் சொல்லு. எனக்கு இவங்களைத் தெரியும். ராத்திரி என்னை இங்கே கொண்டு வந்து விட்டவங்க தானே? என் பர்ஸை, என் வைர நெக்லஸை திருடினவங்க. தெரியும் எனக்குத் தெரியும்."

"ஜோதி. உளறாம உன் ரூமுக்குப் போ. கறுப்பு காப்பி தானே? நானே கொண்டு வரேன்."

"இல்லே நீயும் அவங்களோட சேர்ந்து சதி பண்ணப் பார்க்கிறே. எனக்குத் தெரியும். அவங்க-அவங்க தான் திருடியிருக்கிறாங்க, கொடுக்கச் சொல்லு."

"நான் வாங்கித்தரேன். நீ உள்ளே போம்மா."

"வாங்கிடு. இல்லே ராத்திரி அண்ணனோட போன்லே பேசறப்ப உன்னைப்பற்றி வத்தி வைச்சிடுவேன். ஜாக்கிரதை! காப்பி கொடேன்."

"கொண்டு வரேன்."

நம்பிக்கையேயில்லாமல் அறையினுள் சென்று மறைந்தாள் அவள்.

ராஜி இறங்கி வந்தாள். "அடுத்து இவங்கம்மா வருகிறதுக்குள்ளே பேச வேண்டியதைப் பேசி முடிச்சிட்டு கிளம்புங்க சார்."

"உங்க மாமியார் எப்ப வருவாங்க?"

"பன்னிரண்டரைக்கு. அதாவது சரியாக பதினைஞ்சே நிமிஷத்தில வந்து இறங்கிடுவாங்க."

"அப்ப கிளம்பிட வேண்டியதுதான். அவங்களோட வாதாட நான் தயாரா யில்லே. நாங்க கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லிடுங்க. போயிடறோம்."

"அபிராமி என்கிற பெண்ணுக்கும் இவங்களுக்கும் ஏதாவது நட்போ வெறுப்போ இருக்கான்னு கேட்டோம்."

"அபிராமியை உங்களுக்கெப்படித் தெரியும்?"

"எப்படியோ தெரியும். அது இல்லே இப்ப பிரச்சினை! இவங்க உறவு எப்படியிருந்தது என்கிறது தான் என் கேள்வி."

"எப்படித் தெரியும்? இதைச் சொல்லுங்க."

"யாரோ விஷயம் தெரிஞ்ச ஆளுங்க சொன்னாங்க"

"என்ன சொன்னாங்க?"

"வைர நெக்லஸை அவங்கதான் திருடியிருப்பாங்களோன்னு சந்தேகப் படறாங்க."

"முட்டாள் தனம். அடி முட்டாள் தனம். அவள் பணக்காரி. அவ ஒரு கோடீஸ்வரி. அவளுக்கு நகை திருட வேண்டிய அவசியமென்ன?"

"நீங்க சொன்ன சாவியாக இருக்கலாம்."

சோகமாகச் சிரித்தாள் அந்த ராஜி. "அவளைப் பற்றி வேற எந்தக் குற்றச் சாட்டு வேணுமானாலும் சொல்லுங்க நம்பறேன்! மிஸஸ் ஜன்னி! உங்க கணவரைக் கடத்திட்டுப் போகப் பார்த்தாள்ன்னு வேணும்னா சொல்லுங்க- நம்பறேன். ஆனா அவள் கேவலம் ஒரு நகையைத் திருடினாள்னு மட்டும் சொல்லிடாதீங்க. நான் நம்பமாட்டேன்."

"எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்றீங்க?"

"எனக்கு அவளைத் தெரியும். அவள் அப்படிப்பட்டவள் இல்லே."

"எப்படிச் சொல்றீங்க.?"

"அவள் என்னோட தங்கை. இரட்டைப் பிறவியான என் தங்கை. அவளைப் பற்றி எனக்கா தெரியாமல் போயிடும்?"

விழித்தார்கள்!

(தொடர்ந்து வரும்)

## அரங்கம்



பெயர்: கே. முரசொலி மாறன்.
வயது: 19
முகவரி: பன்சலை வீதி, அக்கரைப்பற்று-09.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எஸ். தக்ஷனி.
வயது: 19
முகவரி: 7/7, HEMMING ST, DANDENONG, VICTORIA-3175, AUSTRALIA.
பொழுதுபோக்கு: சினிமா, பத்திரிகை, புத்தகம்.



பெயர்: பி. ஜோன்.
வயது: 22
முகவரி: P.O.BOX-807 DOHA, QATAR.
பொழுது போக்கு: கதைப்புத்தகம்.



பெயர்: எம். ஸவாஹிர்.
வயது: 26
முகவரி: 79, மரிக்கார் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: ரீ.வி., நண்பர் தொடர்பு.



பெயர்: ஏ. றிபானா.
வயது: 18
முகவரி: P.O.BOX-4124 CODE NO-32072, HAWALLY, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: எம். ஹமீட்.
வயது: 25
முகவரி: P.O.BOX-25180, P.C.11466, RIYADH, K.S.A.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: ஐ. முகமட் பாயிஸ்.
வயது: 27
முகவரி: P.O.BOX NO-63346, RIYADH-11516, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு, வானொலி, பத்திரிகை.

பெயர்: வி. நிஜாம்.
வயது: 20
முகவரி: குட்டிக் கராச்சி, கிண்ணியா.
பொழுது போக்கு: சித்திரம் வரைதல்

பெயர்: ஏ. திருச்செல்வம்.
வயது: 20
முகவரி: 297, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஆர். ஐங்கரன்.
வயது: 15
முகவரி: 1ம் பிரிவு, மண்டூர்.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி., வானொலி.

பெயர்: எஸ். பபி.
வயது: 26
முகவரி: EVERSLEY COLLEGE, COOLINGE LANE, FOLKESTONE, KENT, CT 20-3QR, ENGLAND.
பொழுது போக்கு: நாவல், ரீ.வி.

பெயர்: எம். சவாஹிர்.
வயது: 19
முகவரி: 104, ஆமர் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# 75 தாய்

"அவர்கள் பலசாலிகளாயிற்றே" என்று அமைதியாகச் சொன்னான் அந்த முஜீக். "அவர்கள் மிகுந்த பலசாலிகள்!"

"அவர்களுக்கு அந்தப் பலம் எங்கிருந்து வருகிறது?" என்று கலங்கிய குரலில் சொன்னாள் தாய்: "நம்மிடமிருந்துதான், பொது மக்களிடமிருந்துதான் அவர்கள் பலத்தைப் பெறுகிறார்கள். பலத்தை மட்டுமல்ல, எல்லாவற்றையுமே நம்மிடமிருந்துதான் பெறுகிறார்கள்!"

அந்த முஜீக்கின் பிரகாசமான, ஆனால் புதிர் போடும் முகத்தைக் கண்டு, தாய்க்கு எரிச்சல் வந்தது.

"ஆமாம்" என்று இழுத்தான் அவன்: "இது ஒரு சக்கரம் தான்..."

திடீரென அவன் உஷாராகி நிமிர்ந்து, வாசல் பக்கமாகச் செவியைச் சாய்த்துக் கேட்டான். "அவர்கள் வருகிறார்கள்" என்றான்.

"யார்?"

"நண்பர்கள்..."

அவனது மனைவி உள்ளே வந்தாள். அவளுக்குப் பின்னால் இன்னொரு முஜீக் வந்தான். அந்த முஜீக் தன்னுடைய தொப்பியை ஒரு மூலையில் விசிறியெறிந்துவிட்டு, அந்த வீட்டுக்காரனிடம் அவசர அவசரமாக வந்து நின்றான்.

"சரிதானே?" என்று கேட்டான் அவன்.

வீட்டுக்காரன் தலையை அசைத்தான்.

"ஸ்திபான்!" என்ற அடுப்பு முன்னாலிருந்தவாறே கூப்பிட்டாள் அவன் மனைவி. "விருந்தாளிக்குச் சாப்பிட ஏதாவது வேண்டுமா?"

"ஒன்றும் வேண்டாம். மிகுந்த நன்றி, அம்மா" என்றாள் தாய்.

இரண்டாவதாக வந்த முஜீக் தாயிடம் வந்து உடைந்த குரலில் பரபரப்போடு பேசினான்:

"என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். என்பெயர் பியோத்தர் இகோரவிச் ரியபீனின். பட்டப் பெயர் 'தமர் உளி.' உங்கள் வேலையைப்பற்றி எனக்கும் ஒன்றிரண்டு விஷயங்கள் தெரியும். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். சொல்லப் போனால் நான் முட்டாளல்ல..."

தாய் அவனை நோக்கி நீட்டிய கரத்தை அவன் பற்றிப் பிடித்துக் கொண்டே வீட்டுக்காரன் பக்கம் திரும்பிப் பேசினான்:

"நீயே பார்த்துக்கொள், ஸ்திபான்" என்றான் அவன். "வர்வாரா நிகலாயவ்னா ஓரளவுக்கு நல்லவள்தான். இருந்தாலும், இந்தக் காரியத்தை முட்டாள்தனமென்றும் ஆபத்தானதென்றும் அவள் கருதுகிறாள். என்னவோ இளைஞர்கள் மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு, மக்களது மூளையில் முட்டாள்தனத்தையே புகுத்தி வருவதாக அவள் கருதுகிறாள். ஆனால், நீயும் நானும் இன்று கைதான அந்த முஜீக்கை அறிவோம். அவன் முழுக்க முழுக்க நல்லவன்; முஜீக்குக்கே அவன் தான் சரியான உதாரணம். ஆனால், இதோ பார். இந்த அம்மாள் ஒன்றும் இளவயதானவள் இல்லை; மத்திம வயது தான். எப்படிப் பார்த்தாலும் இவள் அந்தச் சீமாட்டி வர்க்கத்தவரைச் சேர்ந்தவளல்ல. நான் கேட்கிறேன் என்று வித்தியாசமாய் நினைக்காதீர்கள். நீங்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியுமா?"

அவன் விரைவாகவும் தெளிவாகவும் மூச்சு விடவே அவகாசம் பெறாமலும் பேசினான். அவனது தாடி நடுங்கியது கண்கள் தாயின் முகத்தையும் உருவத்தையும் கண்டு கொண்டிருந்தன. அவனது துணிமணிகள் கிழிந்து கந்தலாய்ப் போயிருந்தன. தலைமயிர் உலைந்து போயிருந்தது. அவன் இப்போதுதான் ஏதோ கைச் சண்டையில் கலந்து, தன் எதிரியை மண்ணைக் கவ்வச் செய்த உற்சாகத்தோடு திரும்பி வந்து நிற்கிற மாதிரி இருந்தான். அவனது ஆர்வத்தைக் கண்டவுடனேயே தாய்க்கு அவனைப் பிடித்துப் போய் விட்டது. மேலும் அவன் கள்ளங் கபடமற்று எளிமையோடு பேசினான். அவனது கேள்விக்குப் பதில் சொல்லும் போது அவள் அவனை நோக்கிப் புன்னகை புரிந்தாள். அதன் பின்னர் அவன் மீண்டும் ஒரு முறை அவளது கரத்தைப் பற்றிக் குலுக்கிவிட்டுக் கலகலவென்று சிரித்தான்.

"இது ஒரு புனித காரியம் ஸ்திபான்!" என்றான் அவன்; "இது ஓர் அருமையான காரியம். இந்தக் காரியம் மக்களிடமிருந்தே தான் தோன்றுகிறது" என்று நான் சொல்லவில்லையா? ஆனால் அந்தச் சீமாட்டி-அவள்

**"ஒரு புறத்திலே தொடர்பு அற்றுப் போகும்போது இன்னொருபுறத்திலே தொடர்பு ஏற்படுகிறது."**



உனக்கு உண்மையைச் சொல்லவில்லை. அவள் உண்மையை உன்னிடம் சொல்லி விட்டால், தனக்கே தீங்கு செய்து கொள்வாள். அவளை நான் மதிக்கத்தான் செய்கிறேன். அது உனக்கு நான் சொல்லாமலே தெரியும். அவள் நல்லவள். நமக்கெல்லாம் உதவி செய்ய எண்ணுகிறாள். ஆனால் தன்னுடைய நிலைமைக்குக் குந்தகம் விளையாமல் உதவி செய்ய நினைக்கிறாள். ஆனால், சாதாரணமான பொது மக்களோ? அவர்கள் நேராகச் செல்ல விரும்புகிறார்கள். அவர்கள் ஆபத்தையோ கொடுமையையோ எண்ணி அஞ்சி ஒதுங்கவில்லை. இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் புரிந்ததா? அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதுமே துன்பத்தைத் தான் பெறுகிறார்கள். என்ன செய்தாலும், அவர்கள் மனம் புண்படத்தான் செய்கிறது அவர்களுக்கு திரும்பிச் செல்லுவதற்கு வேறு மார்க்கமே இல்லை. எந்தெந்தத் திசையிலே திரும்பினாலும் 'நில்!' என்ற குரல் தான் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறது."

"எனக்குத் தெரிகிறது" என்று தலையை ஆட்டிக்கொண்டே சொன்னான் ஸ்திபான். உடனேயே, "இவள் தனது டிரங்குப் பெட்டியை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்" என்றான்.

பியோத்தர் தாயை நோக்கி எதையோ புரிந்து கொண்ட பாவனையில் கண்ணைக் காட்டினான்.

"கவலைப்படாதீர்கள்" என்று ஆறுதலான குரலில் சொன்னான் அவன்; "எல்லாம் நல்லபடி நடக்கும், அம்மா! டிரங்குப் பெட்டி என் வீட்டில் தான் இருக்கிறது. நீங்களும் இந்த இயக்கத்தில் பங்கெடுக்கிறவள் தான் என்றும், அந்த அடிபட்ட மனிதனை உங்களுக்குத் தெரியும் என்றும் இன்று இவன் வந்து என்னிடம் சொன்ன போது நான் சொன்னேன்; 'ஸ்திபான், நன்றாகக் கவனி' என்றேன். 'இந்த மாதிரி விஷயங்களில் தவறி விடக் கூடாது பார்.' நாங்கள் இருவரும் உங்கள் பக்கத்திலே நின்று கொண்டிருந்த போது நீங்களும் எங்களைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தீர்கள். நேர்மை குணமுள்ளவர்களை எந்தக் கூட்டத்திலும் அடையாளம் கண்டுகொள்ளலாம். உண்மையில் சொல்லப்போனால், அப்படிப் பட்டவர்கள் அநேகம் பேர் உலகில் இருக்க முடியாதல்லவா? சரி, நீங்கள் டிரங்குப் பெட்டியைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்..."

அவன் அவளுக்கு அருகில் உட்கார்ந்து கேட்கும் குறியுடன் அவளையே பார்த்தான். பிறகு கேட்டான்:

"அதற்குள் உள்ள பொருள்களை யாரிடமாவது தள்ளி விட்டால் நல்லது என்று தோன்றினால், அந்த விஷயத்தில் நாங்கள் மனமகிழ்ச்சியோடு ஒத்துழைக்கத் தயார். அந்தப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாமே."

"அவள் எல்லாவற்றையுமே நம்மிடம் தான் விட்டுச் செல்ல விரும்புகிறாள்" என்றான் ஸ்திபான்.

"அம்மா, அப்படியா? ரொம்ப நல்ல தாய்ப் போயிற்று. நாங்கள் அதற்கு ஒரு சரியான இடம் பார்க்கிறோம்."

அவன் ஒரு சிரிப்போடு தன்னிடத்தை விட்டுத் துள்ளி யெழுந்து அங்கும் இங்கும் அவசர அவசரமாக உலாவினான்:

"சாதாரணமானதென்றாலும் இது ஓர் அபூர்வமான விஷயம். எனினும் ஒரு புறத்திலே தொடர்பு அற்றுப் போகும் போது, இன்னொரு புறத்திலே தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. அது ரொம்பசரி. அந்தப் பத்திரிகை ரொம்ப நல்ல பத்திரிகை, அம்மா. அது நல்ல சேவை செய்கிறது. மக்களின் கண்களைத் திறக்கிறது. அதைப் பற்றிச் சீமான்கள் ஒன்றும் பிரமாதமாக எண்ணவில்லை. இங்கிருந்து ஏழு கிலோமீட்டர் தூரத்திலுள்ள சீமாட்டியிடம் தச்சு வேலை பார்த்து வருகிறேன். அவள் கண்ணியமானவள்தான். அவள் எனக்கு எத்தனையோ தடவை தன் புத்தகங்களைத் தந்து உதவியிருக்கிறாள். சமயத்தில் ஏதாவதொன்றைப் படிக்கும் போது திடீரென்று நமது அறியாமையை அது நீக்கி விடுகிறது. பொதுவாகச் சொன்னால் அவளுக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டவர்கள். ஒரு தடவை அவளிடம் நான் இந்தப் பத்திரிகையைக் கொண்டு போய் கொடுத்தேன். உடனே அவளது மனம் புண்பட்டுப் போயிற்று. 'பியோத்தர், இந்த மாதிரி விஷயங்களை யெல்லாம் படிக்காதே. ஏதோ சில உதவாக்கரை பள்ளிக்கூடத்துப் பையன்கள்தான் இப்படி எழுதித் தள்ளுகிறார்கள். இதைப் படிப்பதால் உனக்குத் தொல்லைகள்தான் மிஞ்சும். சைபீரியாவுக்கோ, சிறைக்கோ உன்னை இவை அனுப்பி வைத்துவிடும்!' என்றாள் அவள்..."

மீண்டும் அவன் ஒரு கண நேரம் மௌனமாயிருந்தான். பிறகு கேட்டான்:

"அம்மா, அந்த அடிபட்ட மனிதன் இருக்கிறானே அவன் உங்கள் சொந்தக்காரனா?"

"இல்லை" என்றாள் தாய்.

பியோத்தர் சத்தமின்றி சிரித்தான். எதையோ கேட்டுத் திருப்தியுற்றவன் போல, தலையை அசைத்துக்கொண்டான். ஆனால் மறு நிமிஷத்திலேயே ரீபினுக்கும் தனக்கும் சொந்தமில்லை என்று கூறிய வார்த்தையால், ரீபினையே புண்படுத்தி விட்டதாக தாய் உணர்ந்து கொண்டாள். எனவே உடனே சொன்னாள்:

"அவன் எனக்குச் சொந்தக்காரனில்லை தான். இருந்தாலும் அவனை நான் வெகு காலமாக அறிவேன். அவனை என் சகோதரனாகவே- அண்ணன் போலவே மதிக்கிறேன்."

அவளது உணர்ச்சியை வெளியிட அவளுக்குச் சரியான வர்த்தைகள் கிடைக்கவில்லை. இதைக் கண்டதும் அவளுக்கு ஆற்றொணாத் துயரம் நெஞ்சில் பெருகியது. மீண்டும் அவள் அமைதியாகக் கண்ணீர் வடிக்கத் தொடங்கினாள். அழுத்தமும் ஆர்வமும் நிறைந்த அமைதி அந்தக் குடிசையில் நிலவியது. பியோத்தர் எதையோ கேட்டுக் கொண்டிருக்கும் பாவனையில் குனிந்து நின்றான். ஸ்திபான் தன் முழங்கைகளை மேஜை மீது ஊன்றியவாறே உட்கார்ந்து மேஜையைப் படபடவென்று கொட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி அடுப்பின் முன்னால் சாய்ந்து கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணின் பார்வை தன் முகத்தின் மீதே நடமாடுகிறது என்பதைத் தாய் உணர்ந்து தானிருந்தாள். தாயும் சமயங்களில் அவளை ஒரு பார்வை பார்த்தாள். அவளது நீள் வட்டக் கரிய முகத்தின் நேரிய மூக்கும், கூர்மையான மோவாயும் அவள் கண்ணில் பதிந்தன. அவளது பசிய கண்களில் கூர்மையும் கவனமும் மிகுந்திருந்தன.

"அப்படியானால் அவன் உங்கள்

## மக்சீம் கார்க்கி

நண்பன்தான்" என்று மெதுவாகச் சொன்னான் பியோத்தர். "அவன் தனக்கென ஒரு தனிக்குணம் படைத்த ஆசாமி. தன்னைப் பற்றி மிகவும் சரியாகவும் உயர்வாகவும் நினைக்கிறான். ஏ, தத்யானா, எப்படிப் பட்டவன் அவன்?"

"அவனுக்குக் கல்யாணமாகியிருக்கிறதா?" என்று தனது சிறிய வாயின் உதடுகளை இறுக மூடியவாறே குறுக்கிட்டுக் கேட்டாள் தத்யானா.

"அவன் மனைவி இறந்து விட்டாள்" என்று துக்கத்தோடு சொன்னாள் தாய்.

"அதனால் தான் அவன் அத்தனை தைரியமாயிருக்கிறான்" என்று செழுமை நிறைந்த ஆழ்ந்த குரலில் சொன்னாள் தத்யானா; "குடும்பஸ்தன் என்றால் இந்த மாதிரி மார்க்கத்தைத் தேர்ந்தெடுக்கவே மாட்டான், பயப்படுவான்."

"ஏன், நானில்லையா?"என்று கத்தினான் பியோத்தர்; "நான் கிரகஸ்தன் இல்லையா?"

"அடடா..." என்று அவனது கண்களைப் பார்க்காமலே உதட்டைக் கோணிச் சிரித்துக் கொண்டே சொன்னாள் அந்தப் பெண். "நீ என்ன செய்கிறாய்? என்னவோ பேசுகிறாய். சமயங்களில் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கிறாய். நீயும் ஸ்திபானும் ஓர் இருண்ட மூலையில் இருந்து கொண்டு இரகசியமாக வாசிப்பதும் பேசுவதும் ஜனங்களுக்கு என்ன நன்மையை உண்டாக்கி விடப்போகிறது? ஒன்றுமில்லை."

"என்னுடைய பேச்சை எவ்வளவு பேர் கேட்கிறார்கள் தெரியுமா?" என்று அவளது ஏளனத்தால் மனம் புண்பட்டு, அவள் கூற்றை அமைதியான குரலில் எதிர்த்தான் அந்த முஜீக். "நான் இங்கே என்னவோ 'ஈஸ்ட்' மாதிரி வேலை பார்ப்பதாக சொல்லலாம். நீ அப்படி நினைக்கக் கூடாது..."

ஸ்திபான் வாய் பேசாது தன் மனைவியைப் பார்த்தான்; தலையைத் தொங்க விட்டுக் கொண்டான்.

"ஒரு முஜீக் எதற்காகக் கல்யாணம் செய்து கொள்கிறான்?" என்று கேட்டாள் தத்யானா. "அவனுக்காக வேலை செய்ய ஒரு பெண் வேண்டும் என்று கூறுகிறார்கள். வேலை நல்ல வேலைதான்."

"உனக்கு இருக்கிற வேலை காணாதா?" என்று சோர்வுடன் கேட்டான் ஸ்திபான்.

"இந்த வேலையைப் பார்ப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? நாளுக்கு நாள் அரைப்பட்டினி கால்பட்டினியாய்க் கிடந்து வாழ வேண்டியதுதான் என் வேலை. தன் வயிற்றைக் கழுவ வசதி தராத இந்த உழைப்பு, பிறக்கும் குழந்தைகளைக் கவனிக்கவும் விடுவதில்லை."

அந்தப் பெண் எழுந்து வந்து தாயின் அருகே உட்கார்ந்து மூச்சு விடாமல் பேசினாள். எனினும் அவளது பேச்சில் தன் குறைபாடுகளையோ துக்கத்தையோ காட்டிக் கொள்ளாமல் பேசினாள்:

"எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒரு குழந்தை இரண்டு வயதாயிருந்த போது தன்மீது கொதிக்கிற வெந்நீரை இழுத்துக் கொட்டிக் கொண்டு செத்தது. இன்னொன்று குறைமாசப் பிறவியாக, பிறக்கும் போதே செத்துப் பிறந்தது. எல்லாம் இந்த நாசமாய்ப் போகிற வேலையால்தான். இந்த வேலையினால் எனக்கு எதாவது மகிழ்ச்சி உண்டா? முஜிக்குகள் கல்யாணம் பண்ணுவதில் அர்த்தமே இல்லையென்று தான் நான் சொல்வேன். எந்தவித இடைஞ்சலுமின்றி, நல் வாழ்வுக்காகத் தனிமையாக இருந்து போராடுவதை விட்டு விட்டு, தங்கள் கைகளைத் தாங்களே கட்டிக் கொள்கிறார்கள். அவ்வளவுதான். அவர்கள் தனியாக இருந்தால், அந்த மனிதன் மாதிரி சத்தியத்தை நாடி நேராக முன்னேறிச் செல்ல முடியும். நான் சொல்வது சரி தானே, அம்மா?"

"சரிதான்" என்றாள் தாய். "நீ சொன்னது சரிதான், கண்ணே. இல்லையென்றால் வாழ்க்கை இப்படியே தான் போய்க்கொண்டிருக்கும். மாறுதலிருக்காது..."

"உங்களுக்குக் கணவர் இருக்கிறாரா?"

"இல்லை. செத்துப் போனார், ஒரு மகன் இருக்கிறான்."

"அவன் உங்களோடு வாழவில்லையா?"

"அவன் சிறையிலிருக்கிறான்" என்றாள் தாய்.

இந்த வார்த்தைகளைக் கூறியதுமே, அந்த வார்த்தைகள் அவள் மனத்தில் எழுப்பும் பழக்கமான துயர உணர்ச்சியோடு ஒரு பெருமித உணர்ச்சியும் தோன்றுவதைத் தாய் உணர்ந்தாள்.

"அவனைச் சிறையில் போட்டது இது இரண்டாவது தடவை. கடவுளின் சத்தியத்தை மக்களிடம் பரப்பியது தான் அவன் சிறை சென்றதற்குக் காரணம். அவன் இளைஞன், அழகன், புத்திசாலி. அவன் தான் உங்களுக்காகப் பத்திரிகை போட வேண்டும் என்று முதன் முதல் நினைத்தவன்; மிகயீல் இவானவிச் அவனைவிட வயதில் இரண்டு மடங்கு மூத்தவன் தான், என்றாலும் மிகயீலை இந்த உண்மையான பாதையில் இழுத்து விட்டவன் என் மகன் தான். சீக்கிரமே என் மகனுக்குத் தண்டனை கொடுத்து அவனைச் சைபீரியாவுக்கு நாடு கடத்தி விடுவார்கள். ஆனால் அவன் அங்கிருந்து தப்பியோடி, திரும்பவும் இங்கு வந்து தன் வேலையைத் தொடர்ந்து நடத்துவான்.."

(தொடர்ந்து வரும்)

# பள்ளிக் காதல்

அந்தப் பல்கலைக்கழகத்தின் முன் நின்ற தேக்கு மரம் இலையுதிர்காலத்தின் இயல்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததால், அதன் கீழ் இருந்த இருக்கைகள் யாவும் வெறிச்சோடிக்கிடந்தன. ஆனாலும், அதன் கீழ் தனிமையில் இருந்த ரேணுகாவுக்கு இந்த சூரியக்கதிர் சுட்டுவிடுவதாகத் தெரியவில்லை. எப்படிச் சுட முடியும்? தனிமையிலே இனிமைக்கனவில் மிதந்து கொண்டிருந்த ரேணுகாவை சூரியனால் எப்படி சுட்டுவிடமுடியும்?

இந்தப் பல்கலைக்கழகத்துக்குள் காலடி எடுத்து வைத்ததில் இருந்து சுரேஷுக்கும் ரேணுகாவுக்கும் இடையில் ஏற்பட்ட சினேகிதம் ஓராண்டுக்குப்பின் காதலாக மலர்ந்தது. ரேணுகாவை சுரேஷ் மனம் திறந்து கேட்டபோது, ரேணுகாவின் உள்ளத்தில் எப்படிப்பட்ட பிரதிபலிப்பு! அப்பாடா இப்போ நினைத்தாலும் உடம்பெல்லாம் ஏதோ இனந்தெரியாத ஒரு விறுவிறுப்பு. ஆனாலும் ஒரு கிழமையின் பின்னர்தான் ரேணுகா சம்மதித்தாள்.

ஆரம்பத்திலே பல்கலைக்கழக வளவுக்குள் தங்களுடைய சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளத் தயங்கியவர்களுக்கு, இப்போ அந்த வளவே சாதகமாக மாறிவிட்டது. இதற்கெல்லாம் அங்குள்ள ஏனைய மாணவர்களுக்குத் தான் நன்றி சொல்லவேண்டும். பல்கலைக்கழக வளவு முழுவதும் இவர்கள் இருவரின் பெயர்களையும் இணைத்து எழுதினார்கள். அதனால் இப்போது இவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை. இது தவிர இவர்களைப் பற்றி யாரும் கதைப்பதுமில்லை. ஏறத்தாழ திருமணமான புதிய தம்பதிகள்போல் காணப்படுவார்கள். இப்படியே இன்று ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இவ்விரு உள்ளங்களும் தங்கள் உணர்வுகளைப் பரிமாறிக்கொண்டன.

இன்று சுரேஷ் காலை பத்துமணிக்கு வருவதாகக் கூறியதால், அவள் காத்திருக்கிறாள். மாணவர்கள் அனைவரும் இறுதிப் பரீட்சைக்காக நூலகத்திலே உணவு தேடிக் கொண்டிருந்ததால், உலாவித் திரியும் இந்த இரண்டு கிளிகளும் உல்லாசத்துக்குப் புறப்பட்டுவிட்டன.

சுரேஷ் அவளருகே வந்தவாறே கேட்டான், "என்ன சோதனை வருகுது இப்ப இங்கை என்ன பண்ணுகிறீங்கள்?"

ரேணுகாவால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. சிரித்தவாறே கேட்டாள், "நீங்கள் இப்ப ஏன் வந்தனீங்கள்?"

"ஏன் இவ்வளவு வெள்ளனவே வந்தனீங்கள்? இப்ப தானே பத்துமணி?"

"ம்... எனக்குத் தெரியவில்லை... ஆனா... அப்பிடி வாறதில ஒரு சந்தோசம் இருக்கு. வீட்டை இருக்க என்னவோ போல இருக்கு..."

"அப்ப இங்கை வர...."

"திருப்தி, மனசு பூரணப்படுகுது"

"எனக்குத் தெரியும். பொம்பிளைகளுக்குத்தான் ஆண்களை விட...." அவள் அவனுடைய வாயைப் பொத்தினாள்.

❣♥❤❣

இறுதிப் பரீட்சை யாவும் முடிவடைந்து, மாணவர்கள் ஒவ்வொருவராக தங்கள் சொந்த இடங்களுக்குப் புறப்படத் தயாரானார்கள். பலர் கைகளைக் குலுக்கி சந்தோசங்களை வெளிப்படுத்தினாலும், கண்களில் வழியும் கண்ணீர் பிரிவை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

ரேணுகாவும் அதே நிலைமையில் காணப்பட்டாலும், இன்று சுரேஷிடம் தங்களுடைய திருமணத்தைப் பற்றிக் கதைத்துவிட வேண்டும் என்ற மகிழ்ச்சியில் காத்திருந்தாள்.

சுரேஷ் அருகில் வந்தான்.

"ரேணுகா ஊருக்குப் போகவில்லையா?"

"நீங்கள் எப்ப போகிறீங்கள்?"

"நாளைக்கு."

"அப்ப நானும் நாளைக்கு. அதுசரி, இனி எங்கட வீட்டு விலாசத்துக்கே கடிதம் போடுங்கோ. நான் வீட்டை எல்லாப் பிரச்சனையும் சொல்லிப் போட்டேன். பிரச்சனையில்லை."

"அதெல்லாம் பாப்போம்."

"என்ன?" ரேணுகா அதிர்ச்சியுடன் கேட்டாள்.

"இல்லை ரேணுகா, நாங்கள் இஞ்ச காதலிச்சதெல்லாம் ஒரு விளையாட்டு மாதிரி, இதையெல்லாம்...."

ரேணுகா அழத் தொடங்கினாள்.

"இல்லை ரேணுகா, நான் கடிதத் தொடர்பை வைத்திருந்தால் நாளைக்கு உம்மை கலியாணம் செய்யவாறவர் என்ன நினைப்பார்?"

ரேணுகாவின் கண்கள் இருட்டத் தொடங்கின. சுரேஷ் அவளின் கண்களுக்கு இப்போ சிறுபுள்ளியாகத் தெரிந்தான்.



யாழ். ஞானசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

# அம்மா

"என்னங்க... என்னங்க?..." ரேகா கத்தினாள்.

"என்ன ரேகா.. ஏன் கத்துற?.. நான் ஷேவ் பண்ணிக்கிட்டு இருக்கேன்..." என்றவாறு கண்ணன், ஷேவ் பண்ணுவதில் மும்முரமாக இருந்தான்.

"ஷேவ் பண்றது இருக்கட்டும்.. முதல்ல இங்க ஓடிவாங்க... உங்க அம்மாவோட போட்டோ பேப்பர்ல வந்து இருக்கு..."

"எங்க அம்மாவோட போட்டோவா...? அடையாளம் தெரியாத அநாதைப் பிணம்னு பேப்பர்ல போட்டிருக்கா..?

"அய்யோ, இல்லைங்க.. உங்க அம்மா உயிரோடதான் இருக்காங்க.. உங்க அம்மாவை அநாதையா வீட்டை விட்டு விரட்டினீங்களே?.. இப்ப உங்க அம்மா லட்சாதிபதி ஆகிட்டாங்க.."

"என்ன ரேகா சொல்றே..?" என்றவாறே, பாதி ஷேவ் செய்த முகத்தோடு ஓடி வந்தான் கண்ணன்.

"உங்கம்மா வாங்கின சுவிப்டிக்கட்டுக்கு பத்து லட்ச ரூபாய் கிடைச்சிருக்கு... உங்க அம்மா போட்டோவோட கொட்டை எழுத்துல போட்டு இருக்காங்க.."

ரேகாவிடம் இருந்து பேப்பரைப் பிடுங்கிக் கொண்டு பார்த்த கண்ணன் வாய் பிளந்தான்.

"ஆமா ரேகா!... நிஜம் தான்... எங்க அம்மாவுக்குக் கிடைச்ச அதிர்ஷ்டத்தைப் பார்த்தியா..?"

"எங்காவது செத்துத் தொலை.. உன்னால என் நிம்மதியே கெட்டுப் போச்சுன்னு.. உங்க அம்மாவை விரட்டி அனுப்பினீங்களே..?"

"போதும் நிறுத்து!... எங்க அம்மா வீட்டை விட்டுப் போனதுக்கு நீதான் காரணம்.. தினமும் எங்கம்மாவைப் பற்றிப் புகார் மேல புகார் சொன்னே!... வயசானவங்க... நாமதான் அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்னு சொன்னேன்.. நீ கேக்கல... இந்த வீட்டில நான் இருக்கணுமா?... இல்ல உங்க அம்மா இருக்கணுமான்னு நீங்களே முடிவு பண்ணி வைங்கன்னு.. கோவிச்சுக்கிட்டு உங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டே!... நானும் எங்கம்மாவை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டி விரட்டிட்டேன்...!"

"சரி... எப்படியோ உங்க அம்மாவை விரட்டி அடிச்சிட்டோம். இன்னைக்கு உங்க அம்மா, பத்து லட்ச ரூபாய்க்குச் சொந்தக்காரி..! நீங்க அந்தப் பணத்து மேல எந்த உரிமையும் கொண்டாட முடியாது..!"

"ரேகா! ஆயிரம் தான் இருந்தாலும்... மகன்ங்கற இரத்தப் பாசம் இல்லாமலா

**எஸ். மணிவண்ணன்**

போயிடும்? ஏதோ, பொண்டாட்டி பேச்சைக் கேட்டு இப்படி நடந்துக்கிட்டான்னு... நினைச்சு அம்மா மனசு மாறிடுவாங்க...!"

"அப்போ வாங்க.. அவங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேப்போம்..."

"ரேகா! நீ என் கூட அம்மாவைப் பார்க்க வர வேண்டாம்...!"

"ஏன்...?"

"எல்லாம் காரணத்தோடு தான்...! 'அம்மா'. என் மனைவி பேச்சைக் கேட்டு.... உங்களை வீட்டை விட்டு விரட்டிட்டேன். இப்ப நான் திருந்திட்டேம்மா... அம்மா இல்லாத வீட்ல நீ இருக்க வேண்டாம்னு சொல்லி... ரேகாவை அவங்க அம்மா வீட்டுக்கு விரட்டி விட்டுட்டேன்'னு... சொன்னா, அம்மா முழுசா நம்பிடுவாங்க... அந்த பத்து லட்ச ரூபாய் நமக்குத்தான்..."

"நல்ல ஐடியாங்க. நான் எங்க அம்மா வீட்டுக்குப் போறேன். உங்க அம்மாவைப் பார்த்துப் பேசி... கையோட கூட்டிட்டு வந்துடுங்க!..."

"தாயம்மா வீடு எதுங்க?..." எதிர்ப்பட்டவரிடம் கேட்டான் கண்ணன்.

"எந்தத் தாயம்மாவைக் கேக்குறிங்க?... சுவிப்பில பத்து லட்ச ரூபாய் விழுந்ததே.. அந்தத் தாயம்மா வீடா?.."



"அ... ஆமா..." என்றான் கண்ணன்.

"அதோ, அந்த வீடு தான்...!"

கண்ணன் அந்த வீட்டை அடைந்தான். வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுப் பெண் சொன்னாள்:

"தாயம்மாவைப் பார்க்க வந்தீங்களா?.. இரண்டு நாளைக்கு முன்னாடி திடீர்னு நெஞ்சு வலி வந்து.. இப்ப ஆஸ்பத்திரியில தான் இருக்காங்க.. அந்த அம்மாவோட மகன் ராமுதான் ஆஸ்பத்திரியிலேயே தங்கி அம்மாவைக் கவனிச்சிட்டு வர்றான்..."

"எ... என்ன சொல்றீங்க?... தாயம்மாவுக்கு இன்னொரு மகனா....?" கண்ணன் குழப்பத்துடன் கேட்டான்.

"ஏன் தம்பி, வயித்துல பிறந்தாத்தான் மகனா?.. ராமு, தாயம்மா வயித்துல பிறக்காத மகன்!... அது பெரியகதை... ஆமா, நீங்க யாரு?..."

"நான்... நான் அவங்களுக்கு ரொம்ப வேண்டப்பட்டவன்..." தடுமாற்றத்தோடு சொன்னான். தாயம்மா, எந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டு அங்கே விரைந்தான்.

'அம்மா' என்ற புனிதமான உறவை உதறித்தள்ளிய நான்... இன்று எந்த முகத்தை வைத்துக் கொண்டு அம்மாவைப் பார்க்க வந்திருக்கின்றேன்.....?

அம்மாவைப் பார்த்துக் கதறி அழ வேண்டும் என்ற உணர்வோடு ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

எதிர்ப்பட்ட நர்ஸிடம் விவரம் கேட்டான்.

"சாரி... நீங்க சொல்ற தாயம்மாவுக்கு திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்து கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் இறந்துட்டாங்க!..." நர்ஸ், சொல்லி விட்டுப் போனாள்.

"அம்மா!..." என்று வாய்விட்டுக் கத்த அருகதை அற்றவனாய், நர்ஸ் சொன்ன அறைக்கு வேகமாய் வந்தான் கண்ணன்!

அந்த அறையில்–

ராமு... தாயம்மாவைக் கட்டிக் கொண்டு கதறி அழுது கொண்டு இருந்தான். தலையிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, ராமு, பலவாறு புலம்பி அழுது கொண்டு இருந்தான்.

'அம்மா!' என்ற உரிமையோடு அருகே செல்ல முடியாதவனாய்.. கண்ணன், வாசலிலேயே நின்று விட்டான்! அழுகையை அடக்க முடியாதவனாய் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு... நின்றான்.

தாயம்மாவின் வயிற்றில் பிறக்காத ராமுதான், அம்மாவின் இறப்பைத் தாங்க முடியாதவனாய் அழுது கொண்டே இருந்தான்!...

# சம்மதம்

**முகில் விலக்கி முகம் காட்டாத நிலவாய்- அவள் முகம் காணாமல்..........**

சரியாக நான்கு வருடங்களின் பின் சைக்கிள் ஓடுவது எனக்கு கொஞ்சம் சிரமமாகவும் களைப்பாகவும் இருந்தபோதும், அவளைப் பார்க்கப் போகும் உற்சாகம் மனதில் குதிக்க காற்றாய் பறக்கிறேன். சில்லென்று வீசும் காற்றும் பச்சைக் கம்பளம் போட்டமாதிரி நெல் வயலும் அந்த ஒற்றையடிப்பாதையில் போகும் இரட்டை மாட்டுவண்டி மணி ஓசையும் மனசுக்குள் தாளம் போட, களை எடுக்கும் கனகம்மாவின் கூட்டத்தின் கேள்விகளுக்கு பதில் அளித்தபடியே சைக்கிளை மிதிக்கின்றேன். வயல் வெளிதாண்டி ஊரை அண்மித்ததும் உள்ளம் பனியில் மலர்ந்த ரோஜாவாய்ச் சில்லிட்டது. சைக்கிளை விட்டு இறங்கி அம்மன் கோயில் தெப்பக் குளக் கட்டருகே நிறுத்திவிட்டு குளக்கட்டுப் படியில் உட்கார்ந்து கொள்கிறேன்.

இதே குளக்கரையில்தான் முதன் முதலில் அவளைச் சந்தித்தேன். அந்த நினைப்பே இதயத்தில் இப்போதும் தேன் வார்த்தது. அல்லிப் பூ பிடுங்கிக்கொண்டு அழகு ரோஜா பாசியில் வழுக்கி தண்ணீருக்குள் விழுந்த போது கை கொடுத்து தூக்கி விட்டேனே. அந்தப் பஞ்சுக் கரத்தின் மென்மை இப்ப நினைத்தாலும் இதமாக இருந்தது. படபடத்த விழிகள் நாணத்தில் மருண்டு நன்றி சொன்ன விதத்தை மறக்க முடியுமா.? குயிலை விழுங்கி விட்டுத்தான் அவள் கதைத்தாளா என்று ஒரு கணம் எண்ணுமளவிற்கு இனிமையான குரல் சங்கீதமாய் இப்போதும் காதில் ஒலிக்கிறது.. நழுவி விழுந்த பூக்களை எடுத்துக் கொண்டு அனிச்சம்பாதம் நோக அம்மன் கோயில் வீதியின் முதல் வீட்டிற்குள் ஓடி ஒழிந்தாளே... மனம் ஒரு கணம் எண்ணிச் சிரிக்க, விழிகள் அவள் வருவாள் என்ற நம்பிக்கையில் வழியைப் பார்த்தன.



அன்று அவள் பெயரைக் கேட்காமலே சென்றதை எண்ணி இரவு முழுவதும் தூக்கமில்லாமல் துடித்ததும் அவள் அழகு உருவம் என்னை வதைத்ததும் இவளே என் மனைவி என உள்ளம் திரும்பத் திரும்ப சொன்னதும் நினைவுக்கு வந்தது. எத்தனை ஆசை இருந்தும் அவளைத் திரும்பத் தேடிப் போய் கதைக்க முடியாத

**ஜெயந்தி ஜெய்சங்கர்**

என் குடும்ப நிலை. வயது வந்து கல்யாணத்துக்கு வரிசையாய் நிற்கும் இரண்டு சகோதரிகள். குடும்பப் பொறுப்பு காதலை விழுங்க, நான்கு வருடங்கள் அந்நிய நாடு சென்று உழைத்து அழுத்திய சுமையையும் சுகமே இறக்கி சுதந்திரப் பறவையாய் இன்று அவளைத் தேடிவந்திருக்கிறேன்.

'நீயே தான் என் மனைவி என்று உன்னைக் கண்ட போதே முடிவு செய்து விட்டேன், உன் முடிவு கேட்டு மூன்று முடிச்சுப் போடப்போறேன்' என்று அந்த முழு நிலவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்று எண்ணியபோது, கோயிலுக்குள் அந்த தேவதை சென்று கொண்டிருந்தாள். கறுப்பில் பூப்போட்ட சேலை காற்றில் கதை பேசியது. அர்ச்சனைத் தட்டை கொடுத்து அம்மன் பெயரில் அர்ச்சனை செய்யும்படி கூறுகின்றாள். அவள் குரல் மட்டும் கேட்கிறது. அதே இனிமை. கார் கூந்தல் மேகமாய் என் கண்ணுக்குள் ஓடுகிறது. முகில் விலக்கி முகம் காட்டாத முழுநிலவாய் அவள் முகம் காணாமல் தவித்து நிற்கின்றேன்.

பூஜை முடிந்து அர்ச்சனைத் தட்டைப் பெற்றுக் கொண்டவள் தட்டுக்குள் இருந்த குங்குமத்தை எடுத்து அம்மன் பாதத்தில் வைத்துவிட்டு திரும்பியவளைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி. ரவிவர்மா ஓவியம் மாதிரி சிரித்து சிலிர்க்க வைத்தவள், மோனாலிசா போல் சோகமா, வேதனையா எது என்று அறிய முடியாத உணர்வை முகத்தில் புதைத்துக் கொண்டு நிலம் பார்க்கின்றாள்.

"என்னை ஞாபகம் இருக்கிறதா?" "ஆம்" என்று தலையசைக்கிறாள். "உங்களுக்குத் திருமணம்...?" அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கின்றாள். பார்வைக்குள் வெறுமை. மீண்டும் அதே தலையசைப்பு, எனக்கு நெஞ்சம் கனத்தது. வேதனையில் தொண்டை அடைத்தது. நான் தவித்துத் துடிப்பதை பற்றி அலட்டிக் கொள்ளாமல் நடையைத் துரிதப்படுத்தி அதே வீட்டுக்குள் நுழைந்து மறைகிறாள்.

அவள் அம்மன் பாதத்தில் வைத்த குங்குமத்தை எடுத்துக் கொண்டு மனச் சோர்வுடன் ஊர் வந்து சேர்ந்தேன். இரவெல்லாம் உறக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

பாதி இராத்திரியில் அம்மாவை எழுப்பி அவளைப் பற்றிக் கூறுகிறேன். "ரவி.. நீ சொல்லுறது. முருகேசுவின்ரை மகள் கௌரியைத் தானே? பச்சைக்கிளியை பருந்திட்ட குடுத்த மாதிரி அந்தப் பிள்ளையை சோமன்ரை மகன் ரூபன்– அந்த அரைக் கிறுக்கனுக்கு ஏமாற்றிக் கட்டி வைச்சிட்டுதுகள். சீதனம் எதுவும் இல்லாததால் 'ஓம்' எண்டு அவன் முருகேசன் பாவி பெட்டையை கட்டி கொடுக்கச் சம்மதித்திட்டான். கலியாணம் கட்டி நாலாம் நாள் கடலுக்கு குளிக்கப் போனவன் சடலமாய் தான் ஒதுங்கினான். பாவம் அந்தப் பிள்ளை; கலியாணம் எண்ட பெயரிலை தண்டிக்கப்பட்டு விட்டாள்." சொல்லி விட்டு அம்மா என்னை அர்த்த புஷ்டியோடு ப்ார்க்கிறாள். அழுத்தமான புன்னகையோடு மீண்டும் படுத்துத் தூங்குகிறேன்.

இப்போது தூக்கம் வந்து மெல்ல என்னை அணைக்கின்றது. காலையில் பரபரப்போடு எழுந்து குங்குமத்தையும் எடுத்துக் கொண்டு அம்மாவையும் அழைத்துக் கொண்டு கௌரி வீட்டுக்குப் புறப்பட்டேன். கோலம் போட்டுக் கொண்டு இருந்த கௌரி அம்மாவைக் கண்டதும் அருகில் வந்து வரவேற்றாள்.

கௌரியின் கையைப் பற்றிக் கொண்டு அம்மா கதைத்தபோது, கவிதை எழுதவைக்கும் அவள் விழிகள் நீரை வடித்தன. என்மனம் ஒரு கணம் துடித்து அழுதது.

அவளின் தந்தை முருகேசர் என் அருகில் வந்து என் கரங்களைப் பற்றினார். விழி நீர் என் விரல் இடுக்கில் விழுந்து சிந்தியது. நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்க்கின்றேன். மகிழ்ச்சியின் முக மலர்விலும் உதடுகள் விம்முகின்றன. கைகளை அழுத்தி ஆசுவாசப்படுத்திவிட்டு கௌரியின் அருகில் செல்கின்றேன்.

கண்கள் துடிதுடிக்க இதயம் படபடக்க புரியாத உணர்வுக் குகைக்குள் நுழைந்தவளாய் என்னை நோக்குகின்றாள். தாமரை ஒன்று பாதத்தில் குவிந்திருக்க, குனிந்து கரம் தொட்டு முகம் நிமிர்த்துகிறேன். இதழில் புன்னகையும், இதயத்தில் மின்னலையும் தெறிக்க வைத்த அந்த வெள்ளை மல்லிகையை கைகளில் ஏந்துகிறேன். நெற்றிக் குங்குமம் என் நெஞ்சம் தொட்டது.

# ஒரு காதல் குற்றம்

**எஸ். ரோஜா**

**"பயங்கரவாதி என்ற முத்திரையோடு தடுப்பு முகாமில் மூன்று வருடங்கள். சஹானாவையும் தொலைத்திருந்தான்"**

கழுத்தில் புரளும் கற்றைக் கூந்தலும்; காலில் தவழும் வெள்ளிக் கொலுசுகளுமாய்....

நெல்லி மரத்து ஏ.சீ நிழலில்;

புள்ளி போட்ட நீலச் சல்வாரியோடு.. நிற்கின்றாளே அவள்!

சஹானா..!!!

மார்கழி மாதத்தின் இளமைப் புயல்!

பருவம் பதினாறு என்றாலும்... உருவம் மலைக்க வைக்கும்.

அந்த இளமைப் புயலை;

இதயத்தில் பொத்தி வைத்தவன் அரவிந்த்.

அவன்–

காதல் சாம்ராஜ்யத்தில் அவள் ஒரே... தேவதை.

துருப்பிடித்த இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் துடிக்கின்ற புருவங்களோடு...;

அவள் தெரிந்தாள்.

பளிங்கு முகம் அழுது பழுத்திருந்து.

அரவிந்த்... கம்பிகளில் கைவைத்து; கதைக்க எத்தனித்தான். "....சஹீ.... நீ... இங்கெல்லாம் வந்திருக்கக்....." முடிய வில்லை. தேம்பினான்.

அழுகை வந்தது.

அவளும் சேர்ந்தழுதாள்.

சிறைக் காவலரின்... பூட்சின் உரத்த ஒலி... அவளை உயிர் வரை நடுங்க வைத்தது.

அவள் போய் விட்டாள்.

அதன்பின்னர்..... ஒரு புதன்கிழமை மடல் வந்தது.

அவளின் "காதல்" கிடைத்த நாளும் இது மாதிரி ஒரு இனிய புதன் கிழமை.

இவனுக்கோ..! புதையல் கிடைத்த உதறல் கால்கள் நிற்கவில்லை.

சாத்தியமா நம் காதல்?! என்று இவன் செத்துப் போக நினைத்த வேளை.... தைரியப்படுத்தி நிற்கவைத்தவள்.

அவள் சஹானா!!

இவன் அரவிந்த்!!

முடியுமா? இந்தக் காதலின் ஜனனம் என்று இவன் தவித்த வேளை....

தொடரும்... என்று இதயத்தில் செர்ரி மரங்களை... நட்டுவிட்டுப் போன பர்தா தேவதை.

மதங்களால் கூறு போட முடியாதளவு இருவர் மனத்திலும் பாறாங்கல்லாய் இறுகிக் கிடந்தது காதல்.

அவனுக்குள் அவளும்;

அவளுக்குள் அவனுமாய்;

உருகிப் போனார்கள்.

எதிர் வீட்டு வேலியில் மலர்கின்ற சஹானாப் பூவுக்காய்... அவன் ஒவ்வொரு கணங்களாய் காத்திருக்கத் தொடங்கினான்.

அன்றும் ஒரு புனிதமான புதன்கிழமை.

ஆளரவமே இல்லாத வேளை:

வேலி பூப் பூத்தது.

"சஹீ...."

"ம்...

"நாளக்கி ஒரு நாள் மட்டும் லைப்ரரி வர்ரியா?"

"...."

"கட்டாயமா நீ வரணும்..."

"ம்..."

"சஹீ நம்ம காதல் வெற்றி பெறுங்கிறியா....."?!

"நாம... ஸ்வாசிக்கறது உண்மையின்னா... நாம வாழ்றது



உண்மையின்னா.... சூரியன் ஒளிர்றது உண்மையின்னா.... நம்ம காதலும் வெற்றி பெறுங்கிறது உண்மையிலும் உண்மை...."

உதடுகள் துடிக்க....

இன்னொரு ஜான்சி ராணியாகத் தெரிந்தாள்.

அதன்பின்னர்....

அரவிந்த்... அப்படியெல்லாம் பேசவில்லை.

காதல்தான் வாழ்க்கை... வாழ்க்கை தான் காதல்... என்றாகிப் போனான்.

மறுநாள்–

சஹானா கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டிருந்தாள். இனிக்க... இனிக்கப் பார்த்து விட்டுப் புறப்பட்டான்.

காத்திருக்கணும்... அவள் வரும்வரை வினாடிகளாய்... காத்திருக்கணும்.... நடையில் பரவசமும்; பார்வையில் பதற்றமுமாய்; எகிறிக் குதித்த இதயத்தோடு நடந்தவனை...

வழிமறித்தது ட்றக்!!

"விசாரிக்க வேணும்... ஏறு ட்றக்கில..."

எதிர்ப்பே இல்லாமல் ஏறினான்.

சவக்களை தெரிந்த முகங்களோடு... இவனைப் போல இன்னும் பலர் அதனுள் அடங்கியிருந்தனர்.

"பயங்கரவாதி" என்ற முத்திரையோடு தடுப்பு முகாமில் மூன்று வருடங்களை தொலைத்திருந்தான்.

சஹானாவை நினைப்பதில்லை.

நினைத்தால்...;

அவனுக்கு கிடைக்கும் காய விருந்துகள் அவள் நினைவுகளைக் காயப்படுத்தக் கூடும்.

அந்தத் தென்றல் இதனைத் தாங்காது.

அதற்காக;

ராவுப் பொழுதுகளில் சஹானாவைப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அடிக்கடி–

வரும் புதன் கிழமைகளில்–

அவள் மடல் வரும்.

அவள் மடல் வரும் நாட்களை அவன் மனம் யாசிக்கத் தொடங்கியது.

அவள் மடல் போட்டாள். அதில் மனக் காயங்களுக்கு மருந்து போட்டாள்.

எவ்விதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல் அவள் "காதலை" மட்டும் சுமந்தவனாய்... சுகமாகிக் கொண்டிருந்தான்.

மடல் அடிக்கடி வரும்.

அது மட்டுமே உயிரை நிற்க வைத்திருப்பதாய்ப் படும்!!

இன்று–

1996.02.28

அவள் மடலாய் வருவாள்.

நிமிஷங்கள் கனக்க... கனக்க... காத்திருக்கத் தொடங்கினான்.

அவள் மடல் வருகையில்...;

சிறை சொர்க்கமாய்த் தெரிந்தது.

காவலர்கள் தேவர்களாய்த் தெரிந்தார்கள்.

அதோ....

காவலரின் கைப்பிடியில்...

தூய வெண் கவராய்.. சஹானா!!

மடலுக்கு வலிக்குமே என்று ஆதங்கப்பட்டான்.

தந்தவர்–

போய்விட்டார்.

எச்சில் பட்ட அந்த என்வலப்பை வெகு எச்சரிக்கையாய்ப் பிரித்தான். இதயம் வெளியே வந்து விடுவது மாதிரித் துடித்தது. நேற்றுப் பட்ட காயங்கள் இலேசாய்த் தெரிய...

பிரித்தான்–

வெளியே விழுந்தது திருமண அழைப்பிதழ்.

திகைத்தான்....... படித்தான்.

...... இன்ஷா அல்லாஹ் வருகின்ற ஷஃபான் மாதம்... எனது மகள் சஹானாவிற்கும்..."

அவன்–

வாசிப்பதை நிறுத்திவிட்டு நினைத்தான்.

என் கல்லறையில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்.

தோற்றம் – 1970-03-05

மறைவு – 1996-02-28

"ஜனனம் மட்டுமல்ல காதலும் பூமியில் குற்றமாகலாம்." இப்போதும் அவனுக்கு உயிர் இருந்த மாதிரித் தெரிந்தது.

இதை ஏன் அனுப்பியிருப்பார்கள்?!

என்பது மட்டும்;

தெரியவில்லை?

அவன் இங்கு அடைக்கப்பட்ட மாதிரி...!!



படிப்பகம்

# இலக்கிய நயம்

# பொருந்தாத கண்கள்



பட்டத்துராணி மலர்விழி. 'பெயரை தவறாக வைத்து விட்டார்கள். மலர்விழியா அது? மதன விழி!' தளபதி பரந்தாமன் மனதில் எழுந்த எண்ணம்தான் அது.

மன்னருக்கு அருகில் அமர்ந்திருந்து வைத்த விழி வாங்காமல் தன்னை நோக்கிக் கொண்டிருக்கும் **மன்னன்** மகளின் பார்வையை சந்திப்பதைத் தவிர்த்தான் பரந்தாமன்.

"என்னப்பா தளபதி, குமரிப் பெண்கள் போல தலை குனிந்திருக்கிறாய்! என்ன நடந்தது உனக்கு!" மன்னன் இள நகையோடு வினா தொடுத்தான்.

"ஒன்றுமில்லை மன்னா!" என்று நிமிர்ந்தவனின் கண்கள் கட்டுப்படாமல் மலர்விழியின் பக்கம்தான் சென்றன.

இதழ்களில் குறுநகையோடு இவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

இவன் பார்வை பட்டதும் நாவை மெல்ல நீட்டி மேல் உதட்டை தொட்டுக் காட்டினாள். 'அய்யோ' என்று மனதுக்குள் கூவி மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டான் தளபதி.

மன்னனுக்கு தன் மகளின் குறும்பு விளையாட்டு தெரியவில்லை. தன் மகள் அருகில் இருப்பதால்தான் தளபதி வெட்கப்படுகிறான் என்று நினைத்து விட்டான்.

"பெரிய வீரன் நீ. ஒரு பெண் பிள்ளை முன்னால் இப்படி வெட்கப்படுகிறாயே. உன்னால் எனக்கு வெட்கமாயிருக்கிறது போ!" என்றார் புன்னகை மாறாமல்.

'பெண் பிள்ளையாம், பெண் பிள்ளை. கண் பிள்ளை. கண்களா அது?! வேல் முனையைக்கூட விளையாட்டாக எதிர்கொண்டிருக்கிறேன். 'இவள் விழி வீச்சை எதிர்கொள்ளவே முடியவில்லையே!' என்று தனக்குள் நினைத்தான் தளபதி.

மன்னனுக்கு வேடிக்கையாக இருந்தது. திரும்பி மலர் விழியைப் பார்த்து புன்னகைத்தார். அவளோ ஒன்றுமறியாத அப்பாவிபோல முகத்தை வைத்திருந்தாள்.

"அப்பா! நான் உள்ளே செல்லுகிறேன்." என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

"பார்த்தாயா தளபதி, என் மகளுக்கே உன் வெட்கம் தாங்கமுடியவில்லை! ஓடி விட்டாள், உள்ளே போய் உரத்து நகைக்கப் போகிறாள்!"

மன்னன் நகைத்தான்.

'நல்ல பெண். நல்ல தந்தை. சரி, நமக்கேன் பொல்லாப்பு' என்று நினைத்தபடி ஒப்புக்காகப் புன்னகைத்தான் தளபதி.

மன்னனோடு பேசிவிட்டு, விடைபெற்று சென்றான் தளபதி. அரண்மனையின் நந்தவனப் பக்கமாக நடந்துதான் வெளி வாசலுக்கு செல்ல வேண்டும்.

நந்தவன நறுமணமும், வருடிச் செல்லும் வாசத் தென்றலும் சுகமாக இருந்தது.

அனுபவித்துக் கொண்டு நடந்து சென்றவன்மீது பூங்கொத்து ஒன்று வந்து விழுந்தது. கன்னத்தில் பட்டு தரையில் விழுந்தது.

இதமான தாக்குதல். என்றாலும் யாரது வேலையாக இருக்கும். என்ன ஒரு துணிச்சல் என்று எரிச்சல் பிறந்தது.

அருகில் மரத்துக்குப் பின்னால் யாரோ ஒளிவதுபோல சலனம் தெரிந்தது. நாலடி எடுத்துவைத்து, எட்டிப் பார்த்தபோது, அங்கே மலர்விழி.

திரும்பி நடக்க காலெடுத்து வைத்தவனை 'நில்லுங்கள்' என்று எழுந்த அவள் குரல் தடுத்து நிறுத்தியது.

அவள் பக்கம் திரும்பாது அப்படியே நின்றான். அருகில் வருகிறாள் என்று முகத்திலடித்தது பெண் வாசனை.

"என்னைக் கண்டு ஏன் ஓடுகிறீர்கள்?"

பதில் சொல்லவில்லை பரந்தாமன்.

"பேசவும் மாட்டீர்களா?"

"அநாவசியமாக யாரோடும் நான் பேசுவதில்லை!"

"அவசியம் கருதிப் பேசலாம் அல்லவா?"

"என்ன அவசியம்?"

"ஒரு அழகான, கம்பீரமான, கட்டுமஸ்தான, மனம் கனிவான ஆண் மகனை ஒரு பெண் நாடி வருகிறாள் என்றால் என்ன அர்த்தம்?"

"தெரியாது!" அறைவது போல பதில் சொன்னான். அவளா விடுவாள்.

"இது என்ன பொய் மீசையா?"

சுட்டுவிரல் நீட்டிக் கேட்டாள். அவன் முறைத்தான்.

"முறைப்புக்கு மட்டும் குறைச்சலில்லை.

## தருவது-ரசிகன்

மீசையுள்ள அளவுக்குக்கூட ஆசையில்லையே என்று பார்த்தேன்!"

பதில் பேசாமல் நகர எத்தனித்தவனை அவனே எதிர்பாராதவகையில் கையைப் பிடித்து நிறுத்தினாள். தடுமாறித்தான் போனான். அதனை மறைக்க, "என்ன வேண்டும்?" என்றான்.

"கேட்டால் கிடைக்குமோ?"

"இந்த சுற்றிவளைப்பெல்லாம் வேண்டாம்."

"சுற்றிவளைத்தால்தானே சுகம்! ஒற்றியெடுத்தால்தானே இதம்!" அவன் முகத்துக்கு அருகே அவள் முகம். அவன் உதட்டுக்கு எதிரே, அவளின் துடிக்கும் இதழ்கள். அவன் நெஞ்சுக்கு நேரே, நிமிர்ந்த அவள் நெஞ்சகங்கள். குரலிலே போதை. விழிகளிலே எதையோ எதிர்பார்க்கும் தாபம். தாகம்.

இத்தனை அருகில் இளம் பெண் வாசனை. தானாக கனிந்து வந்து கையில் கிடைத்துள்ள கனி. யாராக இருந்தாலும் நாவூறியிருக்கும். நினைவு தடுமாறியிருக்கும்.

தளபதி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அவள் பிடியில் இருந்து தன் கரத்தை விடுவிக்க முயன்றான்.

அவன் தன் கரத்தை இழுக்க, அவளும் பதிலுக்கு அவனை தன்னை நோக்கி இழுக்க, அவளின் கைகளுக்கு அத்தனை பலமிருக்கும் என்பதை எதிர்பார்க்காத தளபதி சமநிலை இழந்து அவள்மீது சரிந்தான்.

அவன் பாரம் தாங்காமல் சரிவதுபோல அவனை இழுத்தபடியே தரையில் மல்லாந்து சாய்ந்தாள் மலர்விழி.

அவளின் முழு உடல்மீதும் அவன் உடல் சரிந்து மூடியது. விலக முடியாமல் தன் கைகளை அவன் முதுகுப்புறமாக கோர்த்து இறுக்கிக் கொண்டாள் மலர்விழி.

பூவொன்று வண்டை சிறைப்பிடித்தது. வண்டுக்கு மூச்சு முட்டியது. மார்போடு மார்பு அழுந்த, மலர்விழி துணிந்து அவன் உதட்டின்மீது இதழ்களால் படையெடுத்தாள்.

விடுபடமுடியாத சிறை. விலக முயன்றான். உதடு அவன் வசம் இல்லை. விடுபடவைக்க முகத்தை உயர்த்தினான். பற்களால் உதட்டை பிடித்துக் கொண்டாள்.

"தளபதி! நான் உங்களுக்குத்தான்!" என்றாள் மயக்கமான குரலில். பேசியதால் அவன் உதட்டுக்கு விடுதலை கிடைத்தது.

அவள் கரச் சிறை உடைத்து மீண்டு எழுந்தான். கண்கள் சிவக்க, அவளை எரித்துவிடுவதுபோல பார்த்தான்.

அவள் எழுந்து அருகில் வந்தாள். "கோபமா?" என்றாள்.

அவன் பதிலே சொல்லவில்லை. விடுவிடுவென்று நடந்து போய்விட்டான்.

'தேக்குமரம் ஒன்று சாய்ந்தது போலிருந்தது அவன் சரிந்தபோது!' என்று நினைத்து பெருமூச்சு விட்டபடியே, அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரவில் ஏக்கம் நெஞ்சை ஆக்கிரமிக்க தூக்கம் தொலைந்து போனது.

பூவில் விழுந்த வண்டு பொறுமையாக இருக்காது என்று நினைத்தேன்! பொய்க்கச் செய்து விட்டதே நினைப்பை!' என்று வருந்தினாள்.

'என் விருப்பம் என்னவென்று உள்ளங்கை நெல்லிக்கனியாக புரியவைத்தும், தன் விருப்பம் போல தன் வழியே போனானே! அப்படியிருந்துமா விழி விரித்து அவன் எண்ணத்தில் காய்ந்து கொண்டிருக்கிறாய்! மனதின் ஒரு ஓரத்தில் கேள்வி பிறந்தது.

'நான் என்ன செய்வேன். என்னோடு பொருந்தாமல், காதல் களத்தில் பொருத அழைத்தும் விரும்பாமல் அவர் சென்றாலும், இந்தக் கண்கள் அவரைக் காணாமல் பொருந்தோம் என்று பொல்லாப்பு செய்கின்றனவே!' என்று கண்கள்மீது பழியைப் போட்டாள் மலர்விழி.

"கண் ஏன் பொருந்தவில்லை?"

"கண் நிறைந்த காதலனைக் காணாமல்!"

கேள்வியும் தொடுத்து, அவளே பதிலும் சொல்லிக் கொண்டாள்.

காதலன் புறக்கணித்தாலும், அந்தக் கண்ணாளனைக் காணாமல் தூங்க மறுத்த கண்களை உடைய காதலியை திருவள்ளுவரும் அறிவாரோ? அறியாமல் எப்படி இந்த குறள் தந்திருப்பார்?!

**"பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்**
**காணாது அமையல கண்"**

குறள்-1283. அதிகாரம்-129

# ஜெயலலிதாவின் இரட்டைக் குழந்தைகள்

# சிந்தியா பதில்கள்

**★ ரஜினி அலை இல்லையென்றால் ஜெயலலிதா கரை சேர்ந்திருப்பாரா?**

ஆர். விவேகானந்தன், மட்டக்களப்பு.

*கரையும் சேர்ந்திருப்பார். கரைகாணாத வளமும் கண்டிருப்பார்.*

**★ டியர் சிந்தியா! அடுத்த இந்தியப் பிரதமர் யார் என்று ஒரு கணிப்புச் சொல்ல முடியுமா?**

எம். அஹமட், பொரளை.

*ஆரம்பிக்கவும் தயங்குவார்; முடிக்கவும் தாமதிப்பார்; அதனால் தவிக்கவும் வைப்பார். புன்னகையைக் கூட விரயமாக்காத சிக்கனம். ஆனாலும் இருப்பவர்களில் அவர் பரவாயில்லை என்கிறது வெகுஜனம். தாத்தாவுக்குதான் அதிஷ்டம் அடிக்கும் போலிருக்கிறது.*

**★ தமிழக முதல்வரின் முதல் எதிரி கருணாநிதியா? ரஜினியா? அல்லது கூட்டணியை பூச்சியமாக்கிய மூப்பனாரா?**

செ. மகேஸ்வரன், கொழும்பு-9.

*மூவருமல்ல! ஜெயலலிதாதான்!*

**★தமிழ் சினிமாவின் தரம் எப்படியிருக்கிறது?**

க. பிரேமலதா, ஹட்டன்.

*தொழில் நுட்பமும், தொடும் நுட்பமும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. கதாநாயகன் தொடாத இடமுண்டா, இல்லையா? என்று ஜொள்ளுப்பிரியர்கள் பட்டிமன்றம் நடத்துமளவுக்கு புதிய சிந்தனைகளை(?) வளர்த்துக் கொண்டிருக்கிறது.*

**★டியர் சிந்தியா! தமிழக முதல்வர் ஜெயலலிதாவை முரசுக்கும் பிடிக்காமல் போய் விட்டதோ? முன்னர் புகழ்ந்தீரே?**

செல்வி. எம். கலைவாணி, நீர்கொழும்பு.

*அன்றும், இன்றும், என்றும் அவரிடம் பிடித்த விஷயம் தன்னம்பிக்கை! வியக்க வைத்தவர் இப்போது வெறுக்கப்படக் காரணம் அந்த இரட்டைக் குழந்தைகள். குழந்தைகளின் பெயர்கள் தெரியுமா? ஒன்றின் பெயர் ஆணவம்: இன்னொன்றின் பெயர் பேராசை. இந்த இரட்டைக் குழந்தைகளும் வளர்ந்து கைவீசி நடக்க ஆரம்பிக்க, மூன்றாவது குழந்தையும் பையப் பைய வளரத் தொடங்கியது. அதன் பெயர்தான் அழிவு.*

**★ ஜனாதிபதி சந்திரிக்காவின் சீன விஜயம் இந்தியாவை முகம் கோணச் செய்திருக்குமோ?**

எஸ். பாலசுந்தரம், திருக்கோணமலை.

*மகள் சந்திரிக்காவைவிட அம்மா சிறிமா சீனாவுடன் இறுக்கமாக கைகுலுக்கிக் கொண்டிருந்தார். அப்போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி முகம் சுளித்தாரா? இல்லையே! இலங்கைக்கு சீன உறவு இருந்தும், ஜே.வி.பியை அடக்க இந்தியாவும் ஒரு கை கொடுத்ததே ஞாபகம் இல்லையா?. தன்னோடு முறைத்தால்தான் இந்தியா கோபிக்கும். அண்டைவீட்டுக்காரர் எவருடனும் வம்புக்குப் போகாத நல்ல பிள்ளையாக நடந்துகொள்கிறது இலங்கை.*




**★ சந்திரசுவாமியை கைது செய்து விட்டார்கள். இனி சுவாமி என்ன செய்யப் போகிறார்?**

ரி. ராஜேந்திரன், குருநாகல்.

*பஞ்சுமெத்தையும் ஒன்றுதான்; கட்டாந்தரையும் ஒன்றுதான் என்று விறுவிறுவென்று சிறைக்கு நடையைக் கட்டியிருக்கலாம். ஆனால் சுவாமியோ சொகுசு கேட்கிறது. முன் ஜாமீன் என்றும் "கைதாக மாட்டேன்" என்றும் அடம் பிடிக்க, வா, வா வென்று அதிகாரிகள் வடம்பிடிக்க ஒரே அமளி துமளியாகி விட்டதாம். பக்தர்கள் எல்லாம் பதவியை பூஜித்துக் கொண்டிருப்பதால் சுவாமியை கைவிட்டு விட்டார்கள்.*

**★சிந்தியா! ஒரு சுவையான புதுக்கவிதை சொல்லுங்கள்?**

என்.எம். ரிஸானா, பேருவளை.

*"களவு போனதை*
*சொல்லியழ*
*காந்தியிடம் போனேன்;*
*கைத்தடியைக் காணவில்லையென்று*
*காவல் நிலையம்*
*போய்விட்டாராம்."*
*(எழுதியவர் பெயர் மறந்து போச்...!)*

**★நாவன்மைக்கும், நாவின் பலத்துக்கும் இடையில் தொடர்பு இருக்கிறதா?**

ஜெ. பிரான்சிஸ், புத்தளம்.

*இல்லை ஐயா இல்லை. எங்கே, எப்படி நாவைப் பயன்படுத்துவது என்று இடம்-பொருள்-ஏவல் அறிந்திருந்தால் போதும். நீரும் நாவன்மை பெற்றுவிடலாம்.*

**★சிந்தியா! நெஞ்சைத் தொட்டுச் சொல்லும், விடுதலைப் புலிகள் இல்லையானால் இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு கிட்டுமா?**

எம்.ஜெயசேகரன், வவுனியா.

*நெஞ்சை தொட்டாச்..! இனி சொல்கிறேன் கேளும்: பலமுள்ளவன் பேச்சுக்குத்தான் மரியாதை என்பதுதான் தற்கால அனுபவம்! எத்தனை தமிழ் கட்சிகள் இருந்தும், அவை நீள நீளமாக அறிக்கை விட்டும் என்னாச்சு? ஆயுதத்தை கைவிடுமாறு புலிகளை கோருவதைவிட, ஆயுதத்தை கைவிட்டாலும் மதிப்பிருக்கும், கருத்துக்களுக்கு கவனிப்பிருக்கும் என்று நிரூபிக்க வேண்டியது அரசின் பொறுப்பு. அப்படி நிரூபித்தால் ஜெயசேகரனுக்கு இப்படி கேட்கத் தோன்றியிருக்குமா?*

**★கருணாநிதியும் மூப்பனாரும், நரசிம்ம ராவ் பிரதமராகும் வாய்ப்புக் கிடைத்தால் ஆதரவுக்கரம் நீட்டுவார்களா?**

கா. ராமநாதன், கொழும்பு-6.

*ஆட்சியைக் கலைத்து தம்மை வீட்டுக்கு அனுப்பிய இந்திரா காந்தியை "நேருவின் மகளே வருக: நிலையான ஆட்சி தருக" என்று வரவேற்றவர் கருணாநிதி. நாளை நரசிம்மராவ் விடயத்திலும், 'நடந்ததை மறப்போம். நல்லாட்சி தர உழைப்போம்' என்று நரசிம்மராவை ஆதரித்தால், தயவு செய்து நெல்முனையளவுகூட ஆச்சரியப் படவேண்டாம்!*

**★சந்தனக் கடத்தல் வீரப்பன் சுகன்யாவைப் பற்றிச் சொன்னது உண்மைதானா?**

ஜெ.ஜமால்டீன், திருமலை.

*ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கேட்டு வழக்குப் போடப்போவதாக மிரட்டி இருக்கிறார் சுகன்யா! நமக்கேன் வம்பு? வாயைக் கிளறாதீர்!*

**★என் காதலியை வசப்படுத்த ஒரு ஐடியா சொல்லுங்களேன்?**

பா. யோகன், செங்கலடி.

*வசப்படுத்தவே தெரியவில்லை, பின்னர் எப்படி காதலி கிடைத்தாள்? கதையாவிடுகிறீர் கதை?*

**★இன்றைய கவிஞர்களில் தமிழோடு விளையாடும் கவிஞர் யார்?**

எம். சிவரஞ்சனி, நாவலப்பிட்டி.

*எல்லோருமே புரியாத சொற்களால் தமிழுக்கு கிச்சு கிச்சு மூட்டுகிறார்கள். கூச்சத்தால் தமிழ் நெளிந்து கொண்டிருக்கிறது.*

**★ஜெயசூரியா மீண்டும் சாதனை படைப்பாரா?**

எல். தோமஸ், பதுளை.

*அடித்து ருசி கண்ட துடிப்பு, வாய்ப்புக் கிடைத்தால் விடவா போகிறது? எப்படியான பந்தைக் கண்டாலும் மிரளாத இளம் வீரர் அல்லவா?*

**★மனச்சாட்சி இல்லாத மனிதர்கள் எப்படிப் பட்டவர்கள்?**

வி.காயத்திரி, தெகிவளை.

*நடமாடும் பிணம்.*

**★எதிர்பார்ப்புக்களே இல்லாமல் வாழ்ந்தால் நல்லதுதானே?**

சி. தேவேந்திரன், கண்டி.

*மரத்துப்போவீர்கள் தேவேந்திரன்! எதிர்பார்ப்புக்கள்தான் சுவாரசியம். சுறு சுறுப்புக்கு மாத்திரை. முன்னேற்றத்துக்கு படிக்கட்டுக்கள். ஆகவே, எதிர்பாருங்கள், ஆனால் நியாயமாக எதிர்பாருங்கள்.*

**★சிலர் எதைக் கேட்டாலும் இல்லை, இல்லை என்கிறார்களே, அது ஏன் சிந்தியா?**

திருமதி பத்மாவதி விக்னேஷ்வரன், வெல்லம்பிட்டிய.

*தொல்லை இல்லாத பதில் என்று நினைக்கிறார்களாக்கும்.*

**★கலைஞர் கருணாநிதி முதல்வரானால் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் குரல் கொடுப்பாரா?**

மா. காசிநாதன், நீர்கொழும்பு.

*கொடுப்பார். முன்பு போல சுருதி ஏற்றம் இருக்காது.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 148இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எம். ஜமால்டீன், கிராண்ட்பாஸ்.
2. எஸ். சுரேஸ்குமார், திருகோணமலை.
3. திருமதி. பஹ்மியா ரம்ஸி, மடுல்கெல.
4. செல்வி. ஜனனி புஷ்பநாதன், இரத்மலானை.
5. பி. ராஜேந்திரன், நீர்கொழும்பு.
6. எம். சுஹைப், களுத்துறை.
7. செல்வி. நிருபா செல்வநாயகம், வெலிமடை.
8. திருமதி. மின்னா ரஷாப், ஒட்டமாவடி-01.
9. திருமதி, ஜெ. ராஜரட்ணம், ஹட்டன்.
10. எஸ். மலர்வேந்தன், வவுனியா.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 30

## கழுகரசன் ஜடாயுவின் கடும் துயரம்

இராமகாதையில் மனிதர்களுடன் விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களும் சரிசமமாக உலாவருவதை அவதானிக்க முடிகிறது. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகக் கணிக்கப்படும் வால்மீகி இராமாயணத்தில் மனிதர்களுடன் தேவர்களும் அடிக்கடி வந்து உறவாடிச் செல்வதைப் பார்க்கிறோம். மானிடர்களைத் தவிர கொடிய அரக்கர்களும் பவனிவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மிருகங்களும் பேசுமா? பறவைகளும் மனிதர்களுடன் வந்து உரையாடுமா? என்பன போன்ற வினாக்கள் எழலாம். இதற்குரிய விடைகளை ஆராய்ந்து கொண்டிருப்பதற்கு இது தருணமல்ல; இருப்பினும் குறிப்பாக சிலவற்றை தொட்டுக்காட்ட முடியும்.

மிருகங்களையும் பறவைகளையும் பிடித்து அவற்றிற்கு பலதரப்பட்ட பயிற்சிகளையும் கொடுத்து பயிற்சியாளர்கள், வார்த்தைகளாலும் சைகைகளாலும் கட்டளைகளைப் பிறப்பித்து அதன்படி காரியங்களைச் செய்விக்க முடிவதை நாம் காண்கின்றோம். 'சேர்க்கஸ்' விளையாட்டுக்களில் மிருகங்களும் பறவைகளும் பல சாகசங்களைச் செய்வதைப் பார்த்து வியப்படைகிறோம். ஐயறிவுள்ள ஜந்துக்கள் சிந்திக்க முடியாவிட்டாலும் பயிற்சியாளர்களின்



கட்டளைகளை நிறைவேற்றுகின்றன. இதிலிருந்தே மனிதர்களுடன் இணைந்து செயற்படும் தகுதி ஏனைய உயிரினங்களுக்கும் உண்டென்பது நிரூபணமாகிறது. ஆகவே இராமகாதையில் உலாவரும் பிராணிகள் மனிதர்களுடன் பேசிப் பழகுவதை வெறும் கற்பனை என்று ஒதுக்கிவிட முடியாது.

மிருகங்களையோ பறவைகளையோ அவதானித்து, அவற்றின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து அறிவோர், அவை தங்களுக்குள் ஏதோ ஒரு வகையில் தொடர்பாடுவதை கண்டறிந்துள்ளார்கள். ஒவ்வோர் இனமும் அதற்குரிய தொடர்பாடும் முறைகளைக் கையாண்டு வருகின்றன. இன்றுள்ளவர்களை விட அன்று வாழ்ந்த மக்கள் அறிவாற்றலில் மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பதை இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணங்கள் வாயிலாக நாம் கண்டறியக் கூடியதாக இருக்கின்றது. எனவே பிராணி

## இராஜகுமாரன்

களும் மனிதர்களும் உரையாடி-கருத்துப் பரிமாறிக் கொள்வது சாத்தியமா இல்லையா? என்ற சர்ச்சையை விட்டு, இராம சரிதத்தின் மேன்மையை அனுசரித்து கதையைத் தொடர்கிறோம்.

### ஜடாயுவின் துயரம்

கழுகரசனான ஜடாயு, தசரத மாமன்னரின் மறைவு பற்றி, அவர்தம் குமாரர்களிடம் கேட்டறிந்ததும் மூர்ச்சித்துச் சாய்கிறார். தங்கள் தந்தையிடம் இத்தகைய பேரன்பு கொண்ட ஒரு பறவை இருக்கிறதே என்பதை உணர்ந்த இராமனும் இலக்குவனும் வியப்படைந்ததுடன், விசனத்திலும் மூழ்கினர். இருவரும் கழுகரசனை அணைத்தவாறு தங்கள் தந்தையையும் நினைவு கூர்ந்து அழுதனர். அவர்களுடைய கண்களில் இருந்து பெருகிய கண்ணீர் ஜடாயுவின் உடலை நனைத்தது. இதனால் மூர்ச்சை தெளிந்து ஜடாயு விழித்தெழுந்தார்.

இளமைக் காலத்தில் தசரதனும் ஜடாயுவும் மிகவும் நெருக்கமுடைய நண்பர்களாகப் பழகியிருந்தனர். காலத்தால் இருவரும் பிரிக்கப்பட்டபோதிலும் இருவருக்குமிடையில் இருந்த அன்பு மாறவில்லை. இதன்காரணமாகவே தான், தன்னுடைய நண்பர் இறந்து விட்ட செய்தி கேட்டதும் துயரம் மேலீட்டால் ஜடாயு துடி-துடித்து அழலானார். தன் நண்பர் மறைந்த பின்பும் தான் மட்டும் ஏன் உயிருடன் இருக்க வேண்டும் என்று பிரலாபித்து விம்மி விம்மி அழுதார்.

துயரம் ஓரளவு ஆறிய பின்னர் தசரத குமாரர்களைப் பார்த்து ஜடாயு, "அயோத்தியில் இருந்து ஆட்சி புரிய வேண்டியவர்களாகிய நீங்கள் மரவுரி தரித்து கானகம் வந்திருக்கிறீர்களே....காரணம் என்ன?" என்று வினவினார். இராமர் தனது தந்தை பிறப்பித்த கட்டளையைப் பற்றி விபரமாகக் கூறினார். இவற்றையெல்லாம் கேட்டறிந்த ஜடாயு, "உங்களுடைய வன வாசத்தில் பத்தாண்டுகளைக் கடத்தி விட்டீர்கள். எஞ்சியுள்ள சொற்பகாலத்தை எக்குறையுமின்றி வாழ்ந்து முடிப்பதற்கு நானும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்." என்றார். இவ்வாறு கூறிய ஜடாயு, இராமரும் இலக்குவனும் சீதையும் தங்குவதற்கு ஏற்ற இடமாக அகத்திய மாமுனிவர் குறிப்பிட்ட இடத்தை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார்கள். மூவரும் தரையில் நடந்துசெல்ல, மேலே, வழி காட்டியாக ஜடாயு பறந்து கொண்டிருந்தார்.

அவர்கள் சென்ற பாதை அனைத்தும் இயற்கை அன்னை எழிலூட்டி சிறப்பித்திருந்தாள். சலசலவென்று ஓசை எழுப்பிய வண்ணம் நீரோடைகள், வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகள், மலர்களின் தேனைச் சுவைத்து உண்டு-போதை ஏறி வட்டமிடும் வண்டுகளின் ரீங்கார ஓசை, இனிமையான கானம் இசைக்கும் எழில் பறவைக் கூட்டங்கள், துள்ளி ஓடித் திரியும் மான் கூட்டங்கள்; இவையனைத்தும் கண் கொள்ளாக் காட்சியாக அமைந்தன. இத்தகைய எழிற்காட்சிகளை இரசித்த வண்ணம் மூவரும் பஞ்சவடியை அடைந்தனர். கோதாவரி நதிக்கரையில் இருந்து சற்றுத் தூரத்தில் ஓர் அழகிய இடத்தை அடைந்ததும் ஜடாயு தரையில் இறங்கினார். "அகத்திய மாமுனிவர் குறிப்பிட்ட பஞ்சவடி இதுதான். இந்த இடத்திலேயே நீங்கள் பர்ணசாலையை அமைத்து அமைதியாக வாழலாம். நான் அடிக்கடி இங்கு வருவேன். உங்களை எந்தத் துன்பமும் அணுகாமல் நான் பாதுகாப்பேன்." என்று கூறிவிட்டு ஜடாயு தன் இருப்பிடம் நோக்கித் திரும்பினார்.

இலக்குவன் அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். பர்ணசாலை அமைப்பதற்கேற்ற மரம், கொடி, ஓலை முதலியவற்றை சற்று நேரத்துக்கெல்லாம் சேகரித்துக் கொண்டார். இராமரோ சீதையோ எந்த விதமான உதவியும் செய்வதற்கு இலக்குவன் அனுமதிக்கவேயில்லை. தானாகவே முழுப் பணியையும் புரிந்து, அன்று பொழுது சாய்வதற்குள் அழகிய பர்ணசாலையை அமைத்து விட்டார். இலக்குவனின் இத்தகைய திறமையைப் பார்த்து இராமரும் சீதையும் வியப்படைந்தனர். ஓர் இராசகுமாரனால் இத்தகைய ஒரு பர்ணசாலையை அமைப்பது சாத்தியமா? என்று நாம் கூட ஐயுறலாம்.

ஆனால் அக்கால அரசகுமாரர்கள் இளமையில் மேற்கொள்ளும் குருகுல வாழ்க்கையில் சகல விதமான கலைகளையும் கற்றுணர வேண்டிய கட்டாயம் இருந்தது. ஏனெனில், குருகுல வாழ்க்கையும் ஓரளவு வனவாசத்துக்கு ஒப்பானதேயாகும்.

### துயரப்புயலின் தொடக்கம்

இயற்கை எழில் கொஞ்சும் ஏகாந்த வனத்தில் இராம இலக்குவனுடன் சீதையும் புனிதமான தவவாழ்க்கையை மேற்கொண்டு ஆனந்தமாகப் பொழுதைக் களித்தனர்.

***

வாழ்க்கை-இருளும் ஒளியும், துன்பமும் இன்பமும், சோகமும் மகிழ்ச்சியும் சகடம் போல் மாறி மாறி வரும் இயல்புடையது. அயோத்தியில் பன்னிரண்டாண்டுகள் இனிதாக இல்லறம் மேற்கொண்டிருந்த இராமரும் சீதையும், திடீரென ஏற்பட்ட காலச்சுழற்சியால் அரண்மனை சுகபோகங்களை ஒரே நாளில் துறந்தெறிந்து விட்டு துறவறம் பூண்டு கானகம் புகுந்தனர். வாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தினால் இராமரோ சீதையோ கலக்கமடையவில்லை. இலக்குவனோ இராமரைவிட மற்றோர்வகையில் கடும் துறவினை ஏற்றிருந்தான். இராமர் தன் அன்பு மனைவி சீதையைத் தன்னுடன் கானகத்துக்கே அழைத்து வந்து விட்டார். ஆனால் இலக்குவன் தனது இளம் மனைவியான ஊர்மிளையை அயோத்தியில் விட்டு விட்டு தனியனாகவே அண்ணனைப் பின் தொடர்ந்தான். ஆகவே இராமரை விட இலக்குவன் தவ வாழ்க்கையில் ஒருபடி மேல் நிற்கிறான் என்றே கூறலாம்.

எப்படியோ இருபத்திரண்டு ஆண்டுகள் ஆனந்தமாகக் கழிந்து விட்டன. இடையில் தந்தையை இழந்த சோகப்புயல் வீசியது. அதுவும் மறைந்த பின்னர் இம் மூவருடைய வாழ்விலும் சோகரசம் புகவேண்டிய காலம்-பஞ்சவடியை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

### மார்கழியின் மேன்மை

மாதங்களில் மகோன்னதமானதாகக் கருதப்படும் மார்கழி மாதம் வந்தது. கதிரவனின் பொற்கரங்கள் பூமியை ஆலிங்கனம் செய்தாலும் மனித உடல்களை குளிர் ஆரத்தழுவி நிற்கும் காலம். மார்கழி மாத அதிகாலைப் பொழுது மனங்களை மட்டற்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் புரட்டி எடுக்கும். புதுமையானதோர் உணர்வு பொங்கி எழும். நீர் நிறைந்து ததும்பும் பொய்கையில் மூழ்கி எழும்போது ஏற்படும் சுகம் தெய்வீக சுகம் என்றே சொல்லலாம்.

மணிவாசகப் பெருமானும் சூடிக் கொடுத்த நாச்சியார் ஆண்டாளும் மார்கழி மாத அதிகாலைப் பொழுது நீராடுவதை அழகு தமிழில் திருவெம்பாவையாகவும் திருப்பாவையாகவும் படைத்துள்ளனர். இவற்றைச் சுவைத்தாலே மார்கழியின் மாண்பினை அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய இனிய காலமான மார்கழியில் அதிகாலை- கதிரவனின் உதயத்தின் முன்பாகவே துயில் நீக்கி எழுந்த இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கோதாவரி நதியில் நீராடி., மலர்களைக் கொய்தும், ஓம குண்டத்துக்குரிய சமித்துக்களைச் சேகரித்தும் வந்து, காலை வேளைப் பூசையை முடித்தனர். இனிய பழவகைகளை உண்டு, பசும் பாலினைப் பருகியும் ஆனபின்பு, மென்மையான வெப்பம் படரும் நந்தவனத்தில் சீதையுடன் இராமரும் வந்து சேர்ந்தார். இலக்குவனோ மதிய உணவுக்குரிய ஆகாரத்துக்கு வேண்டியவற்றைத் தேடிப் புறப்பட்டு விட்டான்.

காதலருக்கு உவகை தரும் உன்னதமான இளங்காலைப் பொழுதில் தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கை எழிலைப் பருகியவர்களாக இராமரும் சீதையும் அமைதியாக அமர்ந்திருந்தனர். ஆனந்தமயமான அவர்களுடைய வாழ்க்கை காலமெனும் கொடியவனின் கண்களுக்குள் பொறாமைத் தீயை எரிய விட்டு விட்டது. தன்னுடைய பொல்லாப் பொறாமை வலையை அவர்கள் மீது வீச ஆயத்தமாகிவிட்டான்.

இலங்கை வேந்தன் இராவணேசனின் தங்கை சூர்ப்பணகை பஞ்சவடி வந்து சேர்ந்தாள். அவளுடைய மற்றுமொரு சகோதரனான கரன் என்பவனுடைய ஆளுகைக்குட்பட்டது அப்பிரதேசம். அரக்கியான அவளுடைய கண்களுக்குள் இராமருடைய எழிலுருவம் புகுந்து அவளுடைய உள்ளத்தில் பெரும்காமப்புயலை உருவாக்கி விட்டது. எப்படியாவது இராமனை தன் காமப்பசிக்கு இரையாக்கி விடவேண்டும் என்று துடித்தாள்.

அலங்கோலமான அரக்க உருவில் அந்த ஆணழகனிடம் செல்வது தகாது என்பதனால், எண்ணியவுடன் எண்ணிய உருவை அடையும் சக்தி படைத்த சூர்ப்பணகை அழகிய மானிடப் பெண் உருவெடுத்து இராமரின் (அடுத்த இதழில் தொடரும்)

---

**இராமாயணப் போட்டி: 28**

**சரியானவிடை:- விராதன்**

1. கி. கிருபாகரன். தேத்தாவடி வீதி, ஆரையம்பதி-03.
2. செல்வி. A.W. சித்தி சலீலா. 377/1, ஏகொட உயன, மோதர, மொரட்டுவ.
3. K.K. முத்தையா. குசலை, பங்கதெனிய.
4. எம். ஜெயராம். அகரவத்தை, 1254 வட்டவளை.
5. எம். ஷபீக். 20, ஹட்டன் ஹவுஸ் றோட், ஹட்டன்.

**போட்டி இல. 30** கேள்வி:- இலக்குவனின் மனைவி பெயர் என்ன?

மே.18 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.30, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

# இதயம் வெடிக்கும் ஆபத்து!

## கலைஞர் நிலை கவலைக்கிடம்!

உடன்பிறப்பே! சிவாஜிராவ் என்ற ரஜினிகாந்த் ஜெயலலிதாவுக்கு வாக்களிக்கு மாறு வக்காலத்து வாங்கியிருக்கிறார்.

யார் இந்த ரஜினி? ஏன் இங்கே வந்தார்? நினைத்துப்பார்! நெஞ்சைத் தொட்டுப்பார்!

நடிக்க வந்தார். நாம் இடம் கொடுத்தோம்! அவர் கன்னடக்காரரா, மராட்டியரா, மலையாள இனத்தவரா என்றெல்லாம் நாம் பிரித்துப் பார்க்கவில்லை. வெறுத்துப் பேசவில்லை.

ஏன்? எதற்காக? அது நடிப்பென்பதால்! அவர் நடித்தது வெள்ளித் திரையில் என்பதால்!

ஆனால், இன்று, ஒரு விரலை சொடுக்கி ஏதேதோ பேசுகிறார். ஒரு விரலை உயர்த்தி அவர் பேசும்போது சிலர் கரகோசம் செய்கிறார்கள். அந்த கரகோசம் செய்யும் நண்பர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரஜினி ஒரு விரலை சொடுக்குவது ஸ்டைல் என்று நம்பினால், நாம் எல்லாம் முட்டாள்கள் என்று அர்த்தம். அது ஸ்டைல் அல்ல. இன்பத் தமிழகத்தை எச்சரிக்கை செய்கிறார். 'ஏ தமிழா! போடு வாக்கை' என்று மிரட்டிப் பார்க்கிறார்.

ரஜினிகாந்த் அவர்களே! நாம் இதய தெய்வம் அண்ணா வழி நடப்பவர்கள். மிரட்டல்களுக்கு அஞ்சுபவர்கள் அல்ல!

ஜெயலலிதாவுக்கு ரஜினி தேவைப் படுகிறார். எம்.ஜி.ஆர் படங்கள் இருந்த இடங்களில் எல்லாம் ரஜினி படங்களை மாட்டிவிட்டார்கள்.

எனது நாற்பது ஆண்டுகால நண்பர் எம்.ஜி.ஆர். நேற்று வந்த ஒரு நடிகர் முன்னால் புகழ் மங்கிப் போவதா? என் நெஞ்சில் புயலடிக்கிறது. பூகம்பம் வெடிக்கிறது!

அண்ணா, எம்.ஜி.ஆர் படங்களுக்குக் கூட இடமளிக்காத ஆட்சி நிலைக்கலாமா?

எம்.ஜி.ஆரை மறந்துவிட்டு, இதய தெய்வம் அண்ணாவை மறந்துவிட்டு, அண்ணாமலையின் பின்னால் செல்லும் ஆட்சியை தூக்கிவீசுங்கள்!

நேற்று ஒரு பத்திரிகையில் விளம்பரம் பார்த் தேன். ரஜினியின் படத்தைப் போட்டு வாக்குக் கேட்டிருக்கிறார்கள்.



தேடிப்பார்த்தேன். ஒரு மூலையில் கூட அண்ணா படம் இல்லை. ஏழைகளின் தெய்வம் எம்.ஜி.ஆர் படம் இல்லை. என் இதயம் வெடித்திருக்கும். நம் அண்ணா, சொன்னாரே, 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும் தம்பி' என்று. அதனை நினைத்துப் பார்த்தேன். இதயம் வெடிக்காமல் தப்பித்தேன்.

ஒரு நடிகையும், நடிகரும் தமிழகத்தை நாடக மேடையாக, திரைப்பட நகரா திருவிடத்தை மாற்ற அனுமதியாதீர்!

இவ்வாறு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி உடன்பிறப்புக்கு எழுதியுள்ள கடிதத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

# காதில பூ கந்தசாமி

## முத்து எங்கள் சொத்து

செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் நடிகர் ரஜினிக்கு புகழ்மாலை சூட்டினார். அவர் அங்கு உரையாற்றியதாவது.

உடன்பிறவாத சகோதரன் ரஜினி நமக்கு ஆதரவளிக்கிறார் என்றால் அது தமிழகமே ஆதரவளிப்பது மாதிரித்தான்.



கருணாநிதிக்கு பொறாமை. காட்டுக் கூச்சல் போடுகிறார். நாட்டுக்கு இது நல்லதல்ல.

ரஜினி ஒரு முத்து. அந்த முத்து எங்கள் சொத்து! அந்த முத்தை எடுத்து என் மார்பில் சூடிக்கொண்டேன். அடுத்து சூடப்போவது வெற்றி மாலைதான்!" என்றார் ஜெயலலிதா.

---

## முடிவளர்ந்த இரகசியம்

## ரஜினி நேற்று வெளியிட்டார்

ரஜினிகாந்த் முடியை தோள்வரை வளர்த்துக் கொண்டிருக்கிறார். முடி வளர்ந்த காரணத்தை ரஜினி எப்போது சொல்வார் என்பது இதுவரை சஸ்பென்ஸாக இருந்தது.

நேற்று நடந்த கூட்டத்தில் அந்த சஸ்பென்ஸை ரஜினியே உடைத்தார்.

ரஜினி தெரிவித்ததாவது,

"எனக்கு நிம்மதி தேவைப்பட்டது. இமயமலையில் ஒரு மாதம் தங்கியிருந்தேன். கண்களைத் திறந்தால் நிம்மதி குலைந்து விடுமோ என்று தூங்கிக்கொண்டே இருந்தேன். என் தலைமுடியை அடிக்கடி யாரோ தொட்டுக் கொண்டிருந்தார்கள். அளவாக வெட்டி விடுகிறார்கள் என்று நினைத்து சுகமாக தூங்கிக் கொண்டிருந்தேன்.

ஒரு மாதம் சென்ற பின்னர் கண்ணைத் திறந்து பார்த்தேன் முடி தோள்வரை வளர்ந்திருக்கிறது.

அப்போதுதான் ஒரு இரகசியம் தெரிந்தது.

(பேச்சை நிறுத்தி ஒரு நிமிடம் மௌனமாக இருக்கிறார். கூட்டத்தினர் கடும் எதிர்பார்ப்பில் தவிக்கிறார்கள்) அந்த இரகசியத்தை நான் இப்போ சொல்லப் போகிறேன்.

அவர்கள் என் முடியை வெட்டவில்லை. அவ்வப்போது சீப்புக்கொண்டு சீவி விட்டிருக்கிறார்கள். ஹா ஹாஹா.... இது எப்படியிருக்கு?! (கரகோசம் வானைப் பிளக்கிறது. ரஜினி வாழ்க. என்று கோஷம்)

ரஜினி முடி வளர்த்ததையடுத்து ரஜினி ரசிகர்கள் பலர் டோப் அணிந்து அவர் போலவே முடி வைத்துக் கொண்டனர். அதனால் டோப் விலை கிடு கிடுவென்று உயர்ந்துள்ளது.

இதேவேளை சலூன்களில் முடிவெட்டச் செல்வோர் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. நகரில் பல சலூன்கள் மூடப்பட்டு வருகின்றன. பல சலூன்கள் முடியை வேகமாக வளரச் செய்யும் தைலக் கடைகளாக மாறியுள்ளன.

---

## சுந்தரிகள் முன்னணி

### உதயம்



தமிழ்நாட்டில் மூன்றாவது அணியாக புதிய கட்சி உதயமாகியுள்ளது.

முன்னணி நடிகைகள் பலர் சேர்ந்து அக் கட்சியை உருவாக்கியுள்ளனர். 'சுந்தரிகள் முன்னணி' என்று அக் கட்சிக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் சில்க் சுமிதா தமது கட்சியின் கொள்கைகளை விளக்கினார்.

- ★ நாட்டில் துணிப் பஞ்சத்தை போக்கும் விதமாக ஆடைக்குறைப்புக்கு அரச அங்கீகாரம் வழங்கப் படும்.
- ★ இளம் தலைமுறையின் வாட்டத்தைப் போக்கும் வகையில் சினிமாக்களில் புதிய மாற்றங்கள் செய்யப்படும். உதாரணமாக, ஒரு படத்தில் குறைந்தது நாலு தடவையாவது கதாநாயகி குளிக்கும் வகையில் காட்சிகள் அமைக்கப்படும். கவர்ச்சி நடிகைகள் மற்றும் துணை நடிகைகளும் தனியாக குளித்துக் கொள்ளலாம். கதைப்படி குளிப்பது பொருந்தாது என்று கருதினால் மழையில் நனைத்தெடுக்கலாம்.
- ★ விளையாட்டு உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது. இளைய தலை முறையின் ஆரோக்கியம் கருதி விளையாட்டுத்துறை விரிவுபடுத்தப் படும். தொப்புளில் பம்பரம், தொப்புளில் டேபிள் டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களுக்கு ஆக்கமும், குறிப்பாக ஊக்கமும் கொடுக்கப் படும்.

என்று விளக்கினார் சில்க் சுமிதா. உச்ச கட்ட பிரசாரத்தில் ஈடுபட பம்பாய் நடிகைகள் வருவார்கள் என்ற முக்கிய தகவலையும் சில்க் சுமிதா வெளியிட்டார்

நடிகைகள் முன்னணியின் கவர்ச்சி அலையால் ஏனைய கட்சிகள் தடுமாறலாம் என்று நம்பப்படுகிறது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



படிப்பகம்


அருள் ஜீவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# மரணப் பயணம்




பிரிட்டனின் இராணுவ பலத்தையே ஆட்டவைத்துக் கொண்டிருக்கிறார்கள் அயர்லாந்து போராளிகள். பிரிட்டன் இராணுவ பலத்தோடு ஒப்பிட்டால், அயர்லாந்தை தனிநாடாக்கப் போராடும் ஐரிஸ் குடியரசு இராணுவத்தின் (I.R.A) பலம் கால் பங்குக்கூடத்தேறாது.

ஆனால், நடப்பது நேரடி மோதலல்ல.

திடீர் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள் மூலம் தனது எதிர்ப்பைக் காட்டுகிறார்கள் ஐரிஸ் போராளிகள். தற்கொலைத் தாக்குதலையும் தமது உத்தியாகக் கொண்டுள்ளார்கள்.

அப்பாவி மக்களை குறியாக வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் சர்வதேசக் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளன. எனினும் ஐரிஸ் குடியரசு இராணுவப் போராளிகள் (I.R.A) தமது உக்கிரத்தை குறைப்பதாகத் தெரியவில்லை. விளைவு மனித உயிர்கள் பகைமை உணர்வுகளுக்கு தீனியாகிக் கொண்டிருக்கின்றன.



அம்மன் ஜீவல்
AMMAN JEWELL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


படத்தில் இருப்பது அயர்லாந்து போராளிகளால் (I.R.A) குண்டு வெடிப்புக்கு உள்ளான பயணிகள் பஸ். பஸ்சுக்குள் மரணம் இருக்கிறது. தம்முடன் கூடவே அது பயணம் செய்கிறது என்பதை உணரமுடியாதவர்களாய், பயணிகள் அநியாயமாய் செத்துப் போனார்கள். அரசை மிரட்ட அப்பாவிகளை கொல்லுவது இதயமற்ற போர்த் தந்திரம்தான்!

# புலிவால்



புலியின் வாலைப்பிடித்தால் கையைவிடுவது ஆபத்தாகிவிடும். புலி திரும்பித் தாக்கும்.

அண்ணா மறைந்த பின்னர் அடுத்த தலைவர் யார் என்பதில் தி.மு.க.வுக்குள் போட்டி. நாவலர் நெடுஞ்செழியனுக்கும்- கருணாநிதிக்கும் இடையில் கயிறிழுப்பு. கருணாநிதி பக்கம் நின்றார் எம்.ஜி.ஆர். கருணாநிதி தலைவரானார். தமிழக முதல்வரானார்.

எம்.ஜி.ஆரின் செல்வாக்கு வளர்ந்தது. கருணாநிதி அச்சப்பட்டார். புலிவால் பிடித்த கதையானது. எம்.ஜி. ஆரை கட்சியை விட்டு நீக்கினார். புலிவாலை பிடித்துக் கொண்டிருந்தவர் கையைவிட புலி திருப்பி தாக்கியதுபோல, எம்.ஜி.ஆர் விசுவரூபமெடுத்தார். கலைஞர் ஆட்சி கவிழ்ந்தது. எம்.ஜி.ஆர் அசைக்க முடியாத சக்தியானார். 13 வருடம் கருணாநிதிக்கு பதவியில்லாத காலமானது.

இப்போது மீண்டும் அதே கதை. எப்படியாவது பதவிக்கு வந்தால் போதும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக ரஜினியை பிடித்துக் கொண்டிருக்கிறார் கருணாநிதி. அதன் மூலம் தனது தொண்டர்கள் மத்தியிலும் ரஜினிக்கு மரியாதை ஏற்படுத்திவிட்டார். நாளை ரஜினி முரண்பட்டால்...? கலைஞர் பிடித்த இரண்டாவது புலிவால் ரஜினியாகத்தான் இருக்கும்!

# குத்துக்கு மரியாதை



இந்தக் குத்துப் போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா? என்று எதிராளியைக் கேட்டும் ரகமான குத்துக்கள். அவர்தான் நிகெல் பென். நடுத்தர எடைப் பிரிவில் நான்கு முறை உலக சாம்பியன் பட்டத்தை தன் வசம் வைத்துக்கொண்டார். வல்லவனுக்கு வல்லவனாக இவரோடு மோதினார் துலனெ மாலிங்கா. 9 ரவுண்ட்வரை குத்துமழை பொழிந்தார் நிகெல் பென். 10வது ரவுண்டில் துலனெ மாலிங்காவின் அதிரடி குத்துக்களால் தோற்றுப் போனார் நிகெல் பென். அதனால் உலக சாம்பியன் பட்டம் பறிபோனது. எனினும் இன்று வரை நடுத்தர எடைப்பிரிவில் கவர்ச்சியான வீரராக திகழ்கிறார். இவருக்கு ரசிகர்களைவிட ரசிகைகள் தான் ஏராளம்.

நிகெல் பென்னுக்கு 32 வயது. பார்த்தால் அப்படியா தெரிகிறது? பயிற்சியால் உருக்கான உடல் கட்டாகவும், இளமையாகவும் இருப்பதன் இரகசியம் அதுதான்!

# பந்தும் பதமும்




பாகிஸ்தான் அணிக்கு கிடைத்துள்ள மற்றொரு நம்பிக்கை நட்சத்திரம் சக்லெய்ன் முஷ்ரக். சுழற் பந்து வீச்சாளர். ஓஃப் ஸ்பின்னர்.

சிங்கர் கிண்ணப் போட்டியில் சக்லெய் முஷ்ரக்கின் பந்து வீச்சில்தான் இலங்கையின் மூன்று நம்பிக்கை நட்சத்திரங்கள் விழுந்தன. அரவிந்த டி சில்வா, அர்ஜுன ரணதுங்க மற்றும் தர்மசேனா ஆகியோர் முஷ்ரக்கின் பந்துவீச்சில் சுருண்டனர்.

அதன் மூலமாக சிங்கர் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானின் வெற்றிக்குரிய பாதையைப் போட்டுக் கொடுத்தார் முஷ்ரக்.

ஜெயசூரியா மட்டும்தான் முஷ்ரக்கின் பந்து வீச்சுக்கு பதிலடி கொடுத்தார். அப்படியிருந்தும் முஷ்ரக் அசரவில்லை. தொடர்ந்து தன்னம்பிக்கையோடு பந்துகளை வீசி இலங்கையின் தோல்வியை உறுதி செய்தனர்.

சிங்கர் கிண்ணப் போட்டியில் மொத்தம் 7 ஓவர்கள் பந்து வீசி 46 ரன்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பாகிஸ்தான் கப்டன் அமீர் சொகைல் முஷ்ரக்கை தோளில் தூக்கிவைத்துப் புகழ்கிறார். "எதிர்காலத்தில் மேலும் துடிப்பான சாதனைகளை தரப்போகிறார் முஷ்ரக்" என்கிறார் அமீர் சொகைல்.

இந்த இளம் சுழற்பந்து வீச்சாளரிடம் பாகிஸ்தான் அணி நிறைய எதிர்பார்க்கிறது. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றக்கூடிய அதிகபட்ச திறமையும் இவரது பந்துவீச்சில் புதைந்து கிடக்கிறது.

முஷ்ரக்கின் இளம் விரல்களுக்கு பந்தை எப்படி பதப்படுத்தி, தன் வசப்படுத்தி கையாள்வது என்ற கலை அத்துப்படி..

சக்லெய்ன் முஷ்ரக் பாகிஸ்தான் அணிக்கு கிடைத்துள்ள புதையல்.

# ஒன்றே குலம்



சூழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. மனிதருக்குள் பேதங்கள், பிளவுகள், பிடுங்குப்பாடுகள் அனைத்தும் தாமாகத் தோன்றுபவை அல்ல. நாமாகத் தோற்றுவிப்பவை.

படத்தில் உள்ள குழந்தைகளைப் பாருங்கள். நாயுடன் கூட பேதம் பார்க்கவில்லை. நாம் வேறு இவை வேறு என்று பிரிவு காணும் வயதுமல்ல. அதனால்தான் சந்தோசமாக இருக்கிறார்கள். வெள்ளைத் தாள்கள் போன்ற இந்த உள்ளங்களிலும் கெட்ட சூழல்தான் கறையைப் பூசுகிறது. பகையை விதைக்கிறது.

பிறக்கும் போது இல்லாத பேதங்களை நம் குழந்தைகள் வளரும் போது அவர்களிடம் திணிக்காமலிருப்போம். நாளைய சந்ததியாவது கெட்ட பகை வளர்க்கும் சாதி, மத, இன மோதல் இன்றி செழித்திருக்கட்டும்.




இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை ... 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பத்திரிகாலயத்தாரால் 29, வெல்லவா, ... உள்ள சமனல அச்சகத்தில் மே மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.